www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JuDE
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஏப்.27–மே.03,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 202

## பணியவைக்கும் முஸ்தீபு

## பிரபாவின் அசையாத நம்பிக்கை

## நகர்வுகளும் – அதிர்வுகளும்



எக்ஸ்ரே ரிப்போர்ட்

அம்மணியின் ஆராய்ச்சி

## மனைவிகள் போர்க்கொடி



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## வேடிக்கையான சிகிச்சை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

அரசியல் தீர்வு என்பது
இன்னமும்
கண்ணுக்கெட்டாத தூரத்தில்தான்
இருந்து கொண்டிருக்கிறது!

ஆயினும்-அவ்வப்போது
ஆரவாரமான அறிவிப்புக்கள்
கால வரையறைகள்
செவிகளில் விழுகின்றன!

இதற்கிடையே-
கௌரவ நீதியமைச்சர் அவர்கள்
கூறியுள்ள சில கருத்துக்கள்
கவலை தருபவையாக உள்ளன!

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில்
காணப்பட்ட இணக்கங்கள்
தொடர்பாக அவர் விளக்கியுள்ளார்.

காணப்பட்ட இணக்கங்கள்
பலவற்றுக்கும்
இனப்பிரச்சனைத் தீர்வுக்கும்
இடையே தொடர்புகள் இல்லை!

பிராந்திய சபைகளுக்கான
அதிகாரங்கள் தொடர்பாக
முடிவு எதுவும் காணப்படவில்லை?

வடக்கு-கிழக்கு மாகாண
இணைப்பு விடயத்திலும்
இறுதி முடிவு எட்டப்படவில்லை!

சுருக்கமாகச் சொன்னால்-
பாராளுமன்றத் தெரிவுக்குழு
இனப்பிரச்சனைத் தீர்வுக்கான திசையில்
நத்தை வேகத்தில்தான் நகர்ந்திருக்கிறது!

அந்த நத்தை வேகத்தின் பயனாக
ஒரு விடயத்தில் உடன்பாடு
காணப்பட்டுவிட்டது.

அது என்ன?
"பிராந்திய சபைகளை
கலைக்கும் அதிகாரம்
மத்திய அரசின் கையில் இருக்கும்"

இது ஒரு
வேடிக்கையான சிகிச்சை முறை!

அபாயக்கட்டத்தில்
இருக்கிறார் நோயாளி!

உயிர் பிழைக்க வைத்தால்
எழுந்து போய்விடுவாரோ
எட்டி உதைத்துவிடுவாரோ
என்று வைத்தியர்களுக்கு
பலத்த சந்தேகம்!

நோயாளி பிழைத்த பின்னர்
முரண்டு பிடித்தால்
என்ன செய்யலாம்?
எப்படி உயிரை எடுக்கலாம்
என்பது பற்றித்தான்
முதலில் வழி கண்டுபிடித்திருக்கிறார்கள்!

நோயாளி மீதான
சந்தேகத்துடன்
சிந்திக்கப்படும் சிகிச்சை முறை
அப்படித்தான் இருக்க முடியும்!

நோயாளிகளின்
தலைக்கு மேலே
கூரிய கத்தியை
கட்டித் தொங்கவிட்ட பின்னர்தான்
சிகிச்சையை ஆரம்பிக்கலாம்
என்பதில் மட்டும்
வைத்தியர்கள்
உடன்பாடு கண்டுள்ளனர்!

அரசியல் தீர்வென்ன
அபாயமான டைனோசரா?
முதலில் அழிக்க
மருந்து கண்டுபிடித்துவிட்டு
பின்னர் உயிர்கொடுப்பதற்கு?

காலம் காலமாக
ஏமாற்றப்பட்ட வடுக்களுடன்
இருக்கின்றனர் தமிழ் பேசும் மக்கள்!

அவர்களின்
சந்தேகங்களைப் போக்குவதும்
நம்பிக்கைகளை ஏற்படுத்துவதும்
பெரும்பான்மை இனக் கட்சிகளின்
கடமை என்பதை மறக்கலாமா?

மாறாக- தமிழ் பேசும் மக்களிடம்
சந்தேகம் கொள்வதுபோன்ற
அணுகுமுறையுடன்
தீர்வுக்கான திசை வழி
தெரிவு செய்யப்படுமானால்
முடிவு திருப்தியாக இருக்காது!

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்

### தேவனிடத்தில் அன்பு கூருங்கள்

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சனை என்பது இருக்கிறது. இப்பிரச்சனைகள் துன்பம் தருகின்றன. நாம் விரும்பும் விஷயம் நடைபெறாதபொழுது பிரச்சனை எழுகிறது. ஆனால், இறைவன் எந்நேரமும் நமக்குத் துணையாய் அருகிலேயே, உள்ளத்திலேயே இருக்கிறான்.

சங்கீதம் 46:1 கூறுவதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

"தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமாவார்."

எனவே, என்ன துன்பம் வந்தாலும் நமக்குள் இறைவன் துணை நிற்கிறார் என்று உணர்ந்து செயற்படவேண்டும். தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டு அன்புகூர வேண்டும். எனவேதான்-

"தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"- (ரோமர் 8:28)

ஆம். ஏது நடந்தாலும் எல்லாம் நன்மைக்கே என்ற எண்ணந்தேவை. அதுவே, நம்மை நலமாய், வளமாய் வாழவைக்கும்.

ஏ.பி.வி.கோமஸ்.



### ஸக்காத் கொடுப்பதில் அவசரங்காட்டுங்கள்

ஹுமீதி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: உன்மீது ஸக்காத் வாஜிபான பின்னரும் அதனை நீ பிரித்தெடுத்துக் கொடுக்கவில்லையானால் அந்த ஹராமான பொருள் உன்னுடைய ஹலாலான பொருளையும் அழித்து விடும். அதாவது ஸக்காத் பொருளை தடுத்து வைப்பது ஹராமாகும். அதனால் மீதமுள்ள பொருள் ஹலால் என்றாலும் அது அழித்து விடும்.

இமாம் அஹ்மது இன்னு ஹம்பல் (ரஹ்) அவர்களால் எடுத்துரைக்கப்படுவதாவது: எம்மனிதன் ஸக்காத் கொடுக்கக் கடமையானவனாய் இருந்து (அதாவது ஐம்பத்தியிரண்டரைத் தோலா வெள்ளியோ அல்லது அதன் விலை மதிப்புள்ள வேறு ஏதாவது பொருட்களோ அவனுடைய தேவைக்கும் மேல்மிச்சமாக அவனிடம் மீதமிருக்கும் நிலையில்) அவன் தன்னை ஏழ்மையானவன் என்று வெளிப்படுத்தி யாரிடமிருந்தாவது ஸக்காத் பொருளைப் பெறுவானாகில், அந்தப் பொருள் முன்பிருந்தே அவனிடமிருந்த அசலான பொருளையும் அழித்துவிடும்.

ஆதாரம்: மிஷ்காத்.

எம்.என்.எம்.அனஸ்-அக்குறணை.

## கவிதைப் போட்டி இல.199

### பரிசுக்குரிய கவிதை

#### தேடல்

பிறப்பிடத்தை போர் சூழ
வசிப்பிடத்தை நீர் சூழ
நிம்மதியைத் தொலைத்துவிட்டு
நடக்கின்றோம் நிலம் தேடி!

செல்வி நிஹாறா ஏ.முத்தலிப்-
ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம்.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:



#### பள்ளம்

வீடுகளை சுமந்துகொண்டு
வீதியில் விழுந்தோம்-!
வீதியெங்கும் வெள்ளம்-
வாழ்வுப் பாதையெங்கும்
புதிது புதிதாய்-
பள்ளம் பள்ளம் பள்ளம்!!!

எஸ்.பிரபா-பதுளை.

#### அகதி...!

வீடுகளில்
'சென்ரிப் பொயின்ட்';
வீதிகளில்
வீட்டுக்காரர்கள்-!

ந.ரதீஸ்வரன்- பிரதான வீதி, தம்பிலுவில்-02.

#### தலை விதி

தாயகத்து தரைப் போரில்
உயிர் பிழைத்து ஓடிவந்த
தமிழ் பேசும் அகதிகள் நாம்!
வேரறுந்து போனவாழ்வில்
விடிவொன்றைத் தேடுகிறோம்!
சொத்து இல்லை சொந்தம் இல்லை;
சொல்லி அழ யாரும் இல்லை.
தமிழரென்று பிறந்துவிட்டால்
தலை எழுத்து இப்படி ஏன்?!

ஏ.எம்.அருள்ராஜா- உவர்மலை, திருகோணமலை.

#### அவல நிலை!

தாமதிக்க நேரமில்லை;
தங்க ஒரு இடமுமில்லை;
திக்குதிசை தெரியவில்லை;
கையில் சுமை தாங்கவில்லை!

செவ்வந்தி நாகராஜா- நாவற்குழி.

## கவிதைப் போட்டி இல.202



#### வேடிக்கை?

கலைந்தது கனவுகள்;
சிதைந்தது உறவுகள்;
உடைந்தது வீடுகள்;
இனியென்ன வேடிக்கை?
ஓடுவோம் வாருங்கள்!

கே.அன்ரனி- உவர்மலை,திருகோணமலை.

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 03.05.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.202
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

#### ஏன்?

மாடென்றும் மனையென்றும்
மக்களுக்குச் சொத்தென்றும்
ஓடி ஓடி உழைத்துச் சேர்த்த இனம்,
காடென்றும் மேடென்றும்
கஞ்சிக்கும் வழியின்றி
நாடோடிக் கும்பல் போல்
நடுத்தெருவில் நிற்பதென்ன?

சி.மு.சுந்தரேசன்- அரசினர் வைத்தியசாலை,
மஸ்கெலியா.

#### அங்கேயும்...

ஆழி கடந்தென்ன,
ஆகாயம் கடந்தென்ன,
அகதி என்ற பெயருடனே
பங்கீட்டு அட்டைக்கு
ஐந்து லீட்டர் மண்ணெண்ணெய்
அங்கேயும் எனக்கிருக்கும்!

பா.எல்றோய்-இறம்பைக்குளம்,
வவுனியா.

#### அலைகின்ற ஜீவன்கள்!

தவமிருந்து "பாஸ்" எடுத்து,
தட்டு முட்டுச்சாமான்
பெட்டி படுக்கையுடன்
பல நாள் பயணம்;
பல ஜீவன் அலைகிறது
போருமோ நீள்கிறது
வேதனையும் மக்களுக்கே!


திருமதி நேசமணி சிவபாதம்-
இறம்பைக்குளம், வவுனியா.

#### இறைவன் எங்கே?

உடுப்பு எங்கே?
அடுப்பு எங்கே?
உணவு எங்கே?
உறவு எங்கே?
தடையும் எங்கே?
விடையும் எங்கே?
விடையைக் கூற இறைவன் எங்கே..???

ஸ்ரீசக்தியவாணி-
வின்சென்ற் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு.

## வாசக(ர்) சாலை



முரசில் 'அப்பா இருக்கிறாளா?' என்ற செய்தியில் பெண்ணாக மாறிய தந்தையை நினைத்துச் சிரித்தோம். செய்தியைப் படித்த கையோடு இலங்கையில் பெண்ணாக நடித்து கோடீஸ்வரனான ஆணின் செய்தியைத் தினசரிகளில் கண்டோம். முரசில் முன்னர் வெளியான அதிசயச் செய்திகள் பல தற்போது இங்கும் நடக்கத் தொடங்கியுள்ளனவே!

கே. கனகராஜன், வத்தளை.

### நம்பலாமா நாங்கள்?

அன்புள்ள ஆசிரியருக்கு,

ஒரே நாளில் நம் நாட்டின் தேசியக் கட்சிகள் மனம்திறந்து- பரந்த மனதுடன் சிந்திக்கத் தொடங்கிவிட்டன- நம்புங்கள் என்பதுபோல செய்திகள் வந்தன. 'முரசு' தான் உண்மை சொன்னது. அதற்காக நன்றி.

எஸ். மிகேல், மட்டக்களப்பு.

பிரிட்டனில் இருந்து ஒருத்தர் வந்தாராம். பூனையும் எலியுமாக இருந்த பொ.ஐ.முவும், ஐ.தே.கவும் இனப் பிரச்சனையைத் தீர்க்க சபதம் செய்துவிட்டனவாம். ஹி.ஹி.ஹி.

எம்.ஏ. அமிஜுதீன், புத்தளம்.

பூலான்தேவி பிரமிக்கச் செய்கிறாள். மீண்டும் துன்பச் சூழலில் சிக்கிவிடுவாளோ என்றுதான் மனதுக்குள் நெருடலாக இருக்கிறது. 'காயத்ரி'யும் சூப்பர்.

ஜெ. ஸ்ரீனிவாசன், நீர்கொழும்பு.

### செல்வா விஜயம்

'காதிலை பூ கந்தசாமி'யாரின் செல்வா விஜயம் சிலருக்குப் பிடித்திருக்காது. எமக்கு மிகவும் பிடித்தது. செல்வா இரண்டாவது தடவையும் இறந்துபோனதாக முடித்ததுதான் சிறப்பு. செல்வாவின் பெயரில் அரசியல் வியாபாரம் செய்பவர்களுக்கு செம அடி.

வி. நவராஜ், கொழும்பு-05.

தந்தை செல்வநாயகத்தின் கொள்கை சமஷ்டி என்று சொல்லி காதிலை பூ சுத்தும் ஆட்கள் மத்தியில் உண்மையை நகைச்சுவையாக சொன்னார் கந்தசாமியார். அது காதிலே பூ அல்ல; காதிலே பூ சுத்துவது செல்வநாயகம் அவர்கள் பெயரால் எம்மை ஏமாற்றும் அரசியல்வாதிகள்தான்.

சி. அல்போன்ஸ், வவுனியா.

என் பிரிய முரசே!

பூலான் புதுமையுடன் புறப்பட்டுக் கொண்டேயிருக்கிறாள். பிரபஞ்சனது சுமதியோ பெண்மை வாழவேண்டுமென வாதாடத்தயாராகிக் கொண்டே வருகிறாள். சுஜாதாவின் காயத்ரியோ மென்மையான உள்ள உணர்வுகளை எடுத்துரைத்துக் கொண்டே செல்கிறாள். மொத்தத்தில் மூன்று தொடர்களும் எனை வெகுவாகக் கவர்ந்துள்ளன. நீ தந்த தொடர்களும் நல்லவை. தருகின்றவையும் நல்லவை. இனி தரப்போகின்றவையும் நல்லவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

செல்வி. ஜெயா முருகுப்பிள்ளை, குருக்கள்மடம்.

□□

காதிலை பூ கந்தசாமியின் பேட்டி மிகவும் சூப்பர். அதுமட்டுமன்றி பூலான் தேவியின் தொடர் மிக மிகப் பிரமாதம். உண்மையை உண்மையென உடனுக்குடன் எடுத்துக் காட்டும் உன்னை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

ஆரீப்.ஏ. மஜீட், நிந்தவூர்-14.

□□

அன்பின் முரசுக்கு!

இன்று பெண்களின் உணர்ச்சிகள் தோன்றா வெளிப்பாடாகவே தெரிகின்றன. பெண் மணவாழ்க்கையில் தன் உணர்ச்சிகளை கனவாகக் காண்கிறாள். அது நனவானால் இன்பம், இல்லையாயின் துன்பம், வாழ்க்கை முழுவதும். சுமதி போன்ற பெண்களின் உள்ளங்களை கணேஷ் போன்ற ஆண்கள் உணரவேண்டும். கனவு மெய்ப்பட வேண்டும்.

பிரியதர்சினி குமாரசிங்கம்,
இலுப்படிச்சேனை, செங்கலடி.

□□

தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட மகானின் வரலாற்றை தமது பதவிக்காவும், பவிசுக்காகவும் திரிபுபடுத்திக்கூறும் தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு 'செல்வாவுக்கு இருட்டடிப்பு' நல்லதொரு சாட்டையடி!

திருமதி :.பெமீலா ஆதம்பாவா, நுவரெலியா.

□□

முரசே! கவிதைப்போட்டி தொடக்கம் காதிலை பூ கந்தசாமி வரை சூப்பர். பூலான் கலக்குகிறாள். ரசிகன் மயக்குகிறார். தேன்கிண்ணம் உண்மையில் தேன்தான். உனக்கு நிகர் நீதான்.

எம்.கே. சுகந்தினி, கோவில் குளம், வவுனியா.

□□

அன்பின் முரசே!

உனது 200வது வெற்றிப்படியை முன்னிட்டு வாசகர்களாகிய எமக்கு பரிசு தர முடிவு செய்தமைக்காக வாசகர்கள் சார்பில் மனம் நிறைந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பி.எம்.எம்.ஏ.காதர், மருதமுனை-01.

□□

இனிய முரசுக்கு!

கனவு மெய்ப்பட வேண்டும், காயத்ரி இரு தொடர்கதையும் அருமையிலும் அருமை முரசுக்கு என் பாராட்டுக்கள்.

மக்கொன-
செல்வி ஸ்ரீமா
ஸனூன்.



### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:

* எம். ஃபெடெல்லா கொழும்பு-07.
* அ. அச்சுதன், மூதூர்.
* செல்வி கே. நீரஜா, ஆரையம்பதி-03.
* ப்ரியநேசி, களுத்துறை.
* எஸ். கரன், பதுளை.
* எம்.எஸ்.எஸ். ரம்ஸியா, பதுளை.
* வி. ராகவன், கனடா.
* சி. யோகநாதன், அவுஸ்திரேலியா.
* எஸ். சந்திரமோகன், மொன்றியல்- கனடா.
* ஆர். மோகனதாஸ், பசறை.
* பி. விஜயன், சுவிற்ஸர்லாந்து.
* எல். ஜெயரூபன், சுவிற்ஸர்லாந்து.
* ஏ.சீ.எம். மசூர், பலாங்கொடை.
* எம்.எஸ். தாஹிரா, மருதமுனை-03.
* எஸ். யுவராணி, பிட்டக்கந்தை.
* எம். லைலீன், களுத்துறை (தெற்கு).
* நித்தியாலினி, எட்டியாந்தோட்டை.
* எல். சபீனா சல்மா, அக்கரைப்பற்று-06.
* வி. ஜவாஹிர், காத்தான்குடி.
* மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.
* எஸ். வாணிமைந்தன், கொஸ்லாந்தை.
* அ. குமாரசாமி, ஏறாவூர்-05.
* வீ. இராஜேஸ்வரி, செங்கலடி.
* அ. சுரேஸ், கண்ணகிபுரம்.
* செல்வி பசலியாஹ், கொட்டாரமுல்லை.
* வாஹிட் ஏ. குத்தூஸ், பதுளை.
* ஜெகதீஸ்வரி ஜெகதீஸ்வரன், திருக்கோணமலை.
* கே. புவனலோஜினி, இறக்குவானை.
* எஸ். சந்தனராஜ், அப்புத்தலையூர்.
* கோ. தம்பிராசா, ஜெர்மன். ■



படிப்பகம்

www.padippakam.com

# வன்னியில் பல[illegible] நடவடிக்கை ஆயத்தம்!
# யாழிலிருந்து படையணிகள் நகர்வு!
# புலிகளின் அணிகள் கிழக்கில் குவிப்பு!

**வன்னியில் பாரிய படை நடவடிக்கை ஒன்றுக்கு முப்படைகளும் தயாராகி வருகின்றன. யாழ் குடாநாட்டில் இருந்தும் படையணிகள் வன்னிக்கு நகர்த்தப்பட்டுள்ளன என்று புலிகள் இயக்கத்தினரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 22.04.97ல் புலிகள் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே அத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முன்னர் அரசியல் தீர்வு யோசனையை முன்வைத்துவிட்டு, அந்தப் பரபரப்பு மத்தியிலேயே யாழ் குடாநாட்டு இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

தற்போது அரசு-எதிர்க்கட்சி இணக்கம் என்ற பிரசாரம் தீவிரமாகியுள்ள நிலையில் புலிகளின் பிரதான தளப்பகுதியான வன்னியில் பாரிய படை நடவடிக்கைகளை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது.

இதேவளை புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டம் கிழக்கில் அதிகரித்துள்ளது. அன்னை பூபதியின் நினைவு நாளுடன் புலிகள் இயக்கத்தின் புதிய படையணிகள் கிழக்குக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.

வன்னிப் பகுதியில் பாரிய படை நடவடிக்கை ஆரம்பமாகுமானால் கிழக்கில் பரவலான தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

### உரிமைகோரல்

பாதுகாப்பு நிறைந்த மட்டக்களப்பு நகரப் பகுதியில் அன்னை பூபதி நினைவு தினமான ஏப்ரல் 19ம் திகதி புலிகள் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

மிகவும் பாதுகாப்பான பகுதி என்பதால் அத் தாக்குதலை புலிகள் நடத்தியிருப்பார்களா என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அத் தாக்குதலுக்கு தாமே காரணம் என்று புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

பெருமளவான புலிகளின் உறுப்பினர்கள் கிழக்கில் இறக்கப்பட்டுள்ளமையால் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாம் என்று தெரிகிறது.

கிழக்கில் நிதிதிரட்டல் மற்றும் உறுப்பினர் திரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வசதியாக படையினரின் நடமாட்டங்களை கட்டுப்படுத்தும் தாக்குதல்களும் தீவிரமாகலாம் என்று கருதப்படுகிறது.

யாழ் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் உள்நாட்டில் புலிகள் இயக்கத்தினரின் நிதி திரட்டல் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன. அதனால் கிழக்கில் நிதி திரட்டலை தீவிரப்படுத்தி நிதித் தேவைகளை நிறைவு செய்ய புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

### நிதி திரட்டல்

இதேவேளை யாழ் குடாநாட்டில் படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள யாழ் நகரில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கும் புலிகள் நிதி கேட்டு அறிவித்தல் அனுப்பியுள்ளனர்.

படையினரின் பலத்த கட்டுப்பாடு மத்தியிலும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் திடீரென்று சென்று வர்த்தக நிறுவனங்களில் நிதி பெற்றுச் செல்லுகின்றனர்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வன்னியில் புலிகள் விடுத்த செய்தியில் "தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நிறைவு செய்யும் ஆண்டாக மலரட்டும்!" என்று தெரிவித்திருந்தனர்.

வன்னியில் பெருமளவான இளைஞர்களும், மாணவர்களும், பெண்களும் இயக்கத்தில் இணைந்துள்ளனர் என்றும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது.

## வவுனியாமீது புலிகள் கவனம்!
### கடற் கரும்புலிகள் படகுகள் நடமாட்டம்!

**10.04.97ல்** கடற்படையினர்மீது தம்மால் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக புலிகள் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; காலை 7.30 மணியளவில் தலைமன்னாரில் இருந்து பேசாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படையினரின் இரு விசைப்படகுகள் கடற்புலிகளால் தாக்கப்பட்டன.

இத்தாக்குதலில் பலியான எட்டுப் படையினரின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக ஒப்படைக்கப்பட்டது. ஒரு விசைப்படகும், தொலைத் தொடர்புச் சாதனம், மற்றும் படகு இயந்திரம் ஆகியவை உட்பட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. கடற்புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னியில் படையினரின் நடவடிக்கைக்கு கடல் மூல விநியோகங்களை தடுப்பதற்காக கடற்கரும்புலிப் படகுகள் முல்லைக் கடற்பகுதியில் சுற்றித் திரிவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வன்னியில் படை நடவடிக்கையை எதிர்பார்க்கும் புலிகளின் கவனம் வவுனியாமீது திரும்பியிருக்கிறது.

வவுனியா நகரிலும், வவுனியா பகுதியில் உள்ள காவலரண்கள்மீதும் புலிகளின் தாக்குதல்கள் தொடரும் சாத்தியங்கள் தென்படுகின்றன. இதேவேளை சில வாரங்களுக்கு முன்னர் வவுனியாவில் கொல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட பெண்கள் பாலியல் வல்லுறவுக்குப் பின்னரே கொல்லப்பட்டதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் அழகுராணிப் போட்டி

**யா**ழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் 22.04.97 அன்று படையினரால் நடத்தப்பட்ட களியாட்ட விழாவில் ஐயாயிரத்துக்கு மேல்வரையான மக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்க் கட்சிகள் பல கண்டித்திருந்தும் அழகுராணிப் போட்டியும் நடைபெற்றது. அழகுராணிகளின் தெரிவு மட்டும் இரகசியமாக நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட மூன்று அழகிகள் மேடையில் வைத்து அறிமுகம் செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்கைச் சேர்ந்த ஒரு இளம் பெண் முதல் அழகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. வன்னியில் புலிகளின் உறுப்பினராக இருக்கும் ஒருவரின் தந்தையாருக்கும் சைக்கிள் ஒன்று பரிசாக வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி., புளொட் இயக்கப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் சார்பாக மட்டும் ஒரு பிரதிநிதி விழாவில் கலந்து கொண்டார். அழகுராணிப் போட்டி நடத்தப்படாவிட்டால் தாம் கலந்து கொள்வதாக ஈ.பி.டி.பி, புளொட் இயக்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனராம்.

## நிதியாக ஆயிரம் ரூபா

**பு**லிகள் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் பலர் யாழ்குடாநாடு செல்வதற்காக பள்ளிக்குடாவில் காத்திருக்கின்றனர்.

அது தவிர தினமும் நூற்றுக்கணக்கானோர் படகுகள் மூலம் யாழ் சென்று கொண்டிருக்கின்றனர். படகு வசதி இல்லாதவர்களே பள்ளிக்குடாவில் படகுகளுக்காக காத்திருக்கின்றனர்.

யாழ் செல்ல விரும்புவோரில் 16 வயதிற்கு மேற்பட்டோர் புலிகளுக்கு நிதியாக ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால்தான் அனுமதி கிடைக்கும். என்று யாழ் சென்றுள்ளவர்கள் கூறியுள்ளனர்.

## மீனவர்களே தாக்கப்பட்டனர்!

**ம**ன்னார் நாச்சிக்குடாவில் 10.04.97 அன்று நடைபெற்ற விமானத் தாக்குதலில் தமக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

மீன்பிடித்துறையில் மீன்களை இறக்கிக் கொண்டிருந்த மீனவர்கள் மீதே கிபீர் விமானங்கள் ஆறு குண்டுகளை வீசின. அவற்றில் நான்கு குண்டுகள் வெடித்தன. இரண்டு கடலில் விழுந்தன. இதில் 20 மீன்பிடிப்படகுகள் அழிக்கப்பட்டன. மூன்று பொதுமக்கள் பலியாகினர். ஆறுபேர் காயமடைந்தனர், என்று புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

## திருமலை நகரில் குடியேற்றம்?

**தி**ருக்கோணமலை நகரில் மட்டிக்களி என்னும் பகுதியில் பெரும்பான்மை இன மக்களை குடியேற்ற திட்டமிடப்படுவதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

மட்டிக்களியிலுள்ள காணிகளில் குடியேற்றம் நடத்துவதற்கு 1995ம் ஆண்டும் ஒரு முயற்சி நடைபெற்றது. பின்னர் அது கைவிடப்பட்டது.

தற்போது காணியமைச்சரிடம் இருந்து அக் காணிகள் தொடர்பான பரப்பளவு மற்றும் விபரங்கள் கோரப்பட்டுள்ளனவாம். திருமலை பிரதேச செயலாளரிடமே விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் காணிகளில் சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்படலாம் என்று ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது. இவ்வாறான குடியேற்றம் நடைபெறுமானால் நகரில் இன விகிதாசாரம் மாற்றமடையும் என்றும் கூறப்படுகிறது.

இவ்விவகாரம் தொடர்பாக திருமலை மாவட்ட பா.உ., அ.தங்கத்துரை, ஈ.பி.டி.பி பா.உ., மு.சந்திரகுமார் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

## கான்ஸ்டபிளுக்கு வந்த கல்யாண ஆசை!

**யா**ழ்ப்பாணம் குருநகர் அரசாங்க மகப்பேறு மருத்துவமனையில் தாதியாக கடைமைபுரியும் பெண்மணி ஒருவரை விரும்பினாராம் ஒரு பொலிஸ்காரர்.

குறிப்பிட்ட பெண்மணியும் பொலிஸ்காரருடன் இயல்பாக கதைப்பது வழக்கம். ஆனால் பொலிஸ்காரருக்கோ பெண்மீது காதல் ஏற்பட்டுவிட்டது.

பின்னாலும் முன்னாலும் சென்றிருக்கிறார். தன் விருப்பத்தை சொல்லி இருக்கிறார். பெண்மணியோ மறுத்திருக்கிறார்.

"என்னைத் திருமணம் செய்யாவிட்டால் நான் சாகப்போகிறேன்" என்று கூறிக் கொண்டு வானை நோக்கிச் சுட்டாராம். பின்னர் தன்னையும் சுட்டுக் கொண்டு, அப் பெண்ணையும் சுட்டுவிடப் போவதாக மிரட்டத் தொடங்கினாராம். பயந்துபோன அப் பெண்மணி இயக்கம் ஒன்றிடம் சென்று முறையிட்டுள்ளார்.

## ஐந்து உடல்கள் புதைப்பு!

**யா**ழ் குடாநாட்டில் சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் உள்ள தும்பிக்குளம் காட்டுப்பகுதியில் ஐந்து உடல்கள் கிடந்தன. சயனைட் உட்கொண்டு மரணமான நிலையில் அவை காணப்பட்டன.

அப்பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற பொதுமக்களே அவற்றைக் கண்டுள்ளனர். பின்னர் அவர்களே குழிவெட்டி சடலங்களைப் புதைத்தும் உள்ளனராம்.

## இரவில் மக்கள் பீதி
### ஈ.பி.டி.பி. எம்.பி.கள் புகார்

**யா**ழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் தொடர்பாக இராணுவ உயரதிகாரிகளிடம் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் புகார் செய்துள்ளனர்.

இரவு நேரங்களில் பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று தொல்லை கொடுப்பது, பெண்களைச் சோதனையிடுவது, பொதுமக்களுடன் கடுமையாக நடந்து கொள்வது போன்றவற்றில் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் ஈடுபடுகின்றனர்.

யாழ் நகரிலும் ஏனைய பகுதிகளிலும் நிலைகொண்டுள்ள படையினர் தொடர்பாக இவ்வாறான புகார்கள் வரவில்லை. கோண்டாவில், இணுவில், தாவடி போன்ற பகுதிகளிலேயே இரவு நேரங்களில் மக்கள் பீதி கொள்ளத்தக்க சூழ்நிலை காணப்படுகிறது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிவதாசன், எஸ்.தங்கவேல் ஆகியோரே இராணுவ உயரதிகாரிகளின் கவனத்திற்கு மேற்கண்ட சம்பவங்களைக் கொண்டு வந்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் படையினர் ஒருவர் இளம் பெண் ஒருவரால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட படைவீரருடன் நெருக்கமாகப் பழகுவதுபோல நடித்தே அப் பெண் அவரைத் தனியாக அழைத்துச் சென்று சுட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## கண்டியின் அழகு கெடலாமா?
### நகரப் பகுதியில் அத்துமீறிய வீடுகள்!

(கண்டி நிருபர்)

**க**ண்டி மாநகர சபையின் எல்லைக்குள் அத்துமீறிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுவருவதால் இவற்றை அகற்றுவதில் பல சிக்கல்கள் ஏற்படலாம் எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி நகரில்– குறிப்பாக ரயில் பாதையின் இரு மருங்கிலும் இவ்வாறான வீடுகள் அண்மைக்காலமாக தாராளமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மண்குடிசைகளாக முதலில் வீட்டை அறிமுகப்படுத்தி பின்னர் இரவோடு இரவாக அவை உறுதியான வீடுகளாக மாறிவரும் அபூர்வ நிலை குறித்து வரியிறுப்பாளர்கள் அச்சமும் கவலையும் தெரிவிக்கின்றனர்.

உலகில் அழகிய பண்பாட்டு நகரில் ஒன்றாகக் கண்டியும் சில வருடங்களுக்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இப்பொழுது அதன் இன்றைய அலங்கோலத்தைப் பார்ப்பவர்கள் தலையில் கைவைத்த வண்ணம் பெருமூச்சு விடுகிறார்கள். அந்த அளவுக்கு அவர்கள் அழகிய நகர் சீரழிந்து அல்லற்படும் காட்சியைக்கண்டு வருத்தம் தெரிவிக்கின்றனர்.

நகரின் எட்டுத் திக்குகளும் குப்பையும் கூழமும் நிறைந்து நடைபாதைகள் யாவும் வியாபாரிகளின் சொந்தமாக மாறி நாளுக்கு நாள் அதன் புனிதமும் சூழலும் மாசுபடுவதாக பலரும் அங்கலாய்க்கின்றனர். மக்கள் இவற்றைப் பார்த்து கொதித்தெழும் நாள் வெகுதூரத்திலில்லையாம்.

## சூட்டுக்கு ஐவர் பலி!

**கி**ளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் பகுதியில் உள்ள தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற பொதுமக்கள் ஐந்து பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

குருசாமி கந்தசாமி (31), முத்துசாமி மகாதேவன் (25), ஆனந்தன் ஜெகதீஸ்வரன் (18) சின்னவன் (19), தயாளன் (17) ஆகியோரே பலியானவர்களாவர்.சீருடையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர்கள் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பெண் காயம்

**யா**ழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு முருகன் வீதியில், 20.04.97 அன்று இரவு 2.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அச் சம்பவத்தில் நித்தியானந்தராசா புஸ்பலதா (31) என்பவர் காலிலும், வயிற்றிலும் காயமடைந்தார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். 1988ல் இந்தியப் படையினரால் இவரது கணவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## தொலைபேசி இலக்கங்களில் மாற்றம்!

(ஏறாவூர் நிருபர்)

**ம**ட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொலைபேசி இலக்கங்கள் கடந்தவாரம் முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. முன்னர் நான்கு இலக்கங்களைக் கொண்டிருந்தவை தற்போது ஐந்து இலக்கங்களாக அதிகரித்துள்ளன.

மட்டக்களப்பு, ஏறாவூர், செங்கலடி போன்ற பகுதிகளில் முன்னர் பாவனையிலிருந்த பழைய இலக்கங்களுக்கு முன்னால் 2 என்ற எண்ணை மேலதிகமாகச் சேர்த்துச் சுழற்றுவதன் மூலம் தொடர்புகளைப் பெற முடியும்.

காத்தான்குடிப் பிரதேசத்தில் முன்னர் 2ம் இலக்கத்தில் ஆரம்பமாகும் 2 என்ற எண்ணை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக 45 ஆகிய எண்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலமும், அதேபோல் காத்தான்குடிப் பிரதேசத்தில் முன்னர் 4 ஆம் இலக்கங்களில் ஆரம்பமாகும் எண்களுக்கு முன்னாலுள்ள 4ஐ நீக்கிவிட்டு 46 ஆகிய இலக்கங்களைச் சேர்ப்பதன் மூலமும் புதிய தொடர்புகளைப் பெற முடியும்.

மட்டக்களப்புக்கு ஊடாக வழங்கப்படும் கல்முனைத் தொடர்புகளுக்கு ஏற்கனவேயுள்ள 9 என்ற எண்ணிற்கு முன்னால் 2 என்ற இலக்கத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்காக இருந்து வரும் 065 என்ற குறியீட்டு எண்களில் எதுவித மாற்றமுமில்லை.

## இளைஞரைக் கடித்த பொலிஸ்காரர்
### பொறுப்பதிகாரியிடம் முறையீடு!

(திருமலை நிருபர்)

**ம**துபோதையில் வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பாதையால் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவரைக் கடித்துக் குதறினாராம்.

இச் சம்பவம் கடற்கரைக் கிராமமான சல்லியில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்றது. கிருஷ்ணராஜா மோகனசூரியர் என்ற ஒரு குழந்தையின் தந்தையே இவ்வாறு–காரணம் எதுவுமில்லாமல் குதறப்பட்டவராவார்.

இதுபற்றி முறையிட, இவரைச் சல்லிக் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற இவரது மனைவியும் தமக்கையும் அங்கு நின்றோரால் தாக்கப்பட்டதுடன், சம்பவங்களை நேரிற் கண்ட வேறொரு நபரும் தாக்குதலுக்குள்ளானார்.

முறையிட வந்த இளைஞரை காவல் நிலையத்திலும் கட்டி வைத்துத் தாக்கியதையடுத்து, உறவினர்கள் உப்புவெளிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டனர். உடனடியாகச் சல்லிக் காவல் நிலையத்துக்கு விரைந்த பொறுப்பதிகாரி, முகத்தில் பல இடங்களில் கடிகாயங்களுடன் காணப்பட்ட இளைஞரை மீட்டெடுத்து திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தார்.

உப்புவெளிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் மேலதிகாரிகளும் உடனடியாக விசாரணையில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டோரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிப் பிரச்சனையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்துள்ளனர்.

"இதுவரையும் சல்லிக் காவல் நிலையத்தில் பணியாற்றிய பொலிஸார் எங்களுடன் அன்பாகவே நடந்து கொண்டனர். அவர்கள் வேறு காவல் நிலையங்களுக்கு மாற்றம் பெற்றபின்னர்கூட தெருக்களில் எங்களைச் சந்திக்கும்போது தங்கள் அன்பை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் இந்தச் சம்பவம் எங்களை வேதனையிலாழ்த்துகிறது." என்று கூறும் சல்லிக் கிராமவாசிகள், உப்புவெளிப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நேரா வண்ணம் நடவடிக்கை எடுப்பார் என நம்புவதாகவும் 'முரசு'க்கு தெரிவித்தனர்.

## மணிசங்கர் ஐயர் மீதும் விமர்சனம்

**ச**மீபத்தில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய இந்திய அரசியல்வாதியான மணிசங்கர் ஐயர் மீதும் புலிகள் விமர்சனம் செய்துள்ளனர்.

முன்னாள் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரான மணிசங்கர் ஐயர் மறைந்த பாரதப்பிரதமர் ராஜீவ்காந்தியின் நெருங்கிய நண்பராவார்.

இந்து பத்திரிகைக்கு செய்திக் கட்டுரைகள் எழுதுவதற்காகவே மணிசங்கர் ஐயர் யாழ்ப்பாணம் சென்றிருந்தார் பின்னர் இந்துவிலும் கட்டுரைகள் எழுதியிருந்தார்.

மணிசங்கர் ஐயர் விஜயம் தொடர்பாக புலிகள் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்:

"இந்தியாவின் துணையுடனும் தமிழ்க் குழுக்களின் உதவியுடனும் புலிகளை ஒடுக்குவோம் என்று சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகர் தன்னிடம் கூறியதாக இந்துவில் மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தொடர்ச்சியாக எதிர்த்தும் கேலி செய்தும் வருபவர் மணிசங்கர் ஐயர். சிறீலங்கா இராணுவத்தினரே அவரை வடக்கே அழைத்துச் சென்றனர். தமிழீழப் போராட்டத்துக்கு எதிரான சக்திகளை அரசு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வருகிறது" என்று தெரிவித்துள்ளனர்.

## பெற்றோலில் ஓடலாம்

**யா**ழ் குடாநாட்டில் வாகனங்களுக்கு இனிமேல் மண்ணெண்ணய் நிரப்பக்கூடாது என்றும் பெற்றோல், டீசல் போன்றவற்றையே விநியோகிக்குமாறும் அறிவுறுத் தப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பல வாகனங்கள் மண்ணெண்ணையிலேயே இயங்கிவந்தன. பெற்றோல் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாகவே அவ்வாறு நடைபெற்றது.

இதேவேளை மண்ணெண்ணையும் யாழ் குடாநாட்டில் தாராளமாகக் கிடைக்கிறது.

சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 96-97ம் ஆண்டு வாகனப் பதிவு சான்றிதழ் இருப்போருக்கு ஒரு லீற்றர் பெற்றோல் 77 ரூபாவாக விற்கப்படுகிறது.

## வாழைச்சேனைப் படகுச் சேவை இடை நிறுத்தம்!
### படையினர் தொடர்ந்து அனுமதி மறுப்பு!

**ம**ட்டக்களப்பு- நாசிவன்தீவிலுள்ள மக்கள் வாழைச்சேனை நகருக்கு வந்து தமது அலுவல்களை நிறைவேற்றிச் செல்வதற்கும் பொருட்களை வாங்கிச் செல்வதற்கும் போக்குவரத்துக்குப் படகுச் சேவையில்லாது நீண்ட காலமாகப் பெருங்கஷ்டப்படுகிறார்கள். முன்னர் அங்கு இடம்பெற்றுவந்த படகுச் சேவை பாதுகாப்புப் படையினரின் வேண்டுகோளுக்கிணங்க இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

நீடித்து வரும் இந்நிலமை குறித்து வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் திரு கே. கதிர்காமநாதன், அரசாங்க அதிபருக்கு அறிவித்ததை அடுத்து மீண்டும் படகுச் சேவையை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு கடிதம் எழுதியிருந்தார். அதைப் பரிசீலித்த பாதுகாப்புப் படையினர், பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு பயணிகள் படகுச் சேவை நடத்த அனுமதியளிக்கமுடியாதென்று அறிவித்திருக்கிறார்கள். அப்பகுதியைச் சூழவுள்ள தரை வழியால் பஸ்போக்குவரத்து இடம் பெறுவதால், நாசிவன்தீவு மக்கள் எதுவித போக்குவரத்துக் கஷ்டங்களையும் எதிர்நோக்கவில்லை என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தமது பதில் கடிதத்தில் அரசு அதிபருக்கு வலியுறுத்தியுள்ளதாக பிரதேச செயலாளர் திரு. கதிர்காமநாதன் மேலும் தெரிவித்துள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

# "அதிகாரம் வழங்கப்படவில்லை"

## பிரதேச செயலர் விளக்கம்

சகல தரப்பு மக்களினதும் அபிமானத்தைப் பெற்று மிளிரும் முரசில் "அதிகாரிகள் இழுபறி" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி தொடர்பாக எனது விளக்கம் இது:

கல்முனை (தமிழ்) பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கான மாதாந்தச் சம்பளங்களை அந்த அலுவலகம் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் திரு. பீ.ஏ. றூபசிறி அவர்களால் ஒப்பமிடப்பட்ட கடிதம் ஒன்றை தமிழ் பிரிவு கிராம சேவை அதிகாரிகள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

பிரதேச செயலகங்களின்- மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகளுக்கான 'கணக்கீட்டு உத்தியோகத்தர்' அம் மாவட்டத்தின் அரசாங்க அதிபர் என்பதால், அவரிடம் இதற்கான அனுமதியைக் கோரியபோது, இக்கடிதம் பின்னர் அரசாங்க அதிபரால் இரத்துச் செய்யப் பட்டது.

கல்முனை (தமிழ்) பிரிவு பிரதேச செயலகம் என்பது இன்றுவரை ஒரு பூரண பிரதேச செயலகமாக மத்திய அரசாங்கத்தால் வர்த்தமானிப் பிரகடனம் செய்யப்படவில்லை: அதன் எல்லைகள் இன்னும் வரையறுக்கப்படவில்லை; இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த கணக்காளர் ஒருவரும், காசாளர் ஒருவரும் அங்கு நியமிக்கப்படவில்லை. இந்நிலையில் மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டுக் கொடுப்பனவுகளை அவ்வலுவலகம் மூலம் செய்ய அதிகாரம் வழங்க முடியாதுள்ளதாக அரசாங்க அதிபரால் விளக்கப்பட்டது.

தமிழ்க் கிராம சேவையாளர்களுக்கு மட்டுமன்றி- மத்திய அரசாங்கத்தின் கீழ்க் கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் இவ்வலுவலகம் மூலமே கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றன.

கல்முனை தமிழ்ப் பிரிவு செயலகம் மீது இப்பிரதேச தமிழ் மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தை நான் நன்கு அறிவேன். கல்முனை தமிழ்ப்பிரிவு மூலம் இக்கொடுப்பனவுகளைச் செய்வதற்கு உரியமுறையில் அதிகாரம் வழங்கப்படுமானால்- அதனைச் செயல்படுத்த நான் என்றும் தயாராகவே உள்ளேன் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.எல்.எம். பளீல், பிரதேச செயலாளர்- கல்முனை.

# கற்குகை பாதைக்கு ஆபத்து

(கண்டி நிருபர்)

கண்டி-கட்டுகஸ்தோட்டை வீதியில் உள்ள- ஆங்கிலேயர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கற்குகைப் பாதைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாக பிரயாணிகளும் அதனைச் சூழ உள்ள மக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

கண்டி-மாத்தளை ரயில் இழுப்புப் பாதையும் இந்தக் குகைக்கு மேலாகவே செல்கின்றது. அண்மைக் காலமாக இக் குகைக்கு அருகில் மேற்புறமாக உள்ள இரு பக்க அணைகளிலும் அத்துமீறிய குடியிருப்புக்கள் பல உருவாகி உள்ளன. அதுமட்டுமல்லாமல் இயற்கையாக இருந்த காடுகள் இருபக்கமும் அழிக்கப்பட்டிருக்கின்றன. பாரிய மாரா மரத்தின் அருகில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான காரணங்களால் மழைக் காலங்களில் மண்ணரிப்பு ஏற்பட்டு கற்குகைக்கு பாதிப்புக்கள் ஏற்படலாம். எனவே இதனைத் தடுத்து நிறுத்த மாநகர சபையும் ரயில் திணைக்களமும் உடனடியான நடவடிக்கையில் இறங்க வேண்டும் எனவும் பலரும் கேட்கிறார்கள்.

# படைகள் திறந்த கடைகள்!

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரில் புதிய விற்பனை நிலையமொன்றை படையினர் கடந்த வாரம் திறந்துள்ளனர்.

மன்னார் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கருகில் திறக்கப்பட்டிருக்கும் இக்கடையில் சகல பொருட்களும் மிகவும் மலிவானவிலையில் விற்கப்படுகின்றன. இதனால் ஏராளமான மக்கள் இங்கு திரண்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதே போன்று உயிலங்குளம், முருங்கன் போன்ற பிரதேசங்களிலும் படையினரால் கடைகள் திறக்கப்பட்டு மலிவு விற்பனை இடம் பெற்று வருகின்றது.

இக் கடைகளில் விசேஷம் என்னவென்றால் இதுகாலவரையிலும் இப் பகுதியில் தடை செய்யப்பட்டிருந்த பென் டோர்ச் பெற்றரிகளும் விற்கப்படுகின்றன. டோர்ச் பெற்றரிகளும் குறைவான விலையில் பெற்றுக்கொள்ள முடிகிறது.

மன்னாருக்கான தரைப்பாதை திறக்கப்பட்டதையடுத்து ஏராளமான லொறிகளில் பொருட்கள் கொண்டு வரப்படுகின்ற போதிலும் எதிர்பார்த்த அளவுக்கு விலைகளில் வீழ்ச்சி ஏற்படவில்லை.

மண்ணெண்ணெய், இறைச்சி என்பவற்றின் விலைகள் மட்டும் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன. தேநீர்க் கடைகளில் விற்பனையாகும் பால் தேநீர், பாண், பணிஸ், மற்றும் மாவினால் தயாரிக்கப்படும் எந்தவிதமான பொருட்களின் விலைகளில் ஒரு சதமேனும் குறைக்கப்படவில்லை.

இராணுவத்தினர் திறந்துள்ள கடைகளையே மக்கள் அதிகமாக நாடுவார்களேயானால், ஏனைய வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்

இது இவ்விதமிருக்க, கடந்த 14.04.97 அன்று மன்னாரிலிருந்து உயிலங்குளம் செல்வோர் மீது விதிக்கப்பட்டிருந்த பாஸ் நடைமுறை நீக்கப்பட்டிருந்தது.

இது காலவரையிலும் உயிலங்குளத் திற்கப்பால் செல்வோர் பாஸ் அனுமதி பெற்று தம்முடன் எடுத்துச் சென்ற டயர் போன்ற பொருட்கள் தற்போது எதுவித அனுமதியுமின்றி ஒருவர் இரண்டு டயர் வீதம் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

நானாட்டான் போன்ற பகுதிகளில் தற்போது முஸ்லிம்கள் எவரும் இல்லாத போதும் கூட சில முஸ்லிம் வியாபாரிகள் இப் பகுதிக்குச் சென்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பின்போடப்பட்டு வரும் ப.நோ.கூ.ச.தேர்தல்

## பிரதேச செயலாளரின் விளக்கம்!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் தெற்குப் ப.நோ.கூ.சங்கத் தேர்தலை நடத்துமாறும் அந்த அறிவித்தல் வந்து சில நாட்களின் பின்னர் தேர்தலை நடத்த வேண்டாமென்றும் வடக்கு-கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் இவ்வருடம் ஜனவரி மாதம் கேட்டிருந்தார். இது பற்றி அச்சங்கத்தின் தலைவரும் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளருமான திரு.என். ஸ்ரீசங்கர் விளக்கமளிக்கையில், "வடக்கு-கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளரால் ஏறாவூர்ப் பற்று தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு கூறப்பட்ட ஆலோசனைப்படி இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் புதிதாகப் பங்குப் பணம் செலுத்த வேண்டிய தேவையும், அத்துடன் ஒரு வருடம் காத்திருக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே ஏறாவூர் ப.நோ.கூ.சங்கத்திலிருந்து பிரிந்த அந்த அங்கத்தவர்கள் அச்சங்கத்திலிருந்து எதுவித ஆதனங்களையும் பெறாமல் வெறுங்கையுடன் திரும்ப வேண்டிய நிலையுமுள்ளது.

ஏறாவூர்ப் ப.நோ.கூ.ச.விலிருந்து பிரிந்து சென்ற ஏறாவூர் தெற்கு ப.நோ.கூ.ச. எல்லைக்குள் சுமார் 3326 பேர் அங்கத்தவர்களாக உள்ளார்கள். ஆனால் இவர்களில் 489 பேரைத் தவிர ஏனையோர் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்யாத அங்கத்துவமுடையவர்கள். இவர்கள் வாக்களிக்கத் தகுதியற்றோராகும்.

எனவே இவ்வேளையில் மிக அவசரமாக நடத்தப்படும் தேர்தல் பூரணமானதாகவும் நீதியானதாகவும் இருக்காது. ஆதலினால் அங்கத்தவர்களின் ஜனநாயக உரிமைகள் உறுதி செய்யப்படும் பட்சத்திலேயே தேர்தல் நடைபெறும் வாய்ப்பை இனி எதிர்பார்க்கலாம்.

இது குறித்த விரிவான விளக்கமொன்றை வடக்கு-கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக திரு. ஸ்ரீசங்கர் மேலும் சொன்னார்.

# மலையகத்தில் தெளிவில்லாத ஒலிபரப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகளை மலையகத்தின் எந்தப் பகுதியிலும் தெளிவாகக் கேட்க முடியாதிருப்பதாக மலையக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

பதுளை, பசறை, லுணுகலை, ஹஸலக, பண்டாரவெல, மொனறாகலை போன்ற பகுதிகளில் வானொலி நிகழ்ச்சிகளைச் சிறிதளவும் கேட்கமுடியாத மோசமான சீர்கேடு நிலவுகிறது. இப்பகுதிகளிலுள்ளோர் புதிதாக வானொலிப் பெட்டிகளை வாங்க வேண்டிய அவசியமில்லை என்ற மன நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆனால் ஏற்கனவே வானொலிப் பெட்டிகளை வைத்திருப்போர் அனுமதிப் பத்திரங்களை வருடாவருடம் புதுப்பிக்க வேண்டிய கட்டாயமுண்டு. நிகழ்ச்சிகளைக் கேட்க முடியாது பிரயோசனமற்ற முறையில் அனுமதிப் பத்திரங்களுக்குக் கட்டணம் செலுத்த வேண்டுமா என்ற கேள்வி மக்களால் எழுப்பப்படுகிறது.

காலங்காலமாக கவனிப்பாரற்று இடம் பெற்று வரும் இந்தச் சீர்கேட்டை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டவர்களும், அதிகாரமுள்ளவர்களும் நடவடிக்கை எடுத்தால் மிகுந்த நன்மையாக இருக்கும்.

செய்திகள், விசேட அறிவிப்புக்கள், மற்றும் பல நன்மைகளை வானொலி மூலம் பெற்றுக்கொள்ள முடியாததால் மலையக மக்கள் பெருங்கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

# "மலையக மக்களின் மகத்தான தீர்ப்பு!"

## தேசிய தொழிலாளர் காங்கிரஸ் பாராட்டு

"நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் மலையக மக்கள் ஒரே குரலில் அளித்துள்ள தீர்ப்பு மகத்தானது, போற்றத்தக்கது. மலையக மக்களையும் அவர்களது எண்ணங்களையும், அபிலாஷைகளையும், தேவைகளையும், பிரச்சனைகளையும் புரிந்து கொள்ளாத தலைவர்களுக்கும் புரிந்தும் புரியாததைப் போன்று தான்தோன்றித்தனமாக தலைக்கனத்தோடு செயல்பட்டவர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் அரியதோர் பாடத்தை புகட்டிவிட்டார்கள்." இவ்வாறு இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், மத்திய மாகாணசபை பிரதித் தலைவருமான இரா. தங்கவேல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிபீடம் ஏறி இரண்டரை ஆண்டுகள் சென்ற போதும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை வளம் பெறச் செய்ய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சம்பள உயர்வுக்காக பெரும் போராட்டம் நடத்திய போதிலும் அதை செவிமடுக்கவோ அல்லது அதற்கான பரிகாரங்களைக் காணவோ முயலாமல் திருகுதாளங்களுக்குத் தூபம் போட்டது. ஏனைய துறையினருக்கு வாழ்க்கை செலவு பலனை குறைப்பதற்கு சம்பள உயர்வு கொடுத்த போது தோட்ட தொழிலாளர்கள் விடயத் தில் மாற்றாந்தாய் மனப்பாங்கை நிறுத்த இ.தோ.கா. செய்து கொண்ட துரோக ஒப்பந்தத்தை அமுல் நடத்த மறைமுகமாக தூபம் போட்டது.

ஐ.தே.க. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீட்டுரிமை வழங்கும் திட்டத்தை அமுல் நடத்த தவறி, கடைசி நேரத்தில் திட்டத்தை அமுல் நடத்தப் போவதாக தேர்தல் பிரசாரத்தின் உச்சக் கட்டத்தில் விழாவெடுத்தது, தொழிலாளர் கண்களுக்கு ஒரு வேடிக்கையாகவே அமைந்தது. ஒட்டு மொத்தத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஆட்சியாளர்களுக்கும் அவர்களுக்கு துணை சென்ற தலைவர்களுக்கும் பாடம் புகட்டும் வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்கள், என்று தெரிவித்துள்ளார்.


பிறந்த நாள் வாழ்த்து



கொழும்பு இல 62 ஸ்ரீ கதிரேசன் வீதியை சேர்ந்த நாகலிங்கம் கலாராணி தம்பதிகளின் செல்வ புதல்வி ஜனனி தனது 6வது பிறந்தநாளை 11.04.97 அன்று வெகு விமரிசையாக தமது இல்லத்தில் கொண்டாடினார்.
அதே இலக்கத்தை சேர்ந்த மோகன்ராஜ் புஸ்பராணி தம்பதிகளின் செல்வ புதல்வி, ரம்யாஸ்ரீ தமது 6வது பிறந்தநாளை 28.04.97 அன்று கொண்டாடுகிறார்.
இவர்களின் செல்வ புதல்வன் திவ்வியாசாகர் தமது 4வது பிறந்த நாளை 26.04.97 அன்று கொண்டாடுகிறார்.
இவர்கள் அனைவரையும் அன்பு தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, ஹொங்கொங் மம்மி மற்றும் பெரியப்பா, சித்தப்பா, பெரியமாமா, மாமி, சின்ன மாமா மற்றும் உற்றார் உறவினர்கள் சீரும் சிறப்புடனும் பல்கலையும் கற்று ஸ்ரீகருமாரி அம்மன் அருளால் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

த. சத்தியசீலன்
Central Trading Company,
62, Sri Kathiresan Street,
Colombo-13.
Tel-546499
(Advt)

ஸ்ருடியோ சாயா
(Photo, Video)
1 நிமிடத்தில்
வீசா, பாஸ்போட்
போட்டோ.
40 1/1, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492

UNION
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night
Latch & Sliding Locks,
(English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும்
தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030



கலை அலங்கார
வகுப்புக்கள்
* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி
ஆரம்பம்: 28-04-97
FASNAZ BEAUTY SALON
142, டபிள்யு. ஏ.சில்வா மாவத்தை,
கொழும்பு-06.
தொலைபேசி: 589457



33 வருடமாக
...பரைத் தன்னகத்தே
கொண்டுள்ளது
எமது நிறுவனம்.
...டிக்கையாளர்களிடம்
...ாகளது குறைகளைக்
கண்ட மாத்திரமே
எடுத்துக்கூறி
அவர்களின்
நம்பிக்கைக்குப்
பாத்திரமாகவே
செயல்படுகிறோம்.
மலையாள மாந்திரீகம்
எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.
தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-0784157[illegible]
பக்ஸ் இல-342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972
இனைக் கேட்கவும்.
வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET. NO....,
E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,
WWW LGO SLT.LK.
நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.

SPOKEN ENGLISH
தபால் மூலம் கல்வி
மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
P. O. BOX -162, COLOMBO.

வெல்டர் தேவை
எலக்ரிக் வெல்டிங்,
கிறில், கேற்
செய்யக்கூடிய நன்கு
அனுபவம் உள்ளவர்
தேவை.
நேரில் வரவும்
சங்கரி லேத் வேர்க் சொப்
149, ஜம்பட்டா தெரு,
கொழும்பு-13.

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

ஏப்ரல் 18 முதல் 30 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10. RECLAMATION ROAD. (ENTRANCE BANKSHALL ST., Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383, 436390. கொழும்பு நாட்களில் மட்டும் செல்டல் No. 078-71101. கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும். மே 3, 4, 5, 6 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 33. TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# பணியவைக்கும் சர்வதேச நிர்ப்பந்தம் ஏட்டிக்குப் போட்டியான உத்திகள்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

மற்றொரு சபாஷ் சரியான போட்டி ஆரம்பமாகிவிட்டது.

**ஆளும் தரப்பு-எதிர்க்கட்சி இணக்கம் கண்டது தொடர்பான ஆதாயத்தை பங்கு போட்டுக் கொள்வதில் இரு கட்சிகளுக்கிடையிலும் கடும் போட்டி ஏற்பட்டிருக்கிறது.**

ஆளும் தரப்பு அந்த இணக்கத்தை வைத்து புலிகளையும், எதிரணியையும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் என்ற கணக்கில் வீழ்த்த நினைக்கிறது.

எதிர்த்தரப்புக்கு தற்போது புலிகளைப் பற்றிக் கவலையில்லை. இணக்கம் கண்டோம் ஒத்துழைக்கிறோம் என்று கூறிக்கொண்டே தாங்கள் இதுவரைகாலமும் இருந்த எதிர்க்கட்சிகள் போன்றவர்களல்ல என்றும் மறக்காமல் சொல்கிறார்கள். அதன் மூலம் முன்னாள் எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சாடுவதுமாச்சு, சிறுபான்மை மக்களின் வாக்கு வங்கியை அடுத்த தேர்தல்வரை தக்கவைப்பதுமாச்சு.

உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் தமது ஒத்துழைப்பு இணக்கம் தொடர்பாக உரத்துப் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றனர் எதிர்க்கட்சியினர்.

ஆளாளுக்கு ஒரு விளக்கம் சொல்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

இனவாதக் கட்சிகளை ஓரம் கட்டவே ஆளும் தரப்புக்கும் தமக்கும் இணக்கம் ஏற்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் அமைச்சர் தயாரத்ன கூறியிருக்கிறார்.

புனர்வாழ்வு அமைச்சராக இருந்தபோது இனவாத அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் வேலைத்திட்டங்களை மேற்கொண்டவர் தயாரத்ன. அது மட்டுமல்லாமல் தற்போதும் ஐ.தே.கட்சிக்குள் இனப்பிரச்சினை தீர்வுக்கு தடையான தீவிர நிலைப்பாடு உள்ளவர்களில் ஒருவராகவும் இருக்கிறார் தயாரத்ன.

ஆக, தயாரத்னகூட இணக்கத்தைப் பற்றிப் பேசுகிறார் என்றால் பலத்த சந்தேகம் வருகிறது.

"ஆடு நனைகிறது என்று ஓநாய்கள் அழுவதை நம்பி ஆடுகள் துள்ளிக்குதித்த கதையாவிடக்கூடாது என்பதுதான் கவலை" என்று சொன்னார் ஒரு தமிழ்க் கட்சி தலைவர்.

தன்னை இனம்காட்ட அவர் தயாராக இல்லை. அப்படித்தான் சகல தமிழ்க் கட்சிகளும். இரு தரப்பையும் அனுசரித்துப் போய் அரசியல் நடத்துவதுதான் அவர்களது தேவை. எனவே இணக்கம் என்ற இனிப்பான பேச்சின் பின்னாலுள்ள நாடகம் தெரிந்தாலும்கூட வெளியே பகிரங்கமாகச் சொல்லமாட்டார்கள்.

▫▫▫

அரசும், புலிகளும் பேச்சு நடத்தப் போகிறார்கள் என்று வெளியான தப்பான ஊகங்களின் ஆயுள் முடிந்துவிட்டது.

அரசுக்கு எதிராக பிரசாரம் நடத்த அன்ரன் பாலசிங்கத்தையும், கரிகாலனையும் பிரபாகரன் வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார் என்று செய்தி வெளியிட்டுள்ளது அரச வானொலி.

அன்ரன் பாலசிங்கமும், கரிகாலனும் வெளிநாடு சென்றுவிட்டதாக கூறப்பட்ட புரளியை நம்பி வெளியான செய்தி அது.

**அரசுக்கு எதிராக வெளிநாட்டில் பிரசாரம் செய்ய பாலசிங்கத்தையும், கரிகாலனையும்தான் அனுப்ப வேண்டும் என்பதில்லை. வெளிநாடுகளிலேயே அதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் பிரசாரம் செய்துகொண்டும் இருக்கிறார்கள்.**

ஆனால் புலிகளின் பிரமுகர் லோரன்ஸ் திலகர் வன்னி வந்து சென்றார் என்ற செய்திக்குப் பின்னர் அரசு மிக விழிப்பாக இருக்கிறது. சர்வதேச அரங்கில் தமது இமேஜை புலிகள் சேதப்படுத்தி விடுவார்களோ என்று அஞ்சுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

**சர்வதேச அரங்கில் தனது இமேஜை தக்கவைப்பதற்காகவே எதிர்க்கட்சியையும் இணைத்துக்கொண்டு, "இனப்பிரச்சினை தீர்வுக்கு ஒத்துழைப்பாக செயற்படுவோம்" என்ற பல்லவியை உரத்துப்பாடத் தொடங்கியுள்ளது அரசாங்கம்.**

அதாவது இலங்கையில் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு, தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து பிரச்சினைக்கு தீர்வு காணத்தயார் என்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவது மூலம் சர்வதேச மத்தியஸ்த கோரிக்கைக்கு பதிலடி நடத்தியிருக்கிறது அரசாங்கம்.

**சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுக்குத் தயார் என்று புலிகள் ஒரு பந்தை போட, இங்கேயே பேச்சு நடத்தி முடிக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. புலிகள் மட்டுமே வெளியே நிற்கிறார்கள் என்று சொல்லத்தக்க விதமாக ஒரு 'சிக்ஸர்' அடித்திருக்கிறார் ஜனாதிபதி.**

அதுதான் எதிர்க்கட்சியும் ஒத்துழைக்கத் தயார் என்ற கோஷம். ஆக இலங்கைக்குள் பிரச்சினையை தீர்க்க எல்லோரும் தயார். புலிகள் மட்டுமே தூர நிற்கிறார்கள் என்று அவர்களை தனிமைப்படுத்தியாகிவிட்டது.

**ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு உடன்பாட்டை வரவேற்ற தமிழ்க்கட்சிகளும் அந்த தந்திரத்துக்கு கச்சிதமாக உதவியிருக்கின்றன.**

'அங்கேயே பிரச்சினையைத் தீர்க்கலாம் போல இருக்கிறதே. பின்னர் எதற்கு எமது மத்தியஸ்தம். நீங்களும் போய் பேசிப்பாருங்களேன்' என்று சர்வதேச சமூகம் புலிகளிடம் கூறத்தக்க நிலையை ஏற்படுத்திவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் இருக்கிறது அரசாங்கம்.

புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக ஒளிவு மறைவாக காய் நகர்த்துவது ஆபத்தாக முடியும் என்று அரசு நினைக்கிறது.

அதனால்தான் புலிகளுடன் பேசவேண்டிய கட்டாயம் வந்தால்கூட எதிர்க்கட்சியும் அதனை ஆமோதிக்கத்தக்கதாக பேச்சு நடத்துவது, முறிவு வந்தாலும் எதிர்க்கட்சி அரசை கேலி செய்யாதளவுக்கு எதிர்க்கட்சியையும் சம்பந்தப்படுத்துவது என்ற புத்திசாலித்தனமான முடிவோடு இருக்கிறது அரசாங்கம்.

புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக அரசுக்குள் இரண்டு போக்குகள் இருக்கின்றன.

புலிகளை அடித்து முடித்துவிடலாம் என்பது பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் நம்பிக்கை.

புலிகளை முற்றாக முறியடிப்பது நடக்கக்கூடிய காரியமல்ல என்பது ஜனாதிபதியின் எண்ணம் என்று கூறப்படுகிறது.

ஆனால் மேற்கண்ட இருபோக்குகளும் ஒரு பொதுக் கருத்தில் ஒன்று சேருகின்றன.

**அரசின் அரசியல்- இராணுவ வெற்றிகளை தக்கவைப்பது. இராணுவ பலத்தில் மேலோங்கிய நிலையில் இருந்துகொண்டு இனப்பிரச்சனை தீர்வு விடயத்தை கையாள்வது என்பதுதான் பொதுக் கருத்து.**

புலிகளைப் பணியவைத்து பேச்சு மேசைக்கு கொண்டுவந்தால் தற்போதைய அரசியல் தீர்வு யோசனைகளின் வரையறைகளுக்குள்ளேயே நின்று கொள்ளலாம்.

இராணுவரீதியாலும் வடக்கு-கிழக்கில் படையினரின் பிடியை உடனடியாக தளரச் செய்ய வேண்டியிருக்காது. அவ்வாறான நிலையில் பேச்சு முறிந்தால்கூட அரசுக்கு பாதகம் எதுவும் ஏற்பட்டு விடாது.

ஆக, அரசு புலிகளுடன் பேசத்தயார், புலிகளாக அரசைத் தேடி வந்தால் நல்லது என்பதுதான் ஜனாதிபதியின் நிலை.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை பிரபாகரன் தம்மிடம் கோரினால் பரிசீலிக்கத் தயார் என்று கடந்த வருடம் ஜனாதிபதி கூறியிருந்தார்.

இப்போது அப்படிக் கூறத்தக்க நிர்ப்பந்தமும் இல்லாமல் போய்விட்டது. புலிகள் தவிர அனைத்துக் கட்சிகளுமே இந்த நாட்டுக்குள் அரசுடன் ஒத்துழைத்து பிரச்சினைக்குத் தீர்வு காணத் தயார் என்று அரசு ஒரு தோற்றத்தை



உருவாக்கிவிட்டது.'

இத் தோற்றப்பாட்டுடன் இரண்டு முனைகளில் புலிகளை நெருக்குவதுதான் அரசின் திட்டம்.

**ஒன்று: சர்வதேச முனை. இலங்கைக்குள் பிரச்சினையை தீர்க்க சகல கட்சிகளும் தயாராக இருப்பதால் புலிகளும் அதில் இணையவேண்டும் என்று சர்வதேச நிர்ப்பந்தத்தை புலிகள்மேல் ஏற்படுத்துவது.**

**மற்றொன்று உள்நாட்டு முனை: அரசியல் தீர்வுக்கு புலிகள் மட்டுமே தயாராக இல்லை என்று காட்டி அவர்களை அரசியல் ரீதியில் தனிமைப்படுத்துவது. மறுபுறம் இராணுவ அழுத்தங்கள் மூலம் புலிகளின் கழுத்தை திருகுவது.**

சமீபத்திய சில நிகழ்வுகள் அரசுக்கு நம்பிக்கை கொடுத்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் உறுப்பினர்கள் பலர் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் மாட்டிக்கொண்டமை. பலியானமை.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வெளியேறி யாழ்குடாநாட்டுக்குச் சென்றுகொண்டிருப்பது.

உள்ளூராட்சித் தேர்தல் போன்றவற்றை வடக்கு-கிழக்கில் நடத்தக்கூடியதாக இருப்பது.

வவுனியா- மன்னார் தரைப்பாதை திறந்து படையினர் நிலை கொண்டிருப்பது.

மன்னார் தரைப்பாதை, ஆனையிறவு கிளிநொச்சி வரையான தரைப்பகுதியில் படையினர் நிலைகொண்டிருப்பது போன்றவற்றால் புலிகளின் வன்னித் தளத்தை முற்றுகையிட்டிருப்பது போன்ற பல காரணிகள் புலிகளைப் பலவீனப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கை அரசுக்கு ஊட்டியிருக்கின்றன.

இந்த நம்பிக்கைகள் எத்தனை தூரம் நிலையானவை என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், தற்போதைக்கு அரசுக்கும் படைகளுக்கும் நம்பிக்கை தருவதாக உள்ளன.

22.04.96 அன்று யாழ்ப்பாணத்தில் படையினர் நடத்திய கலை நிகழ்ச்சிகளில் கூட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இவையெல்லாம் மக்கள் தம் பக்கம் வருகிறார்கள் என்று அரசையும், படையினரையும் உற்சாகம் கொள்ளச் செய்யக் கூடும். **அரசியல் தீர்வு என்பதெல்லாம் புலிகள் மட்டுமே கேட்கின்ற ஒரு விடயம். புலிகள் இல்லையானால், அல்லது புலிகளை முடக்கிவிட்டால் கொடுக்க** முடிந்ததை கொடுக்கலாம் என்று அரசுகூட நினைக்கலாம்.

இவ்வாறான சூழலில் தாமாக புலிகளை பேச்சுக்கு அழைக்கவோ, புலிகள் தம் நிலைப்பாட்டை உரத்து வைக்கக்கூடிய நிலையில் பேச்சை நடத்தவோ அரசு விரும்பப்போவதில்லை.

எனவே- புலிகள் தாமாக முன்வந்து, அரசியல், இராணுவ பலவீனத்துடன் பேச்சு நடத்தக்கூடிய சூழ்நிலையை தோற்றுவிக்கவே அரசு காய்களை நகர்த்தும்.

இன்னொரு விடயம் தற்போதைய நிலையில் சர்வதேச மத்தியஸ்தத்தை அரசு ஏற்றுக்கொண்டால் புலிகள் அரசுடன் சமபலத்தில் இருக்கிறார்கள் என்று அங்கீகரிப்பதாகி விடும்.

சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் புலிகளின் அரசியல், இராணுவ மதிப்பையும் உயர்த்துவதாகிவிடும்.

சமபலமான தரப்புடன் பேச்சு நடத்துவதானால் தீர்வும் அதற்கேற்பவே அமைய வேண்டும்.

ஆனால், அரசியல்தீர்வு யோசனைகளில் உள்ள விடயங்களே சிக்கலுக்குரியதாக இழுபடும்போது, இவற்றுக்கு மேலான ஒரு தீர்வை அரசால் வழங்க முடியாது.

**எனவே- அரசாங்கம் விரும்புவது சர்வதேச மத்தியஸ்தம் அல்ல. புலிகளை பணிவோடு பேச்சுக்கு வரச்செய்யத்தக்க சர்வதேச, உள்நாட்டு நிர்ப்பந்தம்தான்!**

அதற்கேற்பத்தான் அரசாங்கம் சர்வதேச அரங்கிலும், உள்நாட்டிலும் காய்களை நகர்த்தும். தனது அரசியல், இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

புலிகளுடன் பேச இரகசிய முயற்சிகள் என்ற நகர்வுக்கே இடமில்லை.

இவையனைத்தையும் புலிகளும் உணர்ந்தே உள்ளனர்.

அரசின் இராஜதந்திர முஸ்தீபுகளை முறியடிக்க புலிகளும் சர்வதேசரீதியாகவும், உள்நாட்டிலும் அரசியல் இராணுவ நகர்வுகளை மேற்கொண்டே வருகின்றனர்.

**ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கூட்டத்தில் 53 அமைப்புக்களை திரட்டி இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவிக்க முடிந்தமை புலிகளின் சர்வதேச முயற்சிகளுக்கு கிடைத்த ஒரு வெற்றிதான்.**

அரசு என்னதான் பிரசாரம் செய்தாலும், இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் இணைத்து தீர்வு பற்றிப் பேசினாலும் புலிகள்தான் தீர்க்கமான சக்திகள் என்பதை நிரூபிக்கும் வகையில் கெரில்லாத் தாக்குதல்களை தீவிரப்படுத்துவதே புலிகளுக்குள்ள ஒரே வழி.

சமபதாக்குதல்களில் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கு ஏற்ப புதிய உறுப்பினர்களை தயார் படுத்தும் பயிற்சிகள் வன்னியிலும், கிழக்கின் காடுகளிலும் புலிகளால் நடத்தப்பட்டு வருகின்றன.

**தற்போதைய நெருக்கடிகளை தமது இயக்கத்தின் உளவியல் பலம் மூலமும், திட்டமிட்ட கெரில்லா தாக்குதல்கள் மூலமும் வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார் பிரபாகரன்.**

பலவீனமான நிலையில் பேச்சுக்கு செல்வதும் கூடாது. செல்லவேண்டிய தேவையும் ஏற்படாது என்பதுதான் பிரபாகரனின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கிறது.

இந்தியப் படையை வெற்றி கொள்ளக் காரணமாக இருந்த மன உறுதியை தமது உறுப்பினர்களுக்கு நினைவூட்டுகிறார்கள் புலிகள்.

அதேசமயம் தற்போதைய நெருக்கடியில் மக்களின் சலிப்பைக் கண்டு புலிகள் பொறுமை இழந்தும் காணப்படுகின்றனர்.

வன்னியில் இருந்து படகுகளில் புறப்பட்ட மக்களை கடற்புலிகள் துரத்திப் பிடித்தனர். பின்னர் "எங்காவது போய்த் தொலையுங்கள் நீங்கள் எல்லாம் துரோகிகள்" என்று கூறிவிட்டுப் போய்விட்டனராம்.

அதுமட்டுமல்லாமல் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்தபோது தீவிர ஆதரவாளர்களாக இருந்தவர்கள் சிலர் படையினரைப் பாராட்டத் தொடங்கியிருப்பதும் புலிகளுக்கு அதிர்ச்சிதான். வணபிதா தோமஸ் சௌந்தரநாயகம் கூட படையினரை சமீபத்தில் பாராட்டியிருக்கிறார்.

முன்னர் பூநகரியில் இருந்து படையினர் விலக வேண்டும் என்று புலிகள் கூறியபோது அதனை பலமாக ஆதரித்தவர் வணபிதா தோமஸ் சௌந்தரநாயகம்.

ஆனால் இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்தபோதும் இவ்வாறான

—நாரதர்—

சூழலை புலிகள் எதிர்கொண்டனர் என்பதால் இதொன்றும் புதுமையல்ல.

படையினரின் நடவடிக்கைகள் ஒரு வரையறைக்குப் பின்னர் தமக்கு மக்களின் ஆதரவை திரட்டித் தரும் என்பதுதான் புலிகளின் நம்பிக்கையாக இருக்கிறது.

அதேசமயம், வடக்கில் மேலோட்டமாக கவனம் செலுத்திக்கொண்டே கிழக்கிலும், வன்னியிலும் தமது பிரதான அணிகளை களத்தில் இறக்குவதுதான் பிரபாவின் உடனடித் திட்டம் என்று தெரிகிறது.

கிழக்கில் பாரிய தாக்குதலுக்கு புலிகளின் அணிகள் தயாராகிவருகின்றன. இதேவேளை இராணுவத்தினருக்கும் புதிய படை நகர்வுகளுக்கு ஆயத்தமாவதாக தெரிகிறது.

இராணுவத் தளபதியும் சமீபத்தில் வெளிநாடு சென்று திரும்பியிருக்கிறார்.

அரசின் உறுதியான நோக்கம் இதுதான், புலிகளை பணியவைக்க சர்வதேச நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது இல்லையெனில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் சர்வதேச அனுதாபத்தை தன் பக்கம் வைத்துக்கொள்வது. ஆக, ஏட்டிக்குப் போட்டியான உத்திகளில் இரு தரப்பும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. ■

## அதிரடி அய்யாத்துரை



***யாழ்ப்பாணத்தில்*** பழைய சட்டத்தரணிகள் பலருக்கு மறுபடியும் யோகமாம். கறுப்புச் சட்டைகளை தூசுதட்டிப்போட்டுக் கொண்டு கோர்ட்டுக்குப் போகினமாம். கசிப்பு கேஸ் மட்டும் நாற்பது நடந்திருக்குதாம். குற்றவாளிகள் எண்டு தெரிந்தால் அவை சார்பாக ஆஜராகக் கூடாது என்பது முன்னர் ரெண்டு எழுத்தாரின் சட்டம். குற்றவாளிகள் எண்டு தெரிஞ்ச கொண்டே வாதாடி வித்தை காட்டறதுதானே குஷி எண்டு இப்போது கிளம்பியிருக்கினமாம் கறுப்புச் சட்டைக்காரர்கள்.

***திருமலையில்*** ஆசிரியைகள் கைது செய்யப்பட்டது தெரிந்த செய்தி. போட்டுப் பின்னி எடுத்தனராம். முதுகெல்லாம் பட்டை பட்டையாகக் காயம். முன்னாள் ரெண்டு எழுத்துக்காரர் ஒருவர் தகவல் கொடுத்தவராம். தகவல் கொடுத்தது மட்டுமில்லை, சம்பந்தம் இருப்பதை ஒரு ஆசிரியை மறுத்தபோது, "ஏண்டி சாப்பாடு தந்துபோட்டு பொய் சொல்லுறாய்?" எண்டு கேட்டு அவரே விட்டாராம் அறை! அதில் ஒரு ஆசிரியை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அவரது சகோதரி ரெண்டு எழுத்தாரோடு இருக்கிறார். யாழில் ரெண்டு எழுத்தார் வீட்டுக்கு வந்தால் ஆசிரியை சாப்பாடு கொடுத்து உபசரிப்பாராம். மலைக்கு மாற்றலாகி வந்தபின்னரும் வீடு தேடி வந்தால் சாப்பாடு கொடுப்பாராம். அப்படி வந்து சாப்பிட்டவர்தான் மாட்டிவிட்டிருக்கிறார். சாத்துப்படியும் தன் கையால் கொடுத்திருக்கிறார்.

***மற்றுமொரு*** திருமலைச் செய்தி: மனைவிக்கு பூசைசெய்து உயிரோடு புதைத்த ஐயர் யாழில் பூசை செய்த கோயில் ரெண்டு எழுத்தார் நடமாடும் பகுதியாம். விஷயம் அறிந்தால் ரெண்டு எழுத்தார் 'போட்டுத் தள்ளிப்போடுவினம்' எண்டுதான் பொலிசாரிடம் போய் பொசுக்கென்று சரணடைஞ்சவராம். பூசகர் சார்பிலே எந்தப்புண்ணியவான் ஆஜராகப் போகிறாரோ தெரியேல்லை!

***யாழ் நகருக்குள்*** கடும் பாதுகாப்பு என்பது சரிதான். அதிலும் ஓட்டைகள் இல்லாமல் போகுமோ? நகரக் கடைகளில் வசூல் செய்கினமாம் ரெண்டு எழுத்தார். சமீபத்தில் ஒரு கடையில் பத்தாயிரத்தை உரிமையாளர் பவ்வியமாய் நீட்ட, பற்றுச்சீட்டில் முத்திரை குத்திக் கொடுத்துப்போட்டு போச்சினமாம் ரெண்டு எழுத்தார். நண்பர் ஒருத்தர் கண்ணால் கண்டுபோட்டு விறைச்சுப் போனார்.

***கிட்டருடன்*** கப்பலில் பிடிபட்ட ஆட்களை ஹொண்டுராசுக்கு அனுப்பச் சொன்னது நீதிமன்றம். அயலக அரசு அவர்களை இங்கே அனுப்பத் திட்டமிட்டு அலுவல் பார்த்ததாம். விஷயம் அறிஞ்சு நீதிமன்றில் தடைபோடக் கேட்கப்பட்டுள்ளது. அந்தளவுக்கு நம்நாட்டு அரசுடன் ஒட்டு. ரெண்டு எழுத்தாருடன் கசப்பு. இங்கே சிலர் என்னடாவென்றால் ரெண்டு எழுத்தாரின் ஆலோசகர் அயலகத்தில் சிகிச்சை பெற்றார் எண்டு சூப்பர் டூப் விடுகினம். எங்கே போய் தலையை இடிக்கிறது?!

***வெளிநாட்டு ஏஜென்சிக்காரர்களிடம்*** பிள்ளைகளை பொறுப்புக் கொடுத்துப்போட்டு பெற்றோர்கள் காத்திருப்பினம். பிள்ளைகள் உரிய நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தாச்சோ எண்டு கேட்டால் ஒரு நாளைக்கு ஒரு இடத்தின் பெயரைச் சொல்லி அங்கு நிற்கிறார் இங்கு நிற்கிறார் எண்டு சொல்வது வழக்கம். அதுமாதிரி ரெண்டு எழுத்தாரின் ஆலோசகர் பற்றியும் வதந்தி பரப்பப்படுகிறது. இலண்டனில் நிற்கிறார் எண்டு ஒரு செய்தி; பாரிசில் நிற்கிறார் எண்டு இன்னொரு செய்தி: சேச்சே மெக்ஸிக்கோவில் நிற்கிறார் எண்டு மற்றொரு டூப்பு. ஆலோசகர் என்ன ஏஜென்சிக்காரர் ஏற்பாட்டில் புறப்பட்டு இடைவழியில் தொங்கிக்கொண்டிருக்கிறார் எண்டு எண்ணமோ?

***உள்ளாட்சித் தேர்தல்*** வடக்கு-கிழக்கில் வரும் எண்டு தெரிஞ்ச உடனே பட்டியலுக்கு ஆள் தேடும் படலங்கள் சூடுபிடிச்சிருக்காம். கட்சி மாறும் பட்சிகளுக்கு நல்ல கிராக்கி. செலவுக்கு எந்தக் கட்சி கூடுதலான பணம் தரும் வசதியில் இருக்குது எண்டு ஆராயினமாம் பட்சிகள். இருந்து பாருங்கோ பலர் நிறத்தையும் லேபிளையும் மாற்றிக்கொண்டு இந்த முறை கும்பிடு போடுவினம்.

***ஐசக் வோல்ட்டன்*** சொன்ன பொன்மொழி- தற்காலத்துக்கு ஏற்றது.

***"ஆண்டவனுக்கு***
***இரண்டு***
***உறைவிடங்கள் உண்டு!***
***ஒன்று: சொர்க்கம்;***
***மற்றொன்று:***
***நன்றியுள்ள மனிதனின் இதயம்!"*** ■



படிப்பகம்

www.padippakam.com

126

# அன்னம்மாவின் உண்ணாவிரதமும் இந்தியப் படையின் தந்திரமும்

அற்புதன் எழுதுவது

அரசியல் தொடர்

### அன்னையர் முன்னணி

1988ல் நடைபெற்ற முக்கிய நிகழ்வு அன்னை பூபதியின் உண்ணா நோன்பு.

மட்டக்களப்பிலும் இந்தியப் படையினரின் அத்துமீறல்கள் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தன.

தேடுதல் வேட்டை என்ற பெயரில் வீடு வீடாகப் புகுந்து அத்துமீறல்களில் ஈடுபட்டனர். புலிகள் என்று சந்தேகிக்கப்பட்ட இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு மாமாங்கேசுவர் ஆலயத்துக்குள் ஒருநாள் இந்தியப் படையினர் தட தடவென்று புகுந்தனர். பூட்ஸ்களைக்கூட கழற்றவில்லை.

உள்ளே இருந்த அர்ச்சகர் பயந்து போனார். இந்தியப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அர்ச்சகரும், கோயில் ஊழியர்களும் துப்பாக்கியின் பின்புறத்தால் தாக்கப்பட்டனர்.

புலிகள் ஆயுதங்களுடன் கோவிலுக்குள் புகுந்துவிட்டனர் என்று கருதியே தேடுதல் நடத்தப்பட்டது.

ஆனால் புலிகள் யாரும் அங்கே மாட்டவில்லை. 'புலிகள் வந்தால் தகவல் தாருங்கள்' என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டனர்.

கைதுகள், பாலியல் பலாத்காரங்கள், படுகொலைகள் போன்றவற்றால் மட்டக்களப்பு மக்கள் கொதித்துப் போயிருந்தனர்.

அன்னையர் முன்னணியினர் இந்தியப் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்கள்.

அத்துமீறல்கள் கட்டுப்படுத்தப்படும் என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டது. ஆயினும் அத்துமீறல்கள் தொடர்ந்தன.

மட்டக்களப்பு நகரில் வெள்ளைப் பாலத்தில் சென்றுகொண்டிருந்த இளம் பெண்கள் இருவரை இந்தியப் படையினர் கைதுசெய்தனர்.

அருகில் உள்ள கடையொன்றுக்குள் அவர்களைக் கொண்டுசென்று பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினார்கள்.



அன்னை பூபதி

# அறப்போரில் குதித்த அன்னை பூபதி!

அதன் பின்னர்தான் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க முடிவு செய்தனர் மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினர்.

### மக்கள் ஆதரவு

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவிலின் முன்பாக அன்னையர் முன்னணியினரின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.

மட்டக்களப்பு மக்களும், மாணவ, மாணவிகளும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினார்கள்.

உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இலங்கை இராணுவத்தினர் மட்டக்களப்பு சந்தையில் மக்கள்மீது தாக்குதல் நடத்தினார்கள்.

மக்கள் பயந்துபோய் சிதறி ஓடிய போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இலங்கை இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியபோது இந்தியப் படையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இச் சம்பவத்தின் காரணமாக தமது உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர் உண்ணாவிரதப் போராட்டமாக மாற்றிக் கொண்டது அன்னையர் முன்னணி.

**"போர் நிறுத்தம் செய்யவேண்டும்"**

**"விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்"**

என்னும் இரு கோரிக்கைகளை முன்னவத்தே உண்ணாவிரதம் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு உட்பட வெளிநாடுகள் பலவற்றில் இந்த உண்ணாவிரதப் போராட்டச் செய்தியை எட்டச் செய்தனர் புலிகள் இயக்கத்தினர்.

ஆரம்பத்தில் இந்தியப் படையினர் அலட்சியமாக இருந்தபோதும், உண்ணாவிரதப் போராட்டம் தீவிரமாகிக் கொண்டிருந்தமையாலும், வெளியுலகக் கவனத்தை திருப்பத் தொடங்கியதாலும் அச்சம் அடைந்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு புதுடில்லியில் இருந்து இந்திய அமைதிப் படைத் தலைமைக்கு உத்தரவு பறந்து வந்தது.

1988 ஜனவரி 7ம் திகதி அன்னையர் முன்னணியினருடன் திருக்கோணமலையில் இந்தியப் படை அதிகாரி பிரிகேடியர் சண்டேஸ் பேச்சு நடத்தினார்

"புலிகளிடம் ஆயுதங்களை ஒப்படைக்கச் சொல்லுங்கள். அதன்பின்னர் போர் நிறுத்தமும் செய்யலாம், பேச்சும் நடத்தலாம்" என்று கூறினார் பிரிகேடியர் சண்டேஸ்.

### தூதருடன்பேச்சு

பேச்சுவார்த்தை முறிந்தது. உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தது.

இந்தியத் தூதுவர் திக்ஷித் அன்னையர் முன்னணியினரை பேச்சு நடத்த அழைத்தார்.

பெப்ரவரி 10 ம் திகதி கொழும்பில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆயுத ஒப்படைப்புப் பற்றியே திக்ஷித்தும் வலியுறுத்தினார். அதனால் பேச்சுப் பயனளிக்கவில்லை.

பேச்சுக்கள் பயனளிக்காமையால் மிரட்டலில் ஈடுபட்டனர் இந்தியப் படையினர்.

'புலிகள் தூண்டிவிட்டுத்தான் இவர்கள் உண்ணாநோன்பு இருக்கிறார்கள். மிரட்டினால் பயந்துவிடுவார்கள்' என்று நினைத்து விட்டனர்.

பெப்ரவரி 12, 13, 14ம் திகதிகளில் மட்டக்களப்பில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. மாமாங்கப் பிள்ளையார் கோவில் பகுதியில் இந்தியப் படையினர் குவிந்தனர்.

உண்ணாவிரதம் இருந்த பெண்களை எழுந்து செல்லுமாறு கூறினார்கள். மிரட்டலுக்குப் பணியாமல் உண்ணாவிரதம் தொடர்ந்தது.

அன்னையர் முன்னணியின் ஆலோசகரான கிங்ஸ்லி இராசநாயகத்தின் வீட்டை முற்றுகையிட்டு அவரைக் கைது செய்தனர்.

இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சற்றும் மனம் தளராமல் செயற்பட்டனர் அன்னையர் முன்னணியினர்.

### சாகும்வரை உண்ணாவிரதம்

உண்ணாவிரதப் போராட்டத்தை சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டமாக தீவிரப் படுத்தப்போவதாக அறிவித்தனர்.

சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க பூபதி கணபதிப்பிள்ளை, அன்னம்மா டேவிட் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு வந்தனர்.

இருவருமே இணைபிரியாத தோழிகளாக அன்னையர் முன்னணியின் போராட்டங்களில் ஈடுபட்ட அன்னையர்.

அன்னையர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை.

"நான் முதலில்" என்று இருவருமே விடாப்பிடியாக நின்றமையால் சீட்டுக் குலுக்கிப்போட்டு தெரிவு செய்வதாக முடிவு செய்யப்பட்டது.

அன்னம்மா டேவிட்டின் பெயர்தான் வந்தது. அன்னை பூபதிக்கு கவலை.

பெப்ரவரி மாதம் 19ம் திகதி மாமாங்க ஆலயம் முன்பாக அன்னம்மா டேவிட் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

அன்னம்மாவுக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதங்கள் பல இடங்களில் நடை பெற்றன.

தமிழ்ப் பெண்கள் மட்டுமல்லாமல் முஸ்லிம் பெண்களும் அன்னம்மாவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

அன்னம்மா டேவிட் உயிரிழந்தால் அன்னையர் முன்னணியினரே அவரது மரணத்திற்கு காரணம் என்று கைது செய்வோம். சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று மிரட்டியது இந்தியப் படை.

எந்த மிரட்டலும் பயனில்லாமல் போனதால் தந்திரமான ஒரு திட்டத்தைப் போட்டனர் இந்தியப் படையினர்.

அன்னம்மாவின் பிள்ளைகளை அழைத்து நைசாகப் பேசி, ஆசை காட்டியும், தாயார் மீதுள்ள பாசத்தைப் பயன்படுத்தியும் அவர்கள் மூலமாக கடிதம் ஒன்று எழுதுவித்தனர்.

"எங்கள் தாயாரை கட்டாயப்படுத்தி உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தி இருக்கின்றனர். தயவு செய்து எங்கள் தாயாரை மீட்டுத் தாருங்கள்" என்று கடிதம் பெறப்பட்டது.

அக் கடிதத்துடன் வந்த இந்தியப் படையினர் அன்னம்மாவைக் கொண்டு சென்று விட்டனர்.

தங்கள் திட்டம் பலித்ததில் இந்தியப் படை அதிகாரிகளுக்கு நிலைகொள்ளாத மகிழ்ச்சி.

உண்ணாவிரதப்போராட்டத்தை நிறுத்தியது மட்டுமல்லாமல் அன்னையர் முன்னணியினரையும் அடக்கியாகிவிட்டது?



பிரச்சனை தீர்ந்தது என்று நினைத்தனர்.

அவர்களது கணிப்பும், நினைப்பும் தப்பாகியது.

### அன்னை பூபதி

"அன்னம்மா போனால் என்ன, நான் இருக்கிறேன்' என்று சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார் அன்னை பூபதி.

அன்னம்மா டேவிட்போல தன்னையும் இந்தியப்படையினர் பிடித்துவிடலாம் என்பதால், முன்கூட்டியே ஒரு கடிதம் எழுதினார் அன்னை பூபதி.

"நான் எனது சுயவிருப்பத்தின் பேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருக்கிறேன். நான் நினைவிழந்து போகும் நிலை ஏற்பட்டாலும் என்னுடைய கணவரோ, பிள்ளைகளோ, உறவினர்களோ என்னைக் காப்பாற்றவோ, தூக்கிச் செல்லவோ அனுமதிக்கக்கூடாது" என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் அன்னை பூபதி.

மார்ச்-19,1988 அன்று தன் இருகரங்களையும் கூப்பியவாறு மாமாங்க வீதியை வலம் வந்தபின்னர் தன் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார் அன்னை பூபதி.

அப்போது அங்கு திரண்டு நின்ற மாணவ, மாணவிகள் இந்தியப் படையினருக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார்கள்.

**"இந்தியப் படையே திரும்பிப் போ"**

**'அன்னை பூபதியை சாகடிக்காதே'**

**'புலிகளுடன் பேச்சு நடத்து'**

**'தமிழீழத்தை சுடுகாடாக்காதே'**

போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

வடக்கு-கிழக்கில் பல்வேறு கிராமங்களில் அன்னை பூபதியின் போராட்டத்துக்கு ஆதரவாக உண்ணாவிரதங்கள் நடைபெற்றன.

மட்டக்களப்பு ஆரையம்பதியில் இருந்து புறப்பட்ட அன்னையர் முன்னணி ஊர்வலம் இந்தியப் படையினரின் தாக்குதலுக்கு உள்ளானது. தாய்மார்கள் பலர் காயமடைந்தனர்.

எரியும் நெருப்புக்கு எண்ணெய் வார்ப்பதுபோல அமைந்தது இச்சம்பவம்.

இந்திய இராணுவ நடவடிக்கையை கண்டித்து மட்டக்களப்பில் ஹர்த்தால் நடத்தப்பட்டது.

### மறுபடி மிரட்டல்

அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போராட்டம் எழுச்சியடையத் தொடங்கி விட்டது.

எங்கும் பேராதரவு கிளர்ந்தெழுந்து விட்டது.

மீண்டும் இரகசிய சதித்திட்டம் ஒன்று வகுத்தனர் இந்தியப் படையினர்.

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அன்னை பூபதி உண்ணாவிரதம் இருக்கிறார். உண்ணாவிரதப் பந்தலில் சர்வமதப் பாடல்களையும் பாடியபடி அமர்ந்திருக்கின்றனர்.

அப்போது இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் ஓட்டமும், நடையுமாக உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்தார்.

பரபரப்பாக ஒரு தகவலைச் சொன்னார் அந்த அதிகாரி.

"பூபதியைக் கடத்த புலிகளுக்கு எதிரான இயக்கங்கள் திட்டமிட்டிருக்கின்றன. கவனமாக இருங்கள்" என்றார் அந்த அதிகாரி.

அப்படிச் சொன்னால் பயந்துவிடுவார்கள். உயிரபாயம் நேரும் என்று அன்னையர் அஞ்சுவார்கள் என்று கருதியே கூறினார்.

ஆனால் நடந்ததோ நேர்மாறான நிகழ்ச்சி.

அன்னையர்கள் பலர் ஒன்றாகத்திரண்டு பூபதியைச் சுற்றி நின்றுகொண்டனர்.

"எங்களைச் சுட்டுப்போட்டு விட்டுத்தான் அன்னை பூபதியைத் தொடமுடியும்" என்று கூறினார்கள்.

அப்போது தொலைவில் துப்பாக்கிகளின் வேட்டொலிகள் கேட்கின்றன.

மக்களை பீதிகொள்ளச் செய்யும் திட்டத்துடன் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகமே அதுவாகும்.

துப்பாக்கி வேட்டொலி கேட்ட அன்னை பூபதி எழுந்து அமர்ந்துகொள்கிறார்.

"துப்பாக்கி மிரட்டல்களுக்கு இந்தப் பூபதி அசையமாட்டாள்" என்று சொல்கிறார்.

ஆனாலும் பூபதியின் உடல் நிலை மோசமாகிவிட்டது. களைத்துப்போய் சுருண்டு கிடக்கிறார்.

மருத்துவர்கள் பரிசீலிக்கின்றனர். அபாயக்கட்டத்தை நெருங்குகிறார் என்று அறிவிக்கின்றனர்.

எங்கும் செய்தி பரவுகிறது. சர்வதேசப் பத்திரிகையாளர்கள் மட்டக்களப்பில் குவிகிறார்கள்.

இந்தியப் படையினரின் கோபம் எல்லை மீறுகிறது.

### இறுதி நாள்

வணபிதா சந்திரா பெர்னாண்டோ, கிங்ஸ்லி இராசநாயகம், பூபதியின் கணவர் கணபதிப்பிள்ளை ஆகியோர் இந்தியப் படையினரால் கைது செய்யப்படுகின்றனர்.

கணபதிப்பிள்ளையிடம் நயமாகவும், பதமாகவும் பேசிப்பார்க்கிறார்கள் படை அதிகாரிகள். அவர் மசியவில்லை என்பதால் மிரட்டியும் பார்க்கிறார்கள்.

பயனில்லை. அன்னை பூபதியைக் காண மக்கள் வெள்ளம் மாமாங்க வீதியில் திரள்கிறது.

### எங்கும் சோகமயம்

இந்தியப் படை வாகனங்கள் ஓடித் திரிகின்றன. துப்பாக்கிகளோடு ரோந்து செல்லும் படையினரை கோபாவேசத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

உண்ணாவிரதம் ஆரம்பித்து 31வது நாள்! மொத்தம் 31 நாட்கள் உண்ணாவிரதம் இருந்த அன்னை பூபதியின் இறுதி நாள் அதுதான்.

19.04.88ல் அன்னை பூபதி மரணத்தை அணைத்துக் கொள்கிறார்.

மக்கள் கடல் மத்தியில் அன்னை பூபதியின் இறுதி ஊர்வலம் நடந்தது.

நாவலடிக் கடற்கரையில் அந்த அன்னையின் திருவுடலைக் காண அலை கடலுக்கு போட்டியாக மக்கள் கடலும் திரண்டு வந்தது.

அன்னை பூபதியின் நினைவு நாளை புலிகள் இயக்கத்தினரும், வெளிநாடுகளிலுள்ள தமிழ் அமைப்புக்களும் ஆண்டு தோறும் அனுஷ்டித்து வருகின்றனர்.

அன்னை பூபதியின் மரணம் பற்றி புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் கருத்து இது:

"ஒரு சாதாரண தாயின் அசாதாரண துணிவாகவும், அலாதியான தேசியப் பற்றுணர்வாகவும் அன்னையின் அறப்போர் அமைந்தது. தர்மத்தின் குரலாக, தனித்து நின்று அவர் ஒரு சாம்ராஜ்யத்தின் அதர்மத்தை எதிர்த்தார். நீதியின் நெருப்பில் தன்னை எரித்து அநீதிக்குச் சவால் விடுத்தார்.

சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள் எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றவர்கள். அன்னை பூபதியும் ஒரு சரித்திரத்தைப் படைத்தார். தனித்துவமான, காலத்தால் அழியாத சரித்திரத்தைப் படைத்தார்."

பூபதி அன்னையின் நினைவாக ஒரு கவிஞர் எழுதியது இது:

**"அகராதியில்**
**அழித்தெழுதிக் கொள்ளுங்கள்**
**பூபதி அம்மா**
**ஒரு பெண்ணின் பெயரல்ல..**
**பூகம்பத்துக்குப் புதுப்பெயர்**
**இவள்**
**காலக்குரலுக்கு**
**சேலை கட்டிய தோற்றம்"**

அன்னை பூபதி நினைவுதின சுவரொட்டியில் மற்றொரு கவிதை;

**"நெஞ்சில் விடுதலை**
**நெருப்பைச் சுமந்து**
**நீதி கேட்டிவள் நிமிர்ந்தாள்**
**பஞ்சில் பொறியெனப்**
**பாரதப் படைகளை**
**பார்த்து விழிகளைத் திறந்தாள்"**

(தொடர்ந்து வரும்)



வாரமலர் தினமுரசு

ஏப்.27—மே.03,1997

படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# தீர்வின்றித் தீருமா யுத்த செலவீனம்?

அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சென்று திரும்பிய நீதி, அரசியலமைப்பு அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இலங்கையில் புதிய அரசியலமைப்பு, புதிய தேர்தல் சட்டங்கள் என்பவைபற்றி செய்தியாளர் மாநாடொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இதுவரை மூன்று அரசியலமைப்புக்களைக் கண்டுள்ளது. இலங்கையின் விமோசனத்துக்கெனக் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் இந்த அரசியலமைப்புகள், இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் பெரும் பாதகமான பாதிப்புக்களையே ஏற்படுத்தியிருக்கக் காணப்படுகின்றன.

புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதில் தீவிரமாக இருக்கும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கடந்த கால அரசியலமைப்புகள் ஏற்படுத்திய தவறுகள் மீண்டும் ஏற்படலாகாது என்று கூறிவருகின்றார்.

நீதித்துறை, நிர்வாக விடயங்கள், தேர்தல் நடைமுறைகள், ஆட்சிமுறை என்பவை அனைத்திலுமே மாற்றங்களைக் கொண்டுவருவதே புதிய அரசியலமைப்பின் நோக்கமாகும் என்று பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

**புதிய அரசியலமைப்பென்பது ஆட்சியதிகார விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதைவிட இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதில் எவ்வளவு தூரம் பயன்மிக்க அம்சங்களைக் கொண்டிருக்குமென்பதே பிரதான கேள்வியாகவுள்ளது.**

புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும். அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டமொன்றைத் தயாரிப்பதும் பேராசிரியர் பீரிஸின் முக்கிய பணியாகவுள்ளது.

எனவே புதிய அரசியலமைப்பும், இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாகவும் அடுத்த நூற்றாண்டினுள் இலங்கையை உறுதியுடன் காலடி எடுத்து வைக்கச் செய்யவேண்டியவையாகவுள்ளன.

உலகில் தற்போது இடம்பெற்றுவருகின்ற மாற்றங்கள், ஒவ்வொரு இனத்தினதும் தனித்துவங்களை உறுதி செய்பவையாகவுள்ளன.

**இதுதவிர நாடொன்றினுள் கூட சுமுகமான- காத்திரமான நிலையொன்றைப் பேணுவதற்கு 'அதிகாரப் பகிர்வு' அதனோடிணைந்த சமஷ்டி நிர்வாக முறை என்பவற்றுக்கே கூடுதல் முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.**

இனப்பிரச்சினை சம்பந்தமான அரசியல் அணுகுமுறைகள் குறித்து ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே இணக்கப்பாடொன்று எட்டப்பட்டுள்ளதாக பிரசாரங்கள் செய்யப்பட்டதாயினும், நடைமுறையில் அதன் பயன்பாடு பூச்சியமாகவே இருக்கிறது.

இந்த இணக்கத்தையடுத்து முக்கிய திருப்பங்கள் அரசியல் அரங்கில் தென்படலாம் என்று கூறப்பட்ட ஊகங்களும், எதிர்பார்ப்புக்களும் தற்போது சற்றே ஓய்ந்திருக்கக் காணப்படுகிறது.

**அந்த இணக்கப்பாட்டையும்; அதற்குத் தெரிவிக்கப்பட்ட வரவேற்புக்களையும் பிரசாரம் செய்வதிலேயே அரசாங்கமும் அக்கறை காட்டியதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது:**

**"ஒத்துழைக்க முன்வந்தது உண்மைதான். ஆனால் நாம் எமது தரப்புக் கருத்துக்களையும், நிலைப்பாடுகளையும் வலியுறுத்தவே செய்வோம்!"** என்று எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பதுபோலவே அவரது கருத்து அமைந்திருக்கிறது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், செய்தியாளர் மகாநாட்டில் கருத்துவெளியிட்டபோது, வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இணைப்புத் தொடர்பாக தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தவேண்டியிருப்பதாகவும் பேராசிரியர் பீரிஸ் கூறியுள்ளார்.

**வடக்கு-கிழக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரை அவ்விரு மாகாணங்களினதும் இணைப்பின்றி ஏனைய விடயங்களில் வெற்றிகாண்பது கடினமாகும்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அனைத்து தமிழ் அரசியல் சக்திகளுமே வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்திநிற்கின்றன.

**வடக்கு-கிழக்கின் இணைப்பை அடிப்படையாக வைத்து வழங்கப்படாத ஒரு தீர்வு அரைகுறையான தீர்வாகவே இருக்கமுடியும். ஏனெனில் இவ்விரு பிரதேசங்களுமே இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியப் பகுதிகளாகவுமுள்ளன.**

எனவே வடக்கு-கிழக்குத் தமிழர்களின் பிரச்சினையை ஒரு விசேட பிரச்சினையாகக் கருதி அதற்குரிய தீர்வை தமிழ் அரசியல் கட்சிகளுடன் தேசியக் கட்சிகள் கலந்து பேசித் தீர்க்கவேண்டியதாகவுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் மாவட்ட அபிவிருத்தி சபை, மாகாணசபை போன்றவற்றை அறிமுகப்படுத்தித் தோல்வியைத் தழுவிய நிலையில், பிராந்திய சபை என்ற புதிய விடயம் பேசப்பட்டுவருகின்றது.

எத்தகையதொரு தீர்வுத்திட்டமும் வடக்கு-கிழக்குத் தமிழர்களின் மொழி, பிரதேச பாதுகாப்பு என்பவற்றையும், கல்வி, தொழில் அம்சங்கள் என்பவற்றையும் உறுதி செய்வதாகவும் அமையவேண்டியது அவசியமானதாகின்றது.

இலங்கையின் பொருளாதாரம் இனிவரும் காலங்களில் வளர்ச்சிப்பாதையை நோக்கியதாக இருக்குமென்று 'ராய்ட்டர்' செய்திச் சேவை தனது ஆய்வுகளை ஆதாரம் காட்டித் தெரிவித்துள்ளது. இக் கணிப்பு எந்தளவுக்கு சாத்தியப்படும் என்பது கேள்விக்குரியதாகிறது.

கடந்த ஆண்டு (1996) இலங்கை இராணுவச் செலவுகளுக்காக 50 பில்லியன் ரூபாக்களை ஒதுக்கி விட்டிருந்தது.

முப்படைகளுக்குமான ஆயுதத் தளபாடக்கொள்வனவு, யுத்தச் செலவுகள், படையினருக்கான கொடுப்பனவுகள் என்பவை இப் பெருந்தொகை ஒதுக்கீட்டில் அடங்கி இருந்தன.

கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஆயுதப் படையினரால் வடக்கே மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் ஒரு சூதாட்டம் போன்றதாகவே இருந்தன.



யாழ்ப்பாணக் குடாநாட்டை எவ்விதத்திலும் கைப்பற்றுவதென்பதே படையினரின் முழு முயற்சியாகவுமிருந்தது. இதற்கென யுத்த டாங்கிகள், மற்றும் இராணுவ வாகனங்கள் என்பவற்றைப் பெருமளவில் உபயோகித்ததுடன், விமானங்கள், கப்பல்கள் என்பவற்றையும் படையினர் பயன்படுத்தியிருந்தனர்.

ஆனால் தற்போது யாழ் குடாநாட்டில் மரபுப் போர் முறையை பெரிதும் மேற்கொள்ளும் அவசியமில்லாது கெரில்லாத் தாக்குதல்களை எதிர்பார்த்து தற்காப்பு யுத்தக் கட்டத்திலேயே படையினர் உள்ளனர்.

இந்நிலையில் மரபுப் போர்முறையொன்றுக்குப் போல பெருமளவில் பணச் செலவை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இலங்கை அரசுக்கு ஏற்படாது என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

தற்போது வடக்கிலும், கிழக்கிலும் நிலை கொண்டுள்ள படையினரைப் பேணுவதற்கும், புதிய ஆட்திரட்டல்கள், பயிற்சிகள் என்பவற்றை வழங்குவதோடு, நஷ்டஈடுகளுக்கும் பணத்தைச் செலவிட வேண்டியதாகவே அரசு காணப்படுகின்றது.

**இந்நிலையில் யுத்தச் செலவுகள் பெரிதும் கட்டுப்படுத்தப்படும் பட்சத்தில் பொருளாதாரம் நிச்சயம் வளர்ச்சிப்பாதையை நோக்கிச் செல்ல முடியும் என்ற கணிப்பின் அடிப்படையிலேயே 'ராய்டர்' ஆய்வுகள் அமைந்துள்ளன.**

இருந்தபோதிலும் ஓர் உறுதியான அரசியல் தீர்வு ஏற்படாத பட்சத்தில் இராணுவச் செலவுகளைப் பூரணமாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியாத நிலையே ஏற்படும்.

விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளின் தன்மையைப் பொறுத்தே அரசின் யுத்த செலவீனங்கள் தீர்மானிக்கப்படும் என்பதையும் மறுத்தலாகாது.

இலங்கை இராணுவத்தின் இன்றைய முக்கிய எதிரியாக எல்.ரி.ரி.ஈ. அமைப்பே இருந்து வருகின்றது. இந்த அமைப்பு, மரபுப்போர் முறையைக் கைவிட்ட நிலையில் முழு அளவில் கெரில்லாத் தாக்குதல்களையே மேற்கொண்டு வருகின்றது. கெரில்லாத் தாக்குதல்கள் மூலம் பாரிய பதிலடி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய திறன் வாய்ந்த அமைப்பாகவும் விடுத்லைப் புலிகள் விளங்குகின்றனர்.

யாழ் குடாநாட்டை அரசபடையினர் கைப்பற்றியுள்ள போதிலும் சிறிதும், பெரிதுமாக எல்.ரி.ரி.ஈ. அமைப்பு கடந்த ஒருவருடகாலத்தில் குறிப்பிடத்தக்க தாக்குதல்களை நடத்திவரக் காணப்படுகின்றது.

அண்மையில் கூட பேசாலைப் பகுதியில் படகொன்றில் சென்ற 5 கடற்படையினரும், 3 பொலிஸ்காரர்களும் எல்.ரி.ரி.ஈ.யினரால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இது தவிர வடமராட்சியில் நாகர் கோவில் என்ற இடத்தில் 10க்கு மேற்பட்ட படையினர் எல்.ரி.ரி.ஈ.யினரால் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்கள் மூலமாக படையினரிடம் உளச் சோர்வை மட்டுமல்லாமல், ஆயுத தளபாட இழப்புக்களையும் எல்.ரி.ரி.ஈ.யினர் ஏற்படுத்தி வருகின்றனர்.

**இந்நிலையில் அரசு. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கப்பாட்டை எட்டியதை ஒரு வெற்றியாகப் பிரசாரம் செய்வது மட்டும் தீர்வைக் கொண்டுவரப்போவதில்லை; போரால் ஏற்படும் பொருளாதார முன்னேற்றத்துக்கான முட்டுக்கட்டைகளை அகற்றப் போவதுமில்லை.**

எல்.ரி.ரி.ஈ. அமைப்பு உட்பட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் இனப்பிரச்சினைத் தீர்வு ஒப்பந்தமொன்று எப்போது செய்து கொள்ளப்படுகின்றதோ, அப்போதுதான் தீர்வை எட்டுவதில் பூரண வெற்றியைக் காணமுடியும்.

இதனை நன்குணராத வரையில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையும் 'விளலுக்கு இறைத்த நீராகவே' இருக்கும்.

## கெப்பிட்டிக் கொலாவலியில் ஒரு கெரில்லாத் தாக்குதல்



அடர்ந்த காடுவழியாக தாக்குதலுக்குச் செல்லும் அணி


20.12.96 அன்று காலை 7.45 மணியளவில் கெப்பிட்டிக்கொலாவ-பதவியா வீதியில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். கவசவாகனங்கள், டிரக் வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கள்களில் சென்ற படையினரை புலிகளின் கெரில்லாக்கள் தீடிரென்று சுற்றிவளைத்துத் தாக்கினர். காடு சார்ந்த பகுதியாக இருந்தமையால் முன்கூட்டியே பதுங்கி நிலை எடுத்து காத்திருந்தனர். வழக்கமாக காலையில் இப் பாதை வழியாகப் படையினர் ரோந்து செல்வதை அவதானித்தே இத் தாக்குதல் திட்டமிடப்பட்டது. தாக்குதலில் படையினர் 10 பேர் வரை பலியாகினர். கவசவாகனங்கள், டிரக் வண்டிகள் தீயிடப்பட்டன. புலிகள் தரப்பில் இழப்புக்கள் ஏற்படவில்லை. இச் செய்தி முரசில் அப்போதே வெளியானது. அத்தாக்குதலின்போது எடுக்கப்பட்ட படங்கள்தான் இங்கு காணப்படுகின்றன.



ஆற்றைக்கடந்து செல்லும்போது



தீக்கிரையான கவசவாகனம்



தாக்குதலுக்கு உள்ளான டிரக் தீயிடப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி 41

பாகம் 02

**கடந்த வாரம்**

**கொள்ளைக் கோஷ்டியில் முக்கியமானவளாகிவிட்டாள் பூலான். புத்லி பாயின் அவதாரம் என்று பூலானைப் பற்றி எல்லோருக்கும் சொல்கிறான் மல்லா. மல்லாவின் குரு ஸ்ரீராம். அவன் சிறையிலிருக்கிறான். அவனை விடுதலை செய்ய கொள்ளைகளில் ஈடுபடுகிறான் மல்லா. ஸ்ரீராம் யார் என்று தெரியாமலேயே அவனை வெறுக்கத் தொடங்குகிறாள் பூலான்....**

**இனி....**

தனது குருவான ஸ்ரீராம் விடுதலையாகப்போவது உறுதி என்று தெரிந்ததும் மல்லாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

கொள்ளைக் கோஷ்டியில் இருந்த போது ஸ்ரீராம் பயன்படுத்திய துப்பாக்கியை மல்லா பத்திரமாக வைத்திருந்தான்.

ஸ்ரீராம் விடுதலையாகப் போகிறான் என்றதும் அந்தத் துப்பாக்கியை வெளியே எடுத்து சுத்தப்படுத்தினான் மல்லா.

பூலானுக்கு எல்லாமே எரிச்சலாக இருந்தது. ஸ்ரீராம் விடுதலையாகப் போகிறான் என்ற செய்தி கேட்டதில் இருந்தே பூலானின் மனதில் மகிழ்ச்சி மறையத் தொடங்கியது.

துப்பாக்கியை சுத்தம் செய்து வைத்துவிட்டு பூலானின் அருகே வந்து அமர்ந்தான் மல்லா. அவள் தோளில் மெல்லத் தொட்டான்.

"ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்? என் மீது ஏதாவது கோபமா?"

"இல்லை!" என்றாள். அந்த இல்லையில் 'ஆம்' மறைமுகமாக இருந்தது.

"பொய் சொல்லாதே!" என்றான் மல்லா. மென்மையாக பூலானை தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். கைகளை அவள் உடம்பில் படரவிட்டான்.

"வேண்டாம், இன்று வேண்டாம்!"

"ஏன் வேண்டாம்? என் ராசாத்திக்கு இன்று என்ன நடந்தது?" என்று கேட்டபடியே கழுத்தில் முகம் புதைத்தவனை, பூலான் விலக்கினாள்.

"எனக்குத் தூக்கம் வருகிறது. ஏனோ தெரியாது சோர்வாக இருக்கிறது. இன்று வேண்டாம்," என்றாள் அழுத்தமாக.

அப்படியே படுக்கையில் மல்லாந்து சரிந்துவிட்டாள் பூலான். அப்படி மல்லாந்து படுத்திருக்க, அவள் விடும் மூச்சுக்கு ஏற்ப ஏறி இறங்கிய அழகுகள் மல்லாவை கிறங்கடித்தன. அப்படியே அணைத்துக்கொள்ள வேண்டும் போல் இருந்தது.

ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு பூலானின் கால்களைப் பிடித்து விரல்களில் சொடக்கு எடுத்துவிட்டான். அவன்

**தருவது ரசிகன்**

சொடக்கு எடுத்தது பூலானுக்கு சுகமாக இருந்தது.

கால்களை பதமாக வருடி பிடித்துவிட்டான். உடல் பிடித்துவிடுவதும் ஒரு கலை. மல்லாவுக்கு அக்கலை தெரிந்திருந்தது.

கால்களைப் பிடித்துவிட்ட கரங்கள் மெல்ல முன்னேறி தைரியமடைந்து முழங்கால்களுக்கு மேலேயும் சென்று பதமாகப் பிடித்துவிட ஆரம்பிக்க பூலானால் தன் பிடிவாதத்தைத் தொடர முடியவில்லை. அப்படியே மல்லாவின் கழுத்தைச் சுற்றி கரங்களைப் போட்டு தன்னை நோக்கி அவனை கவிழ்த்துக் கொண்டாள்.



ஸ்ரீராம் ஒடிசலான தேகத்துடன், இடுங்கிய கண்களுடன், சட்டென்று பார்த்தால் சற்றுக் கோணலாகத் தெரியும் உதடுகளுடன் இருந்தான். அவனது சகோதரன் லாலாராம் ஸ்ரீராமுக்கு நேர் மாறாக தொப்பை சகிதமான பெரிய உடம்போடு, பெரிய கண்களுடன், எப்போதும் சுருட்டும் வாயுமாக இருந்தான்.

இரண்டு பேரையுமே முதல் பார்வையிலேயே பூலானுக்கு பிடிக்காமல் போய் விட்டது.

விடுதலையாகி வந்த ஸ்ரீராமையும், லாலாராமையும் தடபுடலாக வரவேற்றான் மல்லா.

ஸ்ரீராமின் கால்களில் விழுந்து வணங்கிய மல்லா, பூலானையும் அழைத்தான்.

அதுவரை அவர்கள் இருவரது கண்களிலும் படாமல் மறைந்தும், ஒதுங்கியும் நின்று அங்கு நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள் பூலான்.

இப்போது மல்லா அழைத்ததும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. மல்லாமீது கோபமாக வந்தது. ஆனால் 'எப்படியாவது அவர்கள் கண்ணில் பட்டுத்தானே ஆகவேண்டும்! இங்குதானே இருக்கப் போகிறார்கள்,' என்று நினைத்துக் கொண்டே மறைவில் இருந்து வெளிப்பட்டாள்.

மல்லா 'பூலான்' என்று அழைத்ததுமே ஸ்ரீராமின் இடுங்கிய கண்களும் எதிர்பார்ப்பில் சற்றுப் பெரிதாகவே விரிந்துகொண்டன.

பூலானைப் பற்றி மல்லா தன் கடிதத்தில் புகழ்ந்து தள்ளியிருந்தான். அவள் பொலிஸ்காரனை சுட்டதையும், சண்டையில் பங்கேற்றதையும், கிராம அதிகாரியைச் சுட்டுக்கொன்றதையும் ஒரு கதைபோல விபரித்து எழுதியிருந்தான் மல்லா.

அப்போதிருந்தே- அவள் எப்படியிருப்பாள் என்று கற்பனையில் ஒரு தோற்றத்தை உருவாக்கி சில வக்கிரமான எண்ணங்களுடன் எதிர்பார்ப்பை வளர்த்துக் கொண்டான் ஸ்ரீராம்.

பெண்கள் விஷயத்தில் ஸ்ரீராம் மோசமானவன். எனினும் பூலான் தனக்குரியவள் என்பதால் ஸ்ரீராம் வரம்புமீறி நடந்துகொள்ள மாட்டான் என்றுதான் மல்லா நம்பியிருந்தான்.

ஸ்ரீராமின் கண்கள் பூலான்மீது மொய்த்தன. ஒரு கணம் தன்னை மறந்து உதடுகளைக் குவித்து விசிலடித்தான்.

பூலான் அவனை ஒரு நொடி, ஒரே ஒருநொடி மட்டுமே நிமிர்ந்து நேராகப் பார்த்தாள்.

அவன் கண்களால் தன்னை உரித்தும், உறுத்தும் பார்க்கும் வக்கிரம் உணர்ந்து மனதுக்குள் காறி உமிழ்ந்தாள்: தலையைக் குனிந்து கொண்டாள்.

"குருஜியின் காலில் விழுந்து வணங்கு பூலான்!" மல்லா பூலானுக்கு கேட்கும்படியாக மிக மெல்லச் சொன்னான்.

பூலானுக்கு அருவருப்பாக இருந்தது. மல்லாவின் உத்தரவை எதிர்க்க முடியாத தன் இயலாமையை நினைக்க அந்தரிப்பாகவும் இருந்தது.

சடாரென்று குனிந்து ஸ்ரீராமின் காலில் விழுந்து வணங்கினாள் பூலான். நெஞ்சுக்குள் அழுகை முட்டிக்கொண்டு வந்து நின்றது.

குனிந்துவிட்டு பூலான் நிமிர்ந்தபோது ஸ்ரீராமின் கை ஒன்று அவள் தோளைத் தொட்டது. பின்னர் தலையைத் தடவியது. அப்படியே இறங்கி முதுகை வருடியது.

அந்த வருடலில் நிச்சயமாக வாஞ்சை கிடையாது. 'இப்படி எத்தனை நாய்களைப் பார்த்துவிட்டேன்' என்று மனதுக்குள் கறுவியபடி அவன் கைபட்ட இடமெல்லாம் ஒரு புழு ஊர்ந்தது போல கற்பனை செய்து குமட்டல் வருவதுபோல உணர்ந்தாள் பூலான்.

'என் சந்தோசங்களை இந்த நாய் நிச்சயமாகக் குதறப்போகிறது!' என்று மட்டும் மனதுக்குள் குறித்துக் கொண்டாள் பூலான்.

"நீதான் பூலானா? குட்டி சோக்காகத்தான் இருக்கிறாய், வா, இப்படி என் பக்கத்தில் உட்காரு!" என்றபடியே கண்களால் கழுத்துக்குக்கீழே ஆர்வமாய் மேய்ந்தான்.

தானும் அமர்ந்துகொண்டு பூலானை தன் அருகே அமர இடம் கொடுத்தான்.

பூலான் அமரவில்லை. மல்லாவைப் பார்த்தாள். 'என் அப்பாவிக் காதலனே! உனக்கு இந்த மிருகத்தை இனம் காணத் தெரியவில்லையே! என்னை மீட்க மாட்டாயா?' என்பதுபோன்ற பார்வை அது.

பூலானின் இடது புஜத்தில் அழுத்தமாகப் பிடித்து "எங்கே ஓடப்பார்க்கிறாய்? இனி என்னோடுதான் நீ இருக்க வேண்டும். சிறையிலிருந்தே உன்னைப் பற்றி கற்பனை பண்ணிக்கொண்டுவந்தேன், வா.. அடி வாடி... என்ன பார்க்கிறாய்? மல்லாவுக்கு நான் அப்பன் மாதிரி, நீ எனக்கு மருமகள் தானே.. வாடி என் மருமகளே!"

இழுத்து தன் அருகே அமரவைத்தான். அவன் உடலில் இருந்து கெட்டவாசனையால் மூக்குச்சுளித்தாள் பூலான். அவளை தோளால் உரசியபடியே இருந்தான் ஸ்ரீராம்.

அது போதாது என்று ஸ்ரீராமின் சகோதரன்- அந்தக் குண்டன் லாலாராமும் எட்டத்தே நின்று பூலானை கண்களால் உரித்து உரித்து பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று கெட்ட மிருகங்கள் இருக்கும் காட்டுக்குள் தூக்கிவீசப்பட்டதுபோல இருந்தது பூலானுக்கு.

நேற்றுவரை எத்தனை சந்தோசமாக, எத்தனை குதூகலமாக இருந்தது.

இப்போது எல்லாம் போய்விட்டது. 'என் துர்க்கையம்மா, நல்ல பாதையைக் காட்டுகிறாய் என்று நினைத்தேன். பாதித் தூரத்தில் இப்படித் தூக்கி முட்புதர்மேல் என்னை எறிந்துவிட்டாயே தாயே!' என்று வருந்தினாள் பூலான்.

அன்று இரவு பூலானுக்கு மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது.

"குருஜி உன்னை அழைக்கிறார்; என்னவென்று கேள் போ!" என்று மல்லா சொன்னதும், முகத்தில் ஓங்கி அறை பட்டதுபோல நிலை குலைந்து போனாள் பூலான்.



பூலான்

மல்லாவும் தெரிந்துதான் தன்னை அவனுக்கு கொடுக்கப்போகிறானோ என்றும் பூலானுக்கு சந்தேகம் வந்துவிட்டது.

குருதட்சணை என்று பூலான் கேள்விப் பட்டிருக்கிறாள். அதனால் தன் உடம்பையும் ஸ்ரீராமுக்கு தட்சணையாகக் கொடுக்க மல்லா தயாராகிவிட்டானோ என்று நினைத்தபோதே கண்ணீர் பொல பொலவென்று அவள் கண்களிலிருந்து கொட்டத் தொடங்கிவிட்டது.

மல்லா- பூலான் அழுவதைப் பார்த்துவிட்டான். ஒன்றும் புரியாதவனாக பூலானின் தாடையைத் தொட்டு நிமிர்த்தி, "ஏன் இப்போது அழுகிறாய்? என்ன நடந்துவிட்டது! ஓ.. குருஜியைக் கண்டதும் பயந்துவிட்டாயா? முண்டம், முண்டம், குருஜி ரொம்ப நல்லவர் தெரியுமா? வெந்நீர் வைத்து குளிக்க வேண்டுமாம். அதுதான் கூப்பிடுகிறார். போ! நானும் பின்னால் வருகிறேன் போ. கண்ணைத் துடைத்துவிட்டுப் போ!"

'மல்லா! நீ ஏமாந்து கொண்டிருக்கிறாயா? அல்லது நீயும் சேர்ந்து என்னை ஏமாற்றுகிறாயா?' என்று கத்த வேண்டும் போல, மல்லாவின் சட்டையைக் கொத்தாகப் பிடித்து உலுப்ப வேண்டும்போல இருந்தது பூலானுக்கு.

பேசாமல் மல்லா சொன்னபடியே ஸ்ரீராம் இருந்த அறையை நோக்கிப் போனாள்.

போகும்போது மின்னலாக அந்த யோசனை எழுந்தது பூலானிடம்.

மல்லாவையும் ஸ்ரீராமையும் பிரிப்பது என்றால் நேரடியாக எதிர்ப்பதும், முரண்டு பிடிப்பதும் கூடவே கூடாது.

பாபு சிங் குஜாரை வெற்றிகொண்ட அனுபவத்தை ஸ்ரீராம் விடயத்திலும் கடைப் பிடிக்க நினைத்தாள் பூலான்.

ஸ்ரீராம் இருந்த அறைக்குள் பூலான் நுழைந்ததுமே பின்புறமிருந்து பக்கவாட்டில் இருந்து ஓர் உருவம் அசைந்தது போலிருந்தது.

அதனை உணர்ந்து பூலான் திரும்பிப் பார்ப்பதற்கு சந்தர்ப்பமின்றி பின்புறமிருந்து அவள் கட்டியணைக்கப்பட்டாள். உடம்பெங்கும் ஒரு வெறித்தனத்துடன் கைகள் பரவக் கண்டாள்.

பின்புறமாக நின்று அவளைக் கட்டி அணைத்துக்கொண்டே தன் கைகளை அவசர அவசரமாகப் பரவவிட்டுக் கொண்டு மூச்சிரைத்தான் ஸ்ரீராம்.

பூலான் அசையவில்லை.
பூலான் திமிறவில்லை.
பூலான் அஞ்சவில்லை.

விக்கிரம் மல்லா சொல்லிக் கொடுத்த பயிற்சியை நினைத்தாள்.

அப்படியே சற்று முன்னால் நகர்ந்து, அவன் கைகள் தன்மீது பரவிக்கொண்டிருப்பதைத் தடுக்காமல் மெல்ல உடலை முன்னோக்கிச் சரித்து, தன் இடக்காலை பின்புறமாய் மடக்கி, சட்டென்று நன்றாக உடலை முன்னோக்கி வளைத்தபடி குதிக் காலால் அவன் இடுப்புக்கு கீழே மையமாக உதைத்தாள்.

"ஹக்.. ய.யம்மா" என்றொரு முனகலுடன் பின்னோக்கிப் போய், உதைப்பட்ட பிரதேசத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்டான் ஸ்ரீராம்.

சட்டென்று திரும்பிய பூலான், குரலில் போலியான அப்பாவித்தனத்துடன், முகத்தில் வரவழைத்த பயத்துடன்,

"ஐயோ.. குருஜி நீங்களா?" என்றாள்.

**(தொடர்ந்து வரும்)**

# பெண் இயக்குநரின் 'ஃபயர்'

## நண்பிகளின் கதை

இந்தியப் பெண்கள் பலர் துணிச்சலான காரியங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டநேரம் இது. அவர்களின் பட்டியலில் தனது பெயரையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார் தீபா மேத்தா.

யார் இந்த தீபா மேத்தா?

திரைப்பட இயக்குநர். தற்போது வசிப்பது கனடாவில். ஏற்கனவே இரண்டு படங்களை இயக்கி வெளிநாடுகளில் அமோக மரியாதையை சம்பாதித்து வைத்திருக்கிறார்.

இப்போதும் மரியாதை ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை. இந்தியாவில்தான் பலத்த கண்டனங்கள்- அம்புகள்போல அவரை நோக்கிப்பாய்கின்றன.

ஏற்கனவே மீரா நாயர் என்னும் பெண் இயக்குநர் 'காமசூத்ரா' என்றொரு படம் எடுத்து சர்ச்சைகளில் சிக்கினார். 'தீவிரமான செக்ஸ்' என்று சில விமர்சகர்கள் முகம் கோணிக்கொண்டனர். பின்னர் அதுவே படத்துக்கு விளம்பரமாகி பிய்த்துக் கொண்டு ஓடியது.

இப்போது தீபா மேத்தாமீது விமர்சக தீவிரவாதிகள் குறிவைத்து கண்டனசெல்களை ஏவிக்கொண்டிருக்கிறார்கள்.

காரணம், தீபா மேத்தாவின் மூன்றாவது படமான 'ஃபயர்' ஒரு சர்ச்சைக்குரிய கதை.

ஒரே வீட்டில் வசிக்கும் இரண்டு நண்பிகள் ஒருவர்மீது ஒருவர் மையல் கொண்டு காதலாகி கசிந்துருகி நிற்பது தான் கதை.

வெளிநாடுகளில் வரவேற்றுவிட்டனர். இந்தியாவில்தான் விமர்சனங்கள்; வசை வீசல்கள் என்று ஏகப்பட்ட சர்ச்சைகள்.

சப்னா ஆஸ்மி என்னும் பிரபல இந்தி நடிகையும் நந்திதா கமலும் தோழிகளாக நடிக்கின்றனர். ஏ.ஆர். ரகுமான் இசையமைத்திருக்கிறார்.

"இதில் ஒன்றும் விரசம் கிடையாது.



இரண்டு பெண்கள் இணைந்து வாழ்வது தற்காலத்தில் நடக்காததும் அல்ல. குற்றம் சாட்டமுன்னர் என் படத்தைப் பார்க்கச் சொல்லுங்கள்," என்று கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் கூறுகிறார் தீபா மேத்தா.

"பெண்ணே பெண்ணை திருமணம் செய்வது, குடும்பம் நடத்துவது எல்லாம் வெளிநாடுகளில் சரிப்பட்டு வரலாம். நம் நாட்டுக்கு ஒத்துவராது, எனவே படத்தைத் தடை செய்ய வேண்டும்!" என்று குரல் எழுப்புகின்றனர் சிலர். "அந்தப் பழமைவாதிகள் தங்களைச் சுற்றி நடப்பதை காண்பதற்கு தைரியமில்லாதவர்கள்." என்று ஒரே போடாகப் போடுகிறார் தீபா மேத்தா.

சப்னா ஆஸ்மி இப்படத்தில் நடிக்க முன்னர் தனது கணவரிடம் கருத்துக் கேட்டாராம். கணவரான ஜாவீத் அக்தார் கதையைப் பாராட்டியதோடு சப்னா நடிக்கவும் உற்சாகமளித்தாராம்.

சர்ச்சைகள் மத்தியிலும் படம் திரையில் வலம் வருகிறது. இசையமைத்த ஏ.ஆர். ரகுமான் கூறுகிறார்: "ஒவ்வொருத்தரும் பார்க்கவேண்டிய படம் இது. அதுதான் இசையமைத்துக் கொடுத்தேன்".

# கை தெரிந்தால் பூசை

ஆப்கானிஸ்தானில் தலிபான் இயக்கத்தினரால் புதிய புதிய கட்டுப்பாடுகள் போடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கட்டுப்பாடுகளால் பெண்கள்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். சமீபத்தில் தலிபான் இயக்கம் போட்டுள்ள கட்டுப்பாடுகளைப் பாருங்கள்:

வீட்டு ஜன்னல்களுக்கு கறுப்பு பெயிண்ட் அடிக்க வேண்டும்.

பட்டம் விடக்கூடாது. வீடியோ பார்க்கக் கூடாது.



பெண்கள் வேலைக்குச் செல்லக்கூடாது. ஆண்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடுவதைத் தவிர்க்க பெண்கள் மறைந்தே இருக்க வேண்டும்.

வெள்ளைநிறக் காலுறைகளைப் பெண்கள் அணியக்கூடாது. அது கவர்ச்சியாக இருக்கிறது. ஆண்களைக் கவர்கிறது.

இஸ்லாத்துக்கு எதிரான இசை, புகைப்படம், கால்பந்தாட்டம் என்பவையும் கூடாது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தலிபான் இயகத்தின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியது. அன்று முதல் இன்று வரை பழமைவாதக் கொள்கைகளை கட்டாயமாகத் திணிப்பதில் தலிபான் இயக்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

கட்டுப்பாடுகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள். பொது இடங்களில் வைத்து நையப் புடைக்கப் படுகிறார்கள். மரண தண்டனையும் சகஜம்.

சம்பத்தில் வெளியே கைதெரியும்படி உடை அணிந்துசென்ற ஆறு பெண்களை இழுத்துச் சென்று பொதுமக்கள் மத்தியில் வைத்து செம சாத்துப்படி நடந்தது.

பர்தா அணியாத பெண்களுடன் பேசிய 24 கடைக்காரர்களையும் சம்பத்தில் புரட்டி எடுத்துவிட்டனர்.

தலிபான் இயக்கத்தின் கொள்கைகளை வெறுத்தாலும் வெளியே சொல்ல முடியாமல் தவிக்கிறார்கள் மக்கள். பெண்கள்தான் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

# அம்மணி செய்த ஆராய்ச்சி

## சுடச்சுட விற்பனை

எதை எதை ஆராய்ச்சி பண்ணுவது? ஒரு வரைமுறை இருக்கிறதா என்ன? அமெரிக்கப் பெண்மணியான பாரா கார்ன் என்னும் அம்மணி செய்துள்ள துணிச்சலான காரியத்தைக் கேளுங்கள்.



'நூற்றியொரு இரவுகள்' என்ற தலைப்பில் ஒரு ஆராய்ச்சிப் புத்தகம் எழுதி வெளியிட்டுள்ளார் அம்மணி.

வெளியான உடனேயே புத்தக வியாபாரம் பிய்த்துக்கொண்டு போயிருக்கிறதாம். மூன்று இலட்சம் பிரதிகள் முதல் ரவுண்டிலேயே விற்றுத் தீர்ந்துவிட்டதாம். சுடச் சுட விற்பனை.

புத்தகத்தில் அப்படி என்னதான் இருக்கிறது? எல்லாம் விவகாரமான சமாச்சாரங்கள் தான்.

செக்ஸ் கேள்வி பதில் என்று 5 ஆயிரம் ஆண்களிடமும், 3 ஆயிரம் பெண் களிடமும் கேள்விகளைக் கேட்டு அவர்களது அனுபவம் சார்ந்த கிளுகிளு பதில்கள் வெளியாகியுள்ளன.

அது மட்டுமல்ல, 101 பிரபலங்களின் பள்ளியறை அனுபவங்களையும் விலாவாரியாகக் கேட்டு விளக்கமாகத் தந்திருக்கிறார்.

101 செக்ஸ் ஆலோசனைகளும் மேலதிக போனஸாக தரப்படுகிறதாம். 'போனால் கிடையாது பொழுது பட்டால் கிட்டாது' என்று கூவாத குறையாக இரண்டாம் பதிப்பும் சுடச்சுட விற்பனையாகிக் கொண்டிருக்கிறதாம். கையிலே காசு வாயிலே தோசை என்று வெளுத்து வாங்குகிறார் அம்மணி.



படிப்பகம்

www.padippakam.com

# கோடீஸ்வரர் வீட்டுப் பிள்ளை



கோட் சூட் சகிதமாக குசாலாக கையசைப்பவர் மிஸ்டர் ஓலா. குரங்கார்தான் என்றாலும் கோடீஸ்வர வீட்டுக் குரங்கார் என்பதால் ஏகப்பட்ட மரியாதை.

சுவீடன் நாட்டில் ஓலன்ட் பூங்காவில் இக் குரங்கார் குட்டியாக இருக்கும்போதே படு சுட்டித்தனம். அந்தச் சுட்டித்தனத்தால் கவரப்பட்டு இவரை விலை கொடுத்து வாங்கிப் போனார் ஒரு கோடீஸ்வரர். அவரது பெயர் ஜிம். ஜிம்முக்கு பிள்ளை குட்டி கிடையாது. அதனால் குரங்காருக்கு மகா செல்லம். தான் கலந்துகொள்ளும் விருந்துக் கேளிக்கைகளுக்கு குரங்காரை தவறாமல் அழைத்துச் செல்கிறார். மனிதர்கள் போலவே நாகரிகமாக, நாசூக்காக அமர்ந்து சாப்பிடக் கற்றுவிட்டார் ஓலா. அது மட்டுமல்ல விருந்தொன்றில் ஒருவரைக் கண்டுவிட்டால் பின்னர் மறக்காமல் இருந்து எங்கு கண்டாலும் கைகொடுத்து அசரவைக்கிறார் ஓலா.

ஓலாவின் புத்திசாலித்தனத்தை அறிந்த ஹொலிவுட் சினிமாக்காரர்கள் தம் படத்தில் நடிக்க அழைத்தனர். "நடித்துத்தான் சம்பாதிக்க வேண்டும் என்றில்லை. ஓலா வரமாட்டான்" என்றுவிட்டார் எஜமானர். ஓலாவுக்கு ஒரே ஒரு குறை, காரில் ஜாலியாக வலம் வந்தாலும் தன்னால் கார் ஓட்ட முடியாதே என்பதுதான் கவலை. கவலைதீர சாரதி ஆசனத்தில் அடிக்கடி அமர்ந்து பார்ப்பாராம். ஓலாவின் ஆசையை நிறைவேற்ற முடியாததில் எஜமானருக்கும் தீவிரமான கவலைதான்.




# சந்தனக் கூடு திருவிழா

→ தமிழ்நாட்டில் இரண்டு இலட்சம் பக்தர்கள் திரண்டு வணங்கிய சந்தனக்கூடு இது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மகான் சுல்தான் செய்யது இப்ராஹிம் ஷஹீது, அவரது தாயார், சகோதரி, மனைவி, மகன் உட்பட 19 வலிமார்கள் ஏர்வாடி தர்ஹா சமாதியில் அடக்கமாகியுள்ளனர். அங்குதான் இந்தச் சந்தனக்கூடு திருவிழா நடைபெற்றது.

அலங்காரிக்கப்பட்ட யானை முன்னே செல்ல மக்கள் வெள்ளத்தில் நீந்தி சந்தனக்கூடு ஊர்வலம் நடைபெற்றது. சந்தனக் கூட்டில் பத்திரமாக எடுத்துச் செல்லப்பட்ட சந்தனத்தை சமாதியில் பூசினார்கள்.

இதில் உள்ள விசேஷம் யாதெனில், ஜாதி பேதமில்லாமல் பல ஜாதியினர் இணைந்து இந்த சந்தனக் கூட்டை உருவாக்கினார்கள். கண்கொள்ளாக் காட்சியாக அமைந்த பிரமாண்டமான திருவிழா இது.





# அலை எழுந்து ஓடுமோ

← தலையா கடல் அலையா? என்ற வியப்புக்கும், விபரிப்புக்கும் உரிய காட்சி இது. ஆனால் இது ஒன்றும் பொதுக்கூட்டமல்ல, பொது ஓட்டம்! இலண்டனில் சம்பத்தில் நடைபெற்ற மராத்தன் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டவர்கள்தான் இவர்கள். மொத்தம் 27 ஆயிரம் பேர். முட்டி மோதிக்கொண்டு வியர்வை கொட்டக் கொட்ட ஓடி முடித்தனர். இவர்களில் பலர் இடை நடுவில் மெல்ல நழுவிக் கொண்டனர்.

நம் நாட்டில் யாழ்ப்பாணத்திலும் இப்படி அலை அலையாக மக்கள் ஓடினர். அது இடம் பெயர் ஓட்டம். இது தடம் பதிக்கும் ஓட்டம்.

# தகவல் பெட்டி

# சிலை எழுந்து மிரட்டுமோ?

↓ தலைவர்களுக்கெல்லாம் கட்-அவுட் வைப்பதும் தேர்தலில் கெட் அவுட் ஆனதும் அந்தக் கட்-அவுட்டுக்கள் காணாமல் போவதும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் சர்வ சாதாரணம். சில வருடங்களுக்கு முன்னர் ஜெயலலிதாவின் பிரமாண்டமான கட்-அவுட்டுக்களைக் கண்ட சென்னை மக்களுக்கு ஒரு மாறுதலான காட்சி. டைனோசரின் பிரமாண்டமான உருவச்சிலை ஒன்று சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அதனைப் பார்த்துவிட்டு தமிழ்நாடு சேலத்திலும் மற்றொரு டைனோசர் உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. உயரம் 15 அடி. நீளம் 24 அடி. செய்து முடிக்க ஆன செலவு மட்டும் நம்மூர் மதிப்பில் 3 இலட்சம் ரூபாய். பைபர் இழைக் கண்ணாடியால் மோகன் என்னும் சிற்பி இதனை உருவாக்கியுள்ளார். ஆட்சிகள் மாறினாலும் கௌரவம் மாறாத சிலை இது. ஜூரசிக் பார்க் படம் வந்தாலும் வந்தது டைனோசர்களுக்கு எக்கச்சக்க மவுசு.





# நான்தாண்டா யானைப்பலம்

↑ மனதிலும் பலம், உடம்பிலும் யானைப்பலம். ஒரு மோட்டார் சைக்கிளை தள்ளிச் செல்லவே நமக்கு கஷ்டமாக இருக்கும். அண்ணர் ஒரு கப்பலையே ஹாயாக இழுத்து முடித்துவிட்டார் என்றால் சும்மாவா. அதுவும் எப்படித் தெரியுமா, பற்களால் மட்டும்தான் ஒரே இழுவையாக இழுத்திருக்கிறார்.

கப்பலின் எடை 320 தொன். அண்ணாச்சியின் பெயர் நரிந்தர்சிங். வயது 35. இந்தியவைச் சேர்ந்தவர். தாய்வான் நாட்டிலுள்ள காஷியுங் துறைமுகத்தில் ஏப்ரல் 2ம் திகதி இச் சாதனையைப் படைத்தார். ஐந்தே ஐந்து நிமிடத்தில் ஒரே தம் பிடித்து காரியத்தை முடித்துவிட்டார் நம்ம அண்ணாச்சி.

www.padippakam.com

## ஹிந்தியில் 'மவுன்'

அரவிந்தசாமி- நக்மா நடித்து தமிழில் தோல்வி கண்ட படம் 'மௌன யுத்தம்.' தற்போது ஹிந்தியில் 'மவுன்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டுள்ளது. நம்மூரில் சொர்ணவாகினியில் ஒளிபரப்பாகும் ஏ.ரி.என். அலை வரிசையில் விளம்பரம் போடப்படும் படம் அதுதான். வில்லன் ரகுவரன்.

## சிரிக்கும் உதடுகள்

தனது உதடுகளை நினைத்து ரொம்பவும்தான் கவலைப்படுகிறார் ரோஜா.

ரோஜா என்றதும் நினைவுக்கு வருவது அந்த உதடுகள்தானே. அதை நினைத்து கவலைப்படுவானேன்? ரோஜாவே பதில் சொல்கிறார்.

"என் உதடுக்ள் அழகானவைதான். ஆனால் சோகக் காட்சியில் நடிக்கும்போதுகூட என் உதடுகள் அசைவது சிரிப்பது போலத் தெரிகிறது. அதுதான் எனக்கு கவலையாக இருக்கிறது" என்கிறார் ரோஜா.

"ஆண்களிடம் உங்களுக்கு பிடித்த அம்சம் எது?" என்று ஒரு நிருபர் ரோஜாவிடம் கேட்டார். கோபப்படாமல் ரோஜா சொன்ன பதில்: "கல்யாணத்தின் பின்னர் தெரிந்து கொண்டு சொல்கிறேன்!"

## வேகத்தடை

'நேருக்கு நேர்' படத்தில் அஜித்குமாருக்கு பதிலாக நடித்துவரும் சிவகுமாரின் மகன் சூர்யாவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. புதிய படங்களில் ஒப்பந்தம் செய்ய பலர் முன்வந்தனர். "முதலில் ஒரு படம் முடியட்டும். பின்னர் படிப்படியாக பார்த்துக் கொள்ளலாம். ஓவர் ஸ்பீட் கூடாது" என்கிறாராம் அப்பா சிவகுமார்.

## சம்பளம் கோடி

'நாயகன்' படத்தில் கமலை சுட்டுக் கொல்லும் பாத்திரத்தில் நடித்தவர் டினு ஆனந்த். ஹிந்தி நடிகர்.

தற்போது ரவீனா ராண்டன், சுனில் ஷெட்டி ஜோடியாக நடிக்கும் 'ஏக் இந்துஸ்தானி' என்னும் படத்தை இயக்குகிறார் டினு ஆனந்த். இயக்கட்டும், அதில் என்ன விவகாரம் என்று கேட்கிறீர்களா? விவகாரம் அல்ல, வியப்பு சமாச்சாரம், அதாகப்பட்டது, படத்தை இயக்க டினு ஆனந்த்தின் சம்பளம் இந்திய மதிப்பில் ஒரு கோடி.

## விக்னேஷ் ஜோடி மந்த்ரா

திருமணம் செய்துகொண்ட புதிய தம்பதிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் எப்படியெல்லாம் இருக்கும்? சில ருசிகரமானவை. வேறு சில நெருக்கடியானவை. எல்லாவற்றையும் கலந்து கதை சொல்லப் போகிறார்கள். அதனால் படத்திற்கு 'புதுக்குடித்தனம்' என்று பெயரிட்டுள்ளனர்.

கதாநாயகனாக விக்னேஷ் நடிக்கிறார். ஜோடியாக நடிப்பவர் மந்த்ரா. 'திலகம்' படத்தை இயக்கிய ஆர். ரகுவாசன் நீண்டகாலத்தின் பின்னர் இயக்கும் படம் இது. மணிவண்ணன், செந்தில், குமரிமுத்து, லதா, கோவைசரளா ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா.

## கெட்- அப் ஏழு

'ஆஹா என்ன பொருத்தம்' படத்தில் ராம்கியையும், சங்கவியையும் கிளுகிளுப்பில் தோய்த்திருக்கிறார்களாம். குட்டை பாவாடை, இறுக்கமான சட்டை என்று விதம் விதமான கவர்ச்சி உடைகளுடன் தாராளமாக நடித்திருக்கிறார் சங்கவி.

ரீராம்கி பல படங்களில் நடித்தாலும் ஒரே மாதிரியான தோற்றத்தில் நடிப்பதாக குறை இருக்கிறது. 'ஆஹா என்ன பொருத்தம்' படத்தில் அந்த குறையைப் போக்கியுள்ளாராம். துபாய் சேட், குத்துச் சண்டை வீரர், பரமசிவன்... என்று ஏழுவித கெட்டப்பில் நடிக்கிறாராம் ராம்கி.

## மினி சினி

* பல வெற்றிப்படங்களை இயக்கியுள்ள கேயார் அடுத்து பிரபு நடிக்கும் புதிய படமொன்றை இயக்கவுள்ளார். பிரபு- கேயார் முதன் முறையாக இணையும் படம் இது.
* நாசர் இயக்கும் 'தேவதை' படத்தில் வினீத்திற்கு ஜோடியாக அறிமுகமாகிறார் கீர்த்தி ரெட்டி.. அத்துடன் பிரகாஷ்ராஜ்- சுஹாசினி நடிக்கும் 'நந்தினி' படத்திலும் வினீத்திற்கு இவர்தான் ஜோடி.
* மம்முட்டி-அரவிந்தசாமி நடித்த 'புதையல்' படத்தை இயக்கிய செல்வா தற்போது கார்த்திக் நடிக்கும் 'சிஷ்யா' படத்தை இயக்கி வருகிறார். இது முடிந்ததும் மம்முட்டி., அரவிந்தசாமி நடிக்கும் இரண்டு படங்களை இயக்கவுள்ளார்.
* கஸ்தூரிராஜா இயக்கத்தில் ராஜேந்திர பிரசாத்-ஊர்வசி நடிக்கும் 'வாசுகி' படத்தில், முதலில் பாண்டியராஜன்-குஷ்பு ஜோடியாக நடிப்பதாக இருந்தது.
* விஜய்-சங்கீதா நடித்த 'பூவே உனக்காக' இந்தியில் தயாராகப் போகிறது. சங்கீதா வேடத்தில் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் நடிக்கிறார். விஜய் வேடத்தில் நடிக்க அமீர்கானை அணுகியுள்ளார்கள்.
* மோகன்லால்-பிரபு நடித்த 'காலாபாணி' படத்திற்குப் பின் மலையாளத்தில் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் உருவாகி வரும் படம் 'குரு'. பழங்குடி மக்களைப் பற்றிய கதை கொண்ட இப்படத்தில் மோகன்லால்- சுரேஷ்கோபி இணைந்து நடிக்கின்றனர்.
* 'நேருக்கு நேர்' படத்தை இயக்கி வரும் வஸந்த், விரைவில் அரவிந்தசாமி நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இதில் கதாநாயகியாக நடிக்க கரிஷ்மா கபூரை நடிக்க வைக்க திட்டமிட்டுள்ளார்.
* சிரஞ்சீவி நடிக்கும் புதிய தெலுங்குப்படத்தில் நீருக்கடியில் சென்று சண்டை போடுவதாகக் காட்சி. இந்தக் காட்சிக்காக மாலைதீவிற்குச் சென்று, கடலில் நீருக்கடியில் விசேஷ பயிற்சி எடுத்து வந்திருக்கிறார் சிரஞ்சீவி.
* பாண்டியராஜன் நடித்த 'நல்ல மனசுக்காரன்' படத்தின் நாயகி ஜெயராகினி, இப்போது தனது பெயரை ராகஸ்ஸ்ரீ என்று மாற்றிக் கொண்டு ராமராஜனுடன் 'கண்ணுபடப்போகுது' படத்தில் நடித்து வருகிறார்.
* ஆர்.வி. உதயகுமார் தெலுங்கில் இயக்கிய 'தாரக ராமுடு' படம் தமிழில் 'ஆனிப்பொன்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இந்தப்படத்தில் தெலுங்கு நடிகர் ஸ்ரீகாந்த்- சவுந்தர்யா ஜோடியாக நடித்துள்ளனர்.

## கைவிடப்பட்ட படங்க...

'கண்ணாளனே' என்றொரு ப... தில் அருண்குமார் நடிப்பத... இருந்தது. அருண்குமார் நடி... படங்கள் தியேட்டர்களை விட்டு ஓ... தால் 'கண்ணாளனே' கைவி... பட்டுள்ளது.

'குபேரா குபேரா' என்றொ... படத்தில் பாண்டியராஜன் நடி... தாக இருந்தது. அந்தப்படத் தயா... பும் கைவிடப்பட்டுள்ளதாம்.

## பட விநியோகம்

ரஜினியின் 'அருணாச்சலம்' படத்தை வாங்கித் திரையிடுவ... தற்கு பலத்த போட்டி. விநி... யோகஸ்தர்கள் பலர் கியூவில் காத்திருக்கிறார்கள். நடிகர் சரத்குமாரும் ரஜினியுடன் பேசி ஒரு ஏரியாவுக்கு படத்தை விநி... யோகிக்கும் உரிமையை விலை கொடுத்து வாங்கினாராம். நல்ல இலாபம் தேறும்.

**முகப்பில்**

ராம்கி—சங்கவி
படம்:-தினமும் என்னைக் கவன...

சங்கீதா
படம்:-பூமனமே வ...

## சினி விசிட்


சஞ்சய்-ரூபஸ்ரீ
படம்:-புன்னகைப் பூக்கள்



## மஞ்சுளாவின் வாரிசுகள்

விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியின் அருமைப் புத்திரி ப்ரீதா நடிக்கும் படம் 'ருக்மணி கல்யாணம்'. படத்தில் ப்ரீதாவின் அப்பாவாக நடிப்பவரும் விஜயகுமார்தான். (ஆஹா என்ன பொருத்தம்) ப்ரீதாவின் சகோதரி பேபி ஸ்ரீதேவிதான் படத்தில் ப்ரீதாவின் தோழியாக நடிக்கிறாராம்.

நடிகை மஞ்சுளா நடிக்க வந்த புதிதில் ரசிகர்களை அசத்தியவர். ரிக்ஷாக்காரன் படத்தில் எம்.ஜி.ஆருடன் மஞ்சுளா ஆடிய ஆட்டமென்ன, அதன்பின்னர் பல படங்களில் கவர்ச்சியின் எல்லைக்கே சென்ற துணிச்சல் என்ன.....என்ன... ஒரு பட்டியலே போடலாம். தனது உடம்பை கச்சிதமாக வைத்திருந்தவர் மஞ்சுளா. ஆனால் மஞ்சுளாவின் மகள்கள் சதைபோட்டு குண்டாக இருக்கிறார்கள். அம்மா புத்தி சொல்லுவதில்லையா?

வனிதா போல உடல் எடை ஏறாமல் இருக்க, உடற்பயிற்சி செய்துவருகிறாராம் ப்ரீதா. ப்ரீதாவுக்கு துணையாகச் செல்கிறார் மஞ்சுளா.



## 30 நாள் துக்கம்

'மின்சாரக் கனவு' ஹிந்தியில் 'சப்னே' என்ற பெயரில் வெளியாகப்போகிறது. விளம்பரங்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பாடல்கள் போதாது என்று புதிதாகச் சேர்த்திருக்கிறார்களாம். பாடல் எழுதிவைத்துவிட்டு காத்திருக்கிறார்கள். காத்திருப்பது இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்காக. பாடகர் சாகுல் ஹமீத் மரணத்துக்காக 30நாள் துக்கம் அனுஷ்டித்தார் ரகுமான்.

## கவர்ச்சியின் எல்லை எது? சங்கவி சொல்கிறார் விளக்கம்

கவர்ச்சிப்புயலாக துணிகளை வீசிக் கொண்டிருப்பவர் சங்கவி. கவர்ச்சி என்றால் என்ன, ஆபாசம் என்றால் என்ன? என்ற கேள்வி உங்களைக் குடைந்து கொண்டிருந்தால் சங்கவியைக் கேட்கலாம். சங்கவியின் மினிப்பேட்டி ஒன்று.

**கே: கவர்ச்சியாக நடிக்கிறீர்களே, எப்போது நடிப்பைக் காட்டப்போகிறீர்கள்?**

ச: இதில் முடிவு எடுக்கிற அளவுக்கு நான் இன்னும் வளரவில்லை. என்மேல் கவர்ச்சி நடிகை என்ற முத்திரை குத்தப்பட்டுவிட்டது. குஷ்பு, ரம்பா, ரோஜாவுக்குக்கூட அந்த முத்திரை இருக்கிறது. அதிலிருந்து குஷ்பு மட்டுமே சமீபத்தில் விலகிச் சென்று முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகிறார். என் நடிப்பைக் காட்ட இன்னும் சில காலமாகும்.

**கே: மும்பை நடிகைகளுக்கு போட்டியாக கவர்ச்சி காட்டுகிறீர்களா?**

ச: அப்படிச் சொல்ல முடியாது. இப்போது சினிமா உலகில் கவர்ச்சிக் காலகட்டம் நடக்கிறது. ஐஸ்வர்யா ராயானாலும், சுஷ்மிதா சென்னாக இருந்தாலும் ரசிகர்களுக்கு கவர்ச்சியை காட்டத்தான் வேண்டும்.

**கே: கவர்ச்சியின் எல்லை எது?**

ச: கவர்ச்சியின் எல்லை ஆபாசம்தான். தாவணிபோடாமல் பாவாடை சட்டையில் நடிப்பது கவர்ச்சி. அதற்காக சட்டை போடாமல் மெல்லிய தாவணியை மட்டுமே போட்டுக்கொண்டு நடித்தால் அது ஆபாசம்.

**கே: முன்னணி நடிகர்களுடன் நீங்கள் சேர்ந்து நடிப்பதில்லையே ஏன்?**

ச: முன்னணி நடிகர்கள் என்றால் எதை வைத்துச் சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. சீனியர் நடிகர்கள் என்று எடுத்துக் கொண்டால் நம்பியார், நாகேஷ், ஜெமினி கணேஷன் போன்றவர்கள்தான் என் நினைவுக்கு வருகிறார்கள்.

**கே: ரஜினி, கமல், விஜயகாந்த் போன்ற முன்னணி நட்சத்திரங்களோடு நடிக்கவில்லையே?**

ச: நான் என்ன செய்ய முடியும். உளவுத்துறை படத்தில் விஜயகாந்த் ஜோடியாக நடிக்கிறேன். ஏனையோருடன் வாய்ப்பு வந்தால் நடிப்பேன். நானாகவா தேடிப் போகமுடியும்.


புதுமுகம் ஜூலியா
படம்:-வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு


படிப்பகம்

www.padippakam.com

# மனைவிகள் போர்க்கொடி

சரத்குமார்-நக்மா காதல், பார்த்திபன்-சங்கீதா காதல், பார்த்திபன்-ரவளி நெருக்கம், கார்த்திக்கின் உல்லாசங்கள் என்று நடிகர்களின் போக்கு கட்டுமீறிச் சென்று கொண்டிருக்கிறது.

அதனால் நடிகர்களின் மனைவிமார்கள் ஒன்றுகூடி ஒரு முடிவு காணப் போகிறார்களாம். சரத்குமாரின் மனைவியை சந்தித்து நடிகை சீதா சமீபத்தில் பேசியிருக்கிறார். அப்போது தனது கணவர் பார்த்திபன் தொடர்பாகவும் சரத்குமாரின் மனைவியிடம் அழுதுதீர்த்தாராம் சீதா. ஆறுதல் சொல்லப்போன சீதாவுக்கே தேறுதல் சொல்லி அனுப்பிவைத்தாராம் சரத்தின் மனைவி.

"தங்கள் கணவர்மாரைக் கப்பென்று பிடித்துக்கொள்ளும் நடிகைகளிடம் நேராகவே சென்று ஒரு பிடி பிடிக்கவேண்டும், நடிகர்களின் மனைவிமார் முன்வந்தால் முன்னே நின்று செயற்பட நான் தயார்" என்று சொல்லியிருக்கிறார் சரத்தின் மனைவி.

சொன்னதோடு நில்லாமல் நடிகைகளால் பாதிக்கப்பட்ட நடிகர்களின் மனைவிகளை ஒன்றுதிரட்டி போர்க்கொடி உயர்த்திடவும் சரத் மனைவி தயாராகி வருகிறாராம்.

பல நடிகர்களின் மனைவிமாருக்கும் மனதுக்குள் புகைச்சல் இருந்தாலும் வெளிப்படையாக பேசப் பயப்படுகிறார்கள். நடிகைகளின் தளுக்கும், குலுக்கும், மேனி மினுமினுப்பும் எத்தனை நாள்தாங்கும். ஒரு நாள் திரும்பி வருவார்கள்தானே என்ற நம்பிக்கையில் இருக்கும் மனைவிகளையும் தட்டி எழுப்பப் போகிறாராம் சரத்தின் மனைவி.



ஜெயராம்-மந்த்ரா
படம்:-பெரிய இடத்து மாப்பிள்ளை



"பட்டுப்போல் முகத்தை வைத்தான்
பவளம் போல் இதழை வைத்தான்
முத்துப் போல் சிரிக்க வைத்தான்
முன்னாலே என்னை வைத்தான்"

தேவயானி

## மூன்று ஜோடிகள்

'உதவிக்கு வரலாமா' படத்தில் கார்த்திக் மூன்று வேடங்களில் நடிப்பது தெரிந்த விஷயம். மூன்று கார்த்திக்குக்கும் மூன்று முத்தான ஜோடிகள் கிடைத்திருக்கிறார்கள்.

தேவயாணி, ரவளி, அஞ்சு அரவிந்த் ஆகிய மூன்று பேரும்தான் கார்த்திக்கின் ஜோடிகள். கார்த்திக் ஜோடியாக இவர்கள் மூவரும் முதலில் ஜோடியாக நடிக்கும் படமும் இது தான்.

பிராமணப் பெண்ணாக தேவயாணி, முஸ்லிம் பெண்ணாக அஞ்சு அரவிந்த், கிறிஸ்தவப் பெண்ணாக ரவளி ஆகியோர் நடிக்கின்றனர்.

## 'இதயம் உள்ளவரை'

முரளி-ஹீரா இணைந்து நடித்து வெளியான படம் 'இதயம்'. இப்போது முரளி நடிக்கும் புதிய படமொன்றுக்கு 'இதயம் உள்ளவரை' என்று பெயர் சூட்டியிருக்கின்றனர்.

முரளியின் ஜோடியாக இரண்டு நாயகிகள் நடிக்கவுள்ளனர்.

மணிரத்னத்தின் உதவியாளராக 'மௌன ராகம்', 'நாயகன்', 'அக்னி நட்சத்திரம்', 'இதயத்தை திருடாதே' போன்ற படங்களில் பணியாற்றியவர் லோக்சந்தர். அவர்தான் இப்படத்தை இயக்கப் போகிறார்.

ஒரு பெண்ணுக்கு காதல் தெய்வீகம். இன்னொரு பெண்ணுக்கோ காதல் விளையாட்டாகத் தெரிகிறது. இந்த இருவரிடமும் மாட்டிக் கொள்ளும் நாயகனின் பாடு என்னாகும்? அதுதான் கதை. இசை: தேவா.

## நடனமா-நளினமா?

எல்லாமே தனித்தமிழில் இருக்க வேண்டும் என்று கூறுகிற நடிகர் மன்சூரலிகான் நடிகைகள் விஷயத்தில் மட்டும் பிறமொழி நடிகைகளுடன் தான் பிரியம்.

'வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு' படத்தில் மன்சூரின் ஜோடியாக நடிப்பவர் ஜூலியா. காண விரும்புவோர் இங்கு பிரசுரமாகியுள்ள படத்தில் காண்க.

ஜூலியாவின் தாராளகுணம் மன்சூரலிகானுக்கு பிடித்துவிட்டதாம். படப்பிடிப்பு முடிந்ததும் ஜூலியாவுடன் பறந்துவிடுகிறார் மன்சூரலிகான். 'டான்ஸ் பயிற்சி கொடுக்கிறேன்' என்று மன்சூர் சொல்வதை நம்புகிறவர்கள் மட்டும் நம்பலாம்.

## சங்கவியின் பொறாமை

நடிகர் விக்னேஷ் கல்லூரி மாணவியை மணந்து கொண்ட செய்தியால் அப்செட்டாகி இருக்கிறார் சங்கவி.

விக்னேஷ்-சங்கவி ஒரு காலத்தில் காதல் ஜோடியாக சிறகடித்துப் பறந்தது தெரிந்த சமாச்சாரம். பின்னர் உறவு முறிந்தது. சங்கவியும் நடிகர்கள் பலருடன் நட்பாக பழகி வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

ஆனாலும் விக்னேஷ் கல்லூரி மாணவியைக் கல்யாணம் செய்துகொண்டது தனக்கு விடப்பட்ட சவால் என்று நினைக்கிறாராம் சங்கவி. போதாக் குறைக்கு அந்தக் கல்லூரி மாணவியும் மேக்-அப் இன்றியே அழகாக தெரிகிறார்.

## நக்மா நழுவல்

சரத்குமாரை நீங்கள் திருமணம் செய்து கொள்வீர்களா? என்ற கேள்விக்கு மழுப்பலாக பதில் சொல்லியிருக்கிறார் நக்மா.

இதோ நக்மாவின் பதில்:

"அதைப்பற்றி ஒரு கருத்தும் கூறவிரும்பவில்லை. தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள். வாழ்க்கையே வித்தியாசமான அனுபவம். அதை வாழ்ந்துதான் பார்க்கவேண்டும். திருமணம் செய்யும்போது நானே உங்களை அழைத்து அறிவிப்பேன். இப்போது அதைப்பற்றி ஐடியா கிடையாது. என்னுடைய ஆசையெல்லாம் சூட்டிங், கால்ஷீட் என்று பிஸியாக இருக்கவேண்டும்" என்பதுதான் என்கிறார் நக்மா.

சரத்-நக்மா விவகாரத்தில் மேலிட தலையீடுகள் இருப்பதால் தான் நக்மா மழுப்பத் தொடங்கியிருக்கிறாரோ?

## தேவயாணியின் மாற்றம்

'சூரியவம்சம்' படத்தில் சரத்குமார் மிகவும் கவனம் செலுத்தி நடித்துவருகிறார். இரண்டு வேடங்கள் என்பதால் வித்தியாசம் காட்டுவதில் சிரத்தை எடுத்து நடிக்கிறாராம்.

சரத்தின் ஜோடியாக நடிப்பவர் தேவயாணி. காதல் கோட்டை படத்திற்கு முன்னர் கவர்ச்சிக் குயினாக இருந்தவர். இப்போது கட்டுப் பெட்டியாக நடித்துவருகிறார். அப்படியிருந்தும் 'சூரியவம்சம்' படத்தில் தன் கொள்கையை சற்று தளர்த்தியிருக்கிறார் தேவயாணி.

வேண்டுமென்றே புகுத்தப்படும் காட்சியாக இல்லாமல், கதைக்கு ரொம்ப அவசியமாக இருந்தால் கவர்ச்சி காட்டலாம் என்று முடிவு செய்துள்ளாராம்.

அதனால் 'சூரியவம்சம்' படத்தில் ஜாக்கெட் போடாமல் நடித்திருக்கிறார் தேவயாணி.

## "நாளை என்னாகும்....?"

இப்போதெல்லாம் ரஜினி ஸ்டைலில் பேசவதுதான் நடிகர் நடிகைகளின் பாஷன். சரத்குமாரிடம் நக்மா பற்றிக் கேட்டால், நேராகப் பதில் சொல்லாமல் சுற்றிவளைத்து சொல்லிவிட்டுப் போகிறார். நக்மாவிடம் கேட்டால் "நாளை என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்?" என்கிறாராம்.

'பிஸ்தா' படத்தில் கார்த்திக்குடன் நெருக்கமாக உருண்டும் புரண்டும் நடித்திருக்கிறார் நக்மா. நடிப்புக்கு முழுக்குப் போட முன்னர் முழுத்திறமையையும் காட்டிவிட்டுப்போக நினைக்கிறாரோ?

## ரஜினியின் புதிர்

'அருணாச்சலம்' திரைக்கு வந்து வெளுத்துவாங்கிக் கொண்டிருக்கிறது. இப்போது மறுபடியும் சஸ்பென்ஸ். ரஜினியின் அடுத்த படம் என்ன? என்பதுதான் சஸ்பென்ஸ்.

மணிரத்னம் இயக்கும் 'அலெக்ஸ்' படத்தில் ரஜினி நடிப்பார் என்று ஒரு தகவல். இல்லையில்லை 'வாத்தியாரய்யா'தான் ரஜினிகாந்த் அடுத்து நடிக்கப்போகும் படம் என்றெல்லாம் ஆளாளுக்கு தகவல் சொல்கிறார்கள்.

ரஜினி வழக்கம்போல உலகம் சுற்றிவிட்டு வந்துதான் சஸ்பென்ஸை உடைக்கப் போகிறார்.



சவுந்தர்யா
படம்:-அருணாச்சலம்

## காதோடு சொல்லுகிறோம்

நடிகைகளுக்கு 'எய்ட்ஸ்' என்று பரவிய வதந்தியால் முகம் சுளித்தாலும், வதந்தி செய்த நன்மையையும் மறுக்கமுடியாதாம். ஓயாமல் நடிகைகளுக்கு தொல்லை கொடுக்கும் வி.ஐ.பி.க்கள் சிலர் ஒதுங்கிவிட்டார்களாம். கவர்ச்சி ஜோதி நடிகைக்கு வலைபோட்டாராம் ஒரு உயர் வி.ஐ.பி. "டாக்டரிடம் செக்-அப் போகவேண்டியிருக்கிறது நாளை பார்க்கலாம்!" என்றாராம் நடிகை. செக்-அப் என்றதும் என்ன நினைத்தாரோ, பின்னர் வலைவீசவே இல்லையாம்.

மந்திர நடிகையின் தாராளம் காரணமாக தயாரிப்பாளர்கள் படையெடுக்கிறார்களாம். சில வாரங்களுக்கு முன்னர் மூன்றெழுத்து தயாரிப்பாளருடன் சிங்கப்பூர் சென்றாராம் மந்திர நடிகை. அதனால் படப்பிடிப்புக்காக ...கையை எதிர்பார்த்திருந்தவர்கள் வெறுத்துப் போனார்களாம். சிங்கப்பூரில் நடிகையின் ...த் திறமைக்காக பல இலட்ச ரூபாய்க்கு அன்பளிப்புக் கொடுத்தாராம் தயாரிப்பாளர்.

காதல் கோட்டை நாயகிக்கு' பிரபலமான 'உதய' இயக்குநர் தூண்டில் போட்டாராம். ...ல் கோட்டைக்கு முன்னர் வாய்ப்புத் தேடும் வேகத்தில் எல்லோரையும் அனுசரித்துப்போகும் ...ாயம் இருந்தது. இப்போது கிடையாது. ஆகவே 'நோ' என்று சொல்லி தூண்டிலில் ...டாமல் தப்பிவிட்டாராம் நடிகை. தூண்டில் போட்டது நடிப்புக்கல்ல, நட்பான ...ப்புக்காகத்தானாம்.

சூப்பர் காந்தின் படத்தில் நடித்து முடித்த 'ரம்ப' நடிகைக்கு சேலை வாங்கிக் ...த்தார் இயக்குநர். கோள் சொல்லும் ஒருவர் பூ நடிகையின் காதில் அதனைப் ...டாராம். "அப்படியா, நல்ல வேலைதானே. குட். ஐடியா!" என்றாராம் 'பூ' நடிகை. காதலர் ...பூ நடிகைக்கு மலையளவு நம்பிக்கையாம்.

சௌந்தர்யமான நடிகைக்கும் தெலுங்கு இயக்குநர் ஒருவருக்கும் மூன்றெழுத்து சமாச்சாரம் ...ந்திருக்கிறதாம். சூப்பர் காந்த் படத்துக்காக நீண்டநாட்கள் தன் காதலரை பார்க்காமல் இருந்துவிட்டாராம் ...கை. காதலருக்கோ மூக்கின்மேலே கோபம். வேறு ஒரு நடிகையை கண்டுபிடித்து ஊக்குவிக்கத் தொடங்கிவிட்டாராம். விஷயம் அறிந்தபோதும் சௌந்தர்ய நடிகை அதிர்ச்சியடையவில்லையாம் 'போனால் போகட்டும் போடா'.

நாகார்ஜுன்-தபு
...ன்னையே கல்யாணம் பண்ணிக்கிறேன்


படிப்பகம்

www.padippakam.com

# வயது நாற்பதா?

## படியுங்கள் இதை

* அளவான உணவைக் காலம் தவறாது உட்கொள்ள வேண்டும்.
* காலை 5.30 மணிக்குச் சூரியன் உதயமாவதற்கு முன் எழுந்திருக்க வேண்டும்.
* கோப்பி, தேனீர் போன்றவற்றைத் தவிர்த்து, இளநீர், மோர் ஏதாவது ஒரு பழச்சாறு குடிக்கலாம்.
* காலையில் குறைந்தது 15 நிமிடத்திலிருந்து 30 நிமிடங்கள் வரை சூரிய நமஸ்காரம், யோகாசனம் அல்லது ஏதாவது ஒரு உடற்பயிற்சியைக் கட்டாயம் செய்ய வேண்டும்.
* உணவுகளை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். உணவில் உமிழ்நீர் கலக்க வேண்டும்.
* குறைந்தது 10 டம்ளரில் இருந்து 15 டம்ளர்வரை தினமும் தண்ணீர் குடிக்க வேண்டும். வேகமாக மடக் மடக் என்று குடிக்காமல் உறிஞ்சி உமிழ்நீர், தண்ணீரில் கலக்கும்படி குடிக்க வேண்டும்.
* எதற்கும் அவசரம் இல்லாமல் திட்டம் போட்டு குறிப்பிட்ட நேரத்தில் இருந்து குறிப்பிட்ட நேரத்திற்குள் என தங்கள் வேலைகளைச் செய்யப் பழக வேண்டும்.
* வருங்காலத்திற்கு எனத் திட்டம் தீட்டி அதற்காகச் சேமிக்க வேண்டும்.
* வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்கேற்ப- அவர்கள் தேவைக்கேற்ப தனித்தனியாகச் சேமிக்க வேண்டும்.
* எதற்கும் பதட்டப்படுவதோ, அவசரப் படுவதோ, கோபப்படுவதோ கூடாது.
* நம் உடம்பு இரும்பினால் ஆனது இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு அதற்குரிய பயிற்சி, ஓய்வு கொடுக்க வேண்டும்.
* உணவுக்கட்டுப்பாடு அவசியம். குறிப்பாக உணவில் அறுசுவைகளும் இருக்கும் வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.
* கொழுப்புப் பொருட்களான எண்ணெய், நெய், முட்டை, கறி வகைகளையும் குறைக்க வேண்டும்.
* அதிகக் காய்கறிகளையும், கீரைவகைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
* காலையும், மதியமும் சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும்.
* இரவு ஏழு மணிக்குள் குறைந்த உணவு சாப்பிட வேண்டும்.
* சாப்பிட்ட பிறகு குறைந்தது 2 மணிநேரம் பொறுத்தே படுக்கைக்குப் போக வேண்டும்.
* இரவு படுக்குமுன் 10 நிமிடம் நடக்க



வேண்டும். பிறகு 1 டம்ளர் பால் குடிக்க வேண்டும்.
* மாலையில் ஏதாவது ஒரு விளையாட்டைக் கட்டாயம் விளையாட வேண்டும்.
* மார்பு வலி, அடிபட்ட புண் ஆறாமல் இருந்தால், மூட்டுவலி இருந்தால் உடனே நல்ல மருத்துவரைப் பார்க்க வேண்டும். இவை பின்னர் வர இருக்கின்ற பெரிய வியாதிக்கு, நோய்க்கு சிவப்பு விளக்கு (சிக்னல்) எனக் கொள்ள வேண்டும்.
* மருத்துவரின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும். சித்த மருத்துவம், அலோபதி மருத்துவம், கை மருத்துவம் என அடிக்கடி வைத்திய முறைகளை மாற்றக்கூடாது.
* வாரத்திற்கு ஒரு முறையாவது இயற்கையாக அமைந்த தோப்புக்கள், கடற்கரை, பொழுது போக்கு இடம், கோயில்கள், பயிர் பச்சை மிகுந்த தோட்டங்கள் ஆகியவற்றுக்குச் சென்று வர வேண்டும்.
* குளிர்மையான நீர் குடிப்பது, குளிர்மையான நீரில் குளிப்பது மிகவும் நல்லது.
* தலைக்கு வாரத்தில் ஒருநாள் எலுமிச்சம் பழச்சாறு தேய்த்துக் குளிப்பது மிகவும் நல்லது.
* முடிந்தவரை நடப்பது மிக நல்லது. அது உடல் நிலையை ஒரே சீராக வைத்துக்கொள்ளும்.
* இரவில் அதிக நேரம் விழித்திருக்கக் கூடாது. இரவு 10 மணிக்கு முன்பு படுக்கச் செல்வது மிக மிக முக்கியம்.
* மலச்சிக்கல்தான் எல்லா நோய்களுக்கும் காரணம். ஆகவே மலச்சிக்கல் நோய் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.
* உணவில் அதிகமாகப் பழங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.
* இரண்டு தடவை காலையும், மாலையும் மலங்கழிக்க வேண்டும். முடிந்தால் இரண்டு முறை குளிப்பதும் நல்லது.
* தியானத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். எந்தச் சிந்தனையும் இல்லாமல் ஒரு பொருளை நினைத்து அந்தப் பொருளில் ஐக்கியமாக வேண்டும்.
* இது கண்பார்வை குறையும் நேரம். குறிப்பாக கண் மறைக்கும் நோய் 'கேட்ராக்ட்' தோன்றும் வயது. ஆகவே விட்டமின் 'ஏ' நிறைந்த நெல்லிக்காய், பப்பாளி, மீன் இவைகளை அதிகமாக உணவில் சேர்க்க வேண்டும்.
* தலைவலி வந்தால், தூரப்பார்வை ஏற்பட்டால் அதற்குரிய கண்ணாடி அணிய வேண்டும். கண்பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.
* மொத்தத்தில் உடம்பைக் கோயிலாகக் கொள்ள வேண்டும். சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ■

# சின்னச் சின்ன சிங்கார யோசனை

இல்லங்களில் சிறுசிறு பிரச்சனைகள் தோன்றுவது இயல்பு. இத்தகைய பிரச்சனைகளைத் தீர்க்க பெரும் பிரயத்தனங்கள் எதுவும் தேவையில்லை. சில சில்லறைப் பிரச்சனைகளைத் தீர்க்க 'சிம்பி'ளான உபாயங்கள் தரப்படுகின்றன. நீங்களும் பரீட்சித்துப் பாருங்களேன்:



- நன்றாகத் துவைத்தபின்னரும் உங்கள் உடைகளில் எண்ணை அல்லது கொழுப்புத்தன்மை அகலாமல் அப்படியே ஒட்டிக்கொண்டிருக்கிறதா? கவலைப்பட வேண்டாம். சாதாரண முகப்பவுடரை கறைபட்ட இடத்தில் நன்றாகப் பரப்புங்கள். அதன்மீது சுத்தமான வெள்ளைத் துணியை (பருத்தித் துணியானால் நல்லது) விரித்துவிட்டு சூடான இஸ்திரிப் பெட்டியை வைத்து அழுத்துங்கள். எண்ணை-கொழுப்பு துணியில் உறிஞ்சப் பட்டுவிடும்.
- நீளக் கையுடைய 'சேட்'டுக்களைக் கழுவுவதற்கு முன்னர் மணிக்கட்டில் உள்ள பொத்தானை சேட்டின் முன் மார்பு பொத்தான் துளைகளில் புகுத்தி விடுங்கள். இதனால் நீளக்கை ஏனைய துணிகளுக்குள் சிக்கிக் கொள்ள வாய்ப்பிருக்காது.
- அப்பிள் பழங்களின் தோலை சுலபமாக உரிக்க அவற்றின் மீது கொதி நீரை ஊற்றிவிட்டு தோலை உரித்துப் பாருங்கள். சிரமமே இருக்காது; தோல் தனியாக வந்துவிடும்.
- பசி இருக்கும் போதோ, தாகம் அதிகமாக இருக்கும் போதோ, பொருட்கள் வாங்க கடைகளுக்குப் போக வேண்டாம். அவ்வாறு சென்றால் நிச்சயமாகத் தேவைக்கதிகமான பண்டங்களையே வாங்கிவிடுவீர்கள்.
- பல பெண்கள் தங்கள் தொலைபேசியைக் கையிலெடுத்தால் நேரம் போவதே தெரியாமல்- சுற்றுச் சூழலை மறந்து பேசிக் கொண்டிருப்பார்கள். தொலைபேசிக் கட்டண நிலுவைக்கான சீட்டு(பில்) வந்ததும் தொலைபேசி அதிகாரிகள் தப்புக்கணக்குப் போட்டு விட்டார்கள் என்று குறைகூற ஆரம்பித்துவிடுவார்கள். தொலைபேசி அருகில் ஒரு மணிக்கூடும் நோட்டுப் புத்தகமும் வைத்துக் கொள்ளுங்கள். தொலைபேசியில் எவ்வளவு நேரம் பேசினீர்கள் என்பதைக் கணக்கிட்டு நோட்டில் குறித்துக் கொள்ளுங்கள். தானாகவே தொலைபேசிக் கட்டண 'பில்'லில் கணிசமான தொகை குறைந்துவிடும்.
- சமையலறையிலுள்ள பாத்திரங்கள் தூக்கும் குறடு தேய்ந்துவிட்டதா? உடனே புதிய குறடை வாங்க ஓடாதீர்கள்! அரத்தாள் (சாண்ட்பேப்பர்) எடுத்து குறடில் தேய்த்து விடுங்கள். மேலும் பல மாதங்கள் வரை பயன்படுத்தலாம்
- தலையை வாருவதற்குப் பயன்படுத்தப் படும் 'ஹேயார் பிரஷ்' ஷை தண்ணீரில் நனைத்துவிட்டு தலை வாரினால் முடிகள் இயற்கையாகவும் நெருக்கமில்லாமல் தளர்வாகவும் காட்சி தரும்.
- விளக்கு மறைப்புகள்- (லாம்ப் ஷெட்ஸ்) அழகூட்டுவதாக இருக்கவேண்டுமா? அவற்றின் உட்பகுதியில் உங்களுக்குப் பிடித்தமான ஓவியத்தை வரைந்து விடுங்கள். ஒளி ஊடுருவத்தக்க விளக்கு மறைப்பானால், நீங்கள் வரைந்த படம் ஒளியில் அழகாகத் தென்படும். ■

# உதடுகளின் வசீகரம்

பெண்களின் முக அழகுக்கு, வனப்புக்கு, வசீகரத்திற்கு துணை செய்வது அவர்களின் அழகான கண்கள், மூக்கு, உதடுகள் ஆகியவையே. இம்மூன்றிலும் அதரங்களுக்கு சற்று அதிகமான பங்கு உண்டு என்றால் மிகையல்ல.

எல்லாப் பெண்களுக்கும் உதடுகள் ஒரே வடிவில் இருப்பதில்லை. பெண்ணுக்குப் பெண் வித்தியாசமாகவே இருக்கும். சிலருக்கு மெலிந்து, சிலருக்குச் சற்றுத் தடித்து, சிலருக்கு நீளமாய், சிலருக்குக் குறுகியதாக..

பற்களின் அமைப்புக்கும் உதடுகளின் அமைப்புக்கும் நிரம்ப சம்பந்தம் உண்டு.

சிலருக்கு முன் பற்கள் எத்தி நீளமாயும் அமைந்து உதடுகளால் வாயை முழுமையாக மூட முடியாதவாறு இருந்து அழகைக் கெடுக்கும். இத்தகையவர்கள் தேர்ந்த பல் வைத்தியரிடம் சென்று, பல்லைப் பின்னுக்குத் தள்ளியும், நீளத்தைக் குறைத்தும் சரி செய்து உதட்டழகை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.



உதட்டுக்குச் சாயம் பூசியும் உதட்டழகை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

சிறிய மெல்லிய உதடு உள்ளவர்கள் உதடுகளின் வெளிப்புறம் பரவும் விதத்தில் சாயம் பூசவேண்டும். இதனால் உதடுகள் சற்றுப் பெரியனவாகக் கவர்ச்சியோடு காட்சியளிக்கும்.

தடித்த பெரிய உதட்டுக்குச் சொந்தக்காரர்கள் உதடுகளின் உட்புறம் மட்டும் பரவும் விதத்தில் சாயம் தடவினால் உதடுகள் சாதாரண அளவில் அழகாகத் தோன்றும்.

செயற்கை உதட்டுச்சாயத்தில் கலக்கும் சில இரசாயனப் பொருட்கள் உதடுகளின் மென்மையான தோலை அரித்துப் புண்கள் தோன்றச் செய்யும். என்றாலும், இதையெல்லாம் மீறியும் பெண்களின் அழகுக்கு அழகு செய்யும் பணியை 'லிப்ஸ்டிக்' தொடரவே செய்கின்றது. கூடியவரை நல்ல தரமான உதட்டுச் சாயத்தையே பெண்கள் பயன்படுத்துவது ஆரோக்கியத்திற்கும், உதட்டழகுக்கும் நல்லது.

உதடுகள் சிவந்திருக்க வேண்டும் என்பதற்காகத்தானே இத்தகைய செயற்கை அழகுசாதனங்களின் உதவியை நாடுகின்றனர்? இதற்கென நம்முன்னோர் வெற்றிலை போடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

சாதாரணமாகச் சத்தான உணவைத் திட்டமிட்டு உண்பதன் மூலம் சிவந்த உதடுகளைச் சிரமமின்றி இயல்பாகவே பெறமுடியும்.

விட்டமின் 'சி' சத்து நிறைந்த உணவுகளைத் தாராளமாகச் சேர்த்துக் கொண்டால் கண்களும் கனி இதழ்களும் ஆரோக்கியமும் அழகும் பெறும்.

நிறைய பால், பாகற்காய், வெள்ளரிக்காய், தக்காளி, பழரசம், கீரைவகைகள் சிவந்த எழில் மிக்க இதழ்களுக்குச் சொந்தக்காரர்கள்.

பெண்களே! மறந்து விடாதீர்கள், மேற் குறிப்பிட்ட உதட்டழகுக்கான அழகுக்குறிப்புகளை! ■

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? மாபோல வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

செல்வி றிஸ்வானா,
701, நீர்கொழும்பு வீதி, மாபோல.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BN

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை — நேர்மை — வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-05-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# தேவையில்லை பார்மஸி




### வயிற்றில் இரைச்சலா?

சிலருக்கு வயிற்றில் இரைச்சல் இருந்து கொண்டே இருக்கும். அவர்களை எந்த வேலையிலும் ஈடுபடவிடாது. இந்தத் தொல்லையைத் தவிர்க்க, ஒரு டம்ளர் வெந்நீரில், ஒரு தேக்கரண்டி துளசியின் விதைகளை ஊற வைத்துக் குடித்தால், அந்த வயிற்று இரைச்சல் நின்றுவிடும்.

### இரத்தக் கொதிப்பா?

உங்களுக்கு இரத்தக் கொதிப்பு இருக்கிறதா? கவலை வேண்டாம். வெள்ளரிப்பிஞ்சைப் பச்சையாகவோ அல்லது பருப்புடன் சேர்த்துச் சமைத்தோ சாப்பிட்டு வாருங்கள். வெள்ளரிப்பிஞ்சு கிடைக்காத காலமாக இருந்தால், வெந்தயக் கீரையைச் சமைத்துச் சாப்பிடுங்கள். சாம்பார் செய்து சாப்பிட்டு வாருங்கள். இரத்தக் கொதிப்பு மட்டுப்படும்.

### பசி இல்லையா?

வயிற்றுக்குச் சாப்பிட ஒன்றும் இல்லையே என்று வருத்தப்படும் இவ்வுலகில் பசி இல்லையே என்று துன்பப் படுவோரும் உண்டு. அது ஒரு பிணி. அதைப் போக்க மிளகுக் கஷாயம் சாப்பிட வேண்டும். ஒரு தேக்கரண்டி மிளகை இலேசாக வறுத்து அதை அப்படியே தட்டிப்போட்டு, கஷாயம் வைத்து வடிகட்டி, அதில் சிறிது தேனையும் சேர்த்துச் சாப்பிட்டால் பசியின்மை போகும், நன்றாய்ப் பசி எடுக்கும்.

### பற்களில் தொல்லையா?

பப்பாளிப்பழத்தில் நல்ல மருத்துவ குணம் இருக்கிறது. பல் சம்பந்தமான எந்த நோய் ஏற்பட்டாலும், சில பப்பாளிப் பழத் துண்டுகளை வாயில் போட்டு மெல்லுங்கள். அந்தப் பழச்சாறு பல் இடுக்கில் புகுந்து நல்ல வேலை செய்கிறது. உடனே தொல்லை தீரும்.

### இரத்த மூலமா?

இரத்த மூலம் வந்து சிரமப்படுகிறவர்கள் உடனே காரம் சாப்பிடுவதை அடியோடு நிறுத்த வேண்டும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி நெய்யில் வதக்கிச் சாப்பிட வேண்டும். இத்துடன் பனங்கற் கண்டையும் சேர்த்துச் சாப்பிடுவது இன்னும் நல்லது. உடனே இரத்த மூலம் குணமாகும். ■

## பரிசு பெற்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்: **திருமதி யூடித் ஞானராஜ் 68, பெட்டா, மன்னார்.**

# தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு— அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 08

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

## உயிரென நினைத்தது உயிரையே பறித்தது

அனிச்சமலர் அவள்;
அப்பாவிப் பெண்ணவள்;
அவளை நோகடித்ததில்
உனக்கென்ன ஆனந்தம்?
–o–
செத்துச் செத்துச்
சீவிப்பதையே
நிம்மதி என
வகுத்துக் கொண்டது
அவள் வாழ்வு!
–o–
உன்னில்
அன்பு வைத்ததன் காரணமாக
அத்தனை விலங்குகளினாலும்
பிணைக்கப்பட்டது
அவள் உலகு!
–o–
அவளது கோவிலின்
தீபங்களை அணைக்க
நீ வர மாட்டாய்;
அவளது சோலையின்
பூக்களில் தீவைக்க
நீ துணியமாட்டாய்
என நினைத்திருந்த போதுதான்
எல்லாம் நடந்து முடிந்தது!
–o–
தேவதையாக-
தேன்கனவுகளின் நாயகியாக
உலவுவதற்காக நீ
உருவாக்கிவைத்திருந்த
அலங்காரங்கள் யாவும்
அவள் வாழ்வுக்கு
அரிகண்டங்களாயின!
–o–
அவளின் காதலை
யாசித்துச் சென்று
வேதனைகளை அவளிடம்
விட்டு வந்தவன் நீ!
அவளது
நிம்மதிகளிலெல்லாம்
நெருப்பு வைத்து விட்டு
நழுவி யோடியவன் நீ!
யாரை உயிரென
நம்பி ஏமாந்ததால்
உயிர்விடத் துணிந்தாளோ–அந்த
உயிருக்குரியவன் நீ!
–o–
அவள் வாழ்வுக்கு
வெற்றிகளை
வரவழைப்பதற்காக–நீ
ஒரே ஒரு தடவை
அன்பின் முன்னிலையில்
அடிபணிந்து போயிருக்கலாம்!
–o–
அவள் உலகில்
ஒளியேற்றுவதற்காக–நீ
ஒரே ஒரு தடவை
அற்ப ஆசையின் சுடர்களை
அணைத்து வாழ்ந்திருக்கலாம்!
–o–
வாழ்வை எதிர்பார்த்து
உன்னிடம் வந்தவளுக்கு–நீ
மரணத்தின் தலைவாயிலைத்
திறந்து கொடுத்தாய்!
–o–

**செல்வி பஹீமா ஜஹான்-**
**தெமடகொல்ல, மெல்சிரிபுர.**

## நாளை விடியும் காதல் பொழுது

மெல்ல அழு!
உன் கண்ணீரால்
நம் காதல் புனிதப்படுத்தப்படட்டும்.
***
வெளிச்சத்தை மட்டும்
நேசிக்காதே...!
இருளையும் நேசிக்கப்பழகு..!
***
சுட்ட களிதான்
மட்பாண்டமாகும்;
அதுபோல் நம் காதலும்
சுடப்படட்டும்.
***
முள் குத்துகிறது என்பதற்காக
பாதங்களை வெட்டி வீசலாமா..?
பாதையைத்தான் சுத்தப்படுத்த
வேண்டும்...!
***
கடிகார முள் சுற்றாமலிருக்கலாம்;
ஆனால் காலம்
கடந்து கொண்டேதானேயிருக்கும்!
அதுபோல்
நான் உன்னை சந்திக்காவிட்டாலும்
நம் காதல் வளரும்...!
***
ரோசா என்றால்
இலை இருக்கும்....
பூ இருக்கும்....
முள்ளும் இருக்கும்;
அதுபோல்தான்–
'காதலில் துன்பமும்...!'
***
முகத்தில் கீறி விட்டதே என்பதற்காக
விரல்களை வெட்டவேண்டியதில்லை;
நகத்தை வெட்டு–
அது போதும்...!
***
மண்ணுக்குள் போட்டு மூடினாலும்
முளைத்து தலைகாட்டும் விதையாய்
தடைகளையே உரமாக்கி
தளைத்தெழுவதுதான் 'காதல்..!'
***
துன்பம் வரும்
எனின்–
மெல்ல அழு!
பின்–
சிரி..!
***
சோகம் இல்லாத காதல்
சுவைப்பதில்லை..!
***
விழு...!
தொழு....!
காகிதம் எடு...!
கடிதம் எழுதிப் போடு எனக்கு,
நம் 'காதல் பொழுது'
நாளை
விடியவிருப்பதாய்..!
***

**சிந்தனைப் பித்தன்.**

## காப்பாற்றுவோம்

என் நிலவே,
வா!
நிமிடங்களை
நிசப்தமாக்குவோம்!
*
அயல் வீட்டு
அத்திமரத்தடியில்
எம்
நிழல்கள் சங்கமித்தது
நினைவிருக்கிறதா?
*
உன்
கசங்கிப்போன
முந்தானையின்
கடைசி முடிச்சைப்பார்!
என் கடிதம்...
கண்ணீர்வரும்....!
*
கருத்தரித்துப்போன
என் இதயத்தை
கருச்சிதைவு செய்வதா?
*
வா....!
நம்
காதல் குழந்தையை
காப்பாற்றுவோம்!!
*

**யாழ்-ஞானகணேசன்.**

## விடியல்

இன்றும்,
கிழக்கு வெளிறியது,
நேற்றைய படுகொலைகளின்
இரத்தச் சகதியின்
கறை பூசி...!
**
கூடிழந்த பறவைக் கூட்டத்தின்
அவலக் குரல் அவற,
பேச்சிழந்த மானிடத்தின்
மூச்சதனை முற்றாக்க,
அராஜகத்தின்
அடுத்த படியினைத் தொடர்வதற்கு-
வழிகாட்டி
நாமிருக்கும் பங்கரைக்
காட்டிக் கொடுக்க–
வருகிறான்
இனவெறிச் சூரியன்...!
**

**ப.ராதா- பல்கலைக்கழகக் கல்லூரி**
**வவுனியா.**

## கல்லறை வரை....!

அதிகாலை மலரும்
ஆகாய நிலவு
தூங்கப் போகும்;
பனியின் ஸ்பரிச சிலிர்ப்பில்
புற்கள் நிமிரும்.
o
விடியலின் எழும்புகையிலும்
அவளின் நினைவுகள்
எச்சமாய் மிச்சமிருக்க...
கவிதையின் பிரசவத்தை
மனது பின் தள்ளிப்போடும்!
o
மாலையிலும் காலையிலும்
மயங்கிய பொழுதுகளிலும்
இக் கவிதை எழுதப்படாமலே
காலம் கழிகிறது.
o
எனக்குத் தெரியும்–
காதலியிடம் சொல்லாத
என் காதலைப் போல்
இக் கவிதையும்
உருவமில்லாமல் அலையும்–
ஆயுளின் எல்லை வரை...!!!
o

**அகன் கபிலன்.**

## தேன் கிண்ணம்

## ஓர் ஆயிரம் நிலவு....

கிராமப்
புறம் போல்
அது ஒரு
'அகதிப் புறம்'...
000
நாலுகால்
உள்ளவைக்கும்
இவர்களுக்கும்
வால் மட்டும்தான்
வித்தியாசம்.
000
வீடு
மாட்டுக் கொட்டில்!
உணவு
தவிடு!
சில வேளை,
அகதி நிவாரணப்
புண்ணாக்குகளும்
கிடைப்பதுண்டு.
000
காய்ந்து போன
மரங்களில்
குழந்தைகள்
படுத்துறங்கும்.
000
சில வேளை
நாளைப் பொழுது
விடியாதிருக்கலாம்–
இரவுகளில்
ஏவப்படும்
செல்கள்
எம் மீது விழுந்தால்!!
000
பூரணை தினத்தில்
வானத்தில்
ஒரு நிலவு...
'என் குடிலுக்குள்'
ஓர் ஆயிரம்
நிலவு,...
000

**மாரிமுத்து யோகராஜன்,**
**அக்கரைப்பற்று–08.**


## அந்த நாள் ஞாபகம்



↑ திருநீறு பூசித்திரிந்த கண்ணதாசனை திராவிட இயக்கத்துக்கு கொண்டுவந்தவர் கலைஞர் கருணாநிதி. இளம் வயதில் இருவரும் இணைந்து அடித்த கூத்துக்கள் ஏராளம். அவற்றில் சிலவற்றை பின்னர் கண்ணதாசன் வெளியே சொன்னதும் உண்டு. நண்பர்கள் இரு துருவங்களான காலம் அது. இங்கே படத்தில் கவியரசு கண்ணதாசன், இயக்குநர் சோமு (மத்தியில் நிற்பவர்), கலைஞர் கருணாநிதி. பசுமையான இளமைக் காலம்.



↑ இந்த மூவரும் நட்புடன் களித்திருந்த காலங்கள் பின்னர் கனவாய்ப் போயின. ஆயினும் மூவருமே முதல்வரானவர்கள். ஜெயலலிதா, எம்.ஜி.ஆர், கலைஞர். இழப்பு நட்புக்கு சொந்தக்காரர்கள்.



← எம்.ஜி.ஆருக்கு போட்டியாக கலைஞர் தன் மகன் மு.க.முத்துவை நடிக்கவைத்தார். ஆனாலும் போட்டி என்பது தெரியாமலிருக்க எம்.ஜி.ஆரை அழைத்து முத்து நடித்த படத்தை துவக்கிவைத்தார் கலைஞர். இப்போது இந்த முத்து கலைஞரின் சொத்தல்ல. ஜெயலலிதாவின் ஆதரவாளராக அப்பாவையே எதிர்த்துக் கொண்டிருக்கிறார். கலைஞரின் மறைந்த முதல் மனைவியின் மகன்தான் முத்து.

## இந்த வாரம் உங்கள் பலன்
(27.04.1997 தொடக்கம் 03.05.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன், வெள்ளி. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

★ சந்திரன்- மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, பண வரவு. | பகல் 11 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனக் கலக்கம், கடன் சுமை. | பி.ப. 4 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பண வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | தொழில் பேறு, அந்நியர் நட்பு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், அதிகார சித்தி. | பி.ப. 1 மணி |
| சனி- | இனசன நன்மை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### மேடம்: சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, செல்வாக்கு மிகுதி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | காரியத்தடை, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- | தொழில் மந்தம், பணத் தட்டுப்பாடு. | பகல் 11 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, பண வரவு. | பி.ப. 4 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| சனி- | முயற்சி பலிதம், குடும்ப சுகம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | கடன் தொல்லை, மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| புதன்- | உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. 4 மணி |
| வியாழன்- | வீண்குறை கேட்டல், மனப் பயம். | காலை 8 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, செல்வாக்கு மிகுதி. | மு.ப. 9 மணி |
| சனி- | முயற்சி பலிதம், உறவினர் பகை. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் சேர்க்கை, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, தொழில் உயர்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | கடன் தொல்லை நீங்கும், காரிய சித்தி. | மு.ப. 9 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, கௌரவம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- | பெரியோர் உதவி, பொருள் வரவு. | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனச் சஞ்சலம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | தொழில் கஷ்டம், வீண் முயற்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| புதன்- | இனசன நன்மை, பலவித பேறு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| வெள்ளி- | செல்வாக்கு மிகுதி, பணச் செலவு. | காலை 6 மணி |
| சனி- | அந்நியர் சகவாசம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்: சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பலவித பேறு. | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, தொழில் உயர்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |
| புதன்- | உறவினர் உதவி, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- | வீண்குறை நீங்கும், பலவித பேறு. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்: சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண்குறை கேட்டல், மனப்பயம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, தேகசுக நன்மை. | பி.ப. 3 மணி |
| புதன் - | உறவினர் பகை, கடன் தொல்லை. | காலை 7 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- | உறவினர் உதவி, காரியானுகூலம். | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தெய்வ தரிசனம், குடும்ப மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- | உறவினர் வருகை, செலவு மிகுதி. | பி.ப. 4 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| சனி- | வீண்குறை கேட்டல், மனப் பயம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் மந்தம், பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | இனசன நன்மை, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், செல்வாக்கு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | எதிர்பார்த்த நன்மை, பலவித பேறு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | இனசன நன்மை, காரிய சித்தி. | மு.ப. 10 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் பகை, காரியத்தடை. | பகல் 12 மணி |
| புதன்- | கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, பலவித பேறு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, காரிய சித்தி. | பி.ப. 3 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | இனசன நன்மை, ஆடம்பர வாழ்க்கை. | பகல் 12 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | தொழில் உயர்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. 1 மணி |
| புதன்- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், பயனுள்ள செயல். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- | வீண்குறை கேட்டல், கௌரவக் கேடு. | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நன்மை, வெளியிடப் பயணம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | வீண் முயற்சி, கடன் தொல்லை. | பி.ப. 2 மணி |
| புதன்- | காரியத்தடை, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, பணச் செலவு. | மு.ப. 9 மணி |
| சனி- | இனசன நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com





## புன்னகை

உள்ளமதில் மொட்டுவிட்டு
உதடுகளில் மலர்வது!
உலகமதைத் தொட்டணைத்து
உறவுமணம் கமழ்வது!

பள்ளம் மேடு எதுவுமின்றிப்
பலருமிங்கு அணிவது!
பணக்காரர் ஏழையென்ற
பகைமையினைக் களைவது!

கள்வர் பயம் சிறிதுமில்லாக்
கட்டித் தங்க நகையிது!
காண்பவர்கள் விழிகளையும்
கருத்தினையும் கவர்வது!

எள்ளளவும். செலவில்லாத
எளிமையெழில் உடையது!
இயற்கை அன்னை நமக்களித்த
இணையில்லாத கொடையிது!

-இளங்குமரன்-

சிறிய தொண்டுகள் தீர்த்தடி மைச்சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்
நங்கை கூறும் நவீனங்கள் கேட்பீரோ!
—சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# உழைப்பே உயர்வு தரும்!

ஒரு கிராமத்தில் ஆண்களும், பெண்களும் வயலில் கஷ்டப்பட்டு வேலை செய்து வந்தார்கள். அவர்களின் கடும் உழைப்பினால் விளைச்சல் அதிகமாகி அதன் மூலம் நன்கு வாழ்ந்து வந்தனர்.

ஆனால் அவ்வூரில் சின்னையா என்பவனின் மனைவி கண்ணம்மா மட்டும் உழைப்பை நம்பாமல் மந்திரங்கள் கற்றாலோ, அல்லது அற்புத தாயத்துக்கள் ஏதாவது கிடைத்தால் தான் நிறைய சம்பாதிக்க முடியும் என்ற மூடநம்பிக்கையில் இருந்தாள்.

ஒருநாள் அவ்வூரின் எல்லைக்குச் சென்று அங்கே இருந்த சாமியார் ஒருவரைச் சந்தித்து, அவரிடம் மந்திரித்த தாயத்தையும் வாங்கி வந்தாள்.

தினமும் கண்ணம்மா அந்தத் தாயத்தைப் பூஜையில் வைத்து சாமியார் சொல்லிக் கொடுத்த மந்திரங்களைச் சொல்லி பூஜித்து வந்தாள். இவற்றைக் கவனித்த சின்னையா, ஒருநாள் மாலை கண்ணம்மாவிடம் என்னவென்று அதைப் பற்றிக் கேட்டான்.

அதற்கு கண்ணம்மா, அது தமது வயலில் அதிக விளைச்சல் பெறுவதற்காக சாமியாரிடம் வாங்கி வந்த தாயத்து என்று கூறினாள், ஆனால் அது சின்னையாவுக்குப் பிடிக்கவில்லை. இது மூடநம்பிக்கை என்று அவளிடம் சொன்னான்.

அதற்குக் கண்ணம்மாவோ, "எமது வயலில் அதிக விளைச்சல் கண்டால், நம்மிடம் நிறையப் பணம் வரும். அந்தப் பணத்தால் நாம் நமது வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளலாம்," என்று கூறினாள்.

சின்னையா அதற்குப் பதில் ஒன்றும் கூறாமல் போய்த் தூங்கி விட்டான். காலையில் வெகுநேரம் வரை எழுந்திருக்காமல் சின்னையா தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள் கண்ணம்மா.

உடனே கணவனை எழுப்பி, "வயலுக்குப் போகவில்லையா? இவ்வளவு நேரமாகத் தூங்குகிறீர்களே?" என்று கேட்டாள்.

அதற்குச் சின்னையாவோ, "உன் தாயத்தினால் தான் அதிக விளைச்சல் கிடைக்கப் போகிறதே. பிறகேன் நாம் கஷ்டப்பட வேண்டும்?" என்று கேட்டான்.

கணவனின் பேச்சு கண்ணம்மாவைச் சிந்திக்க வைத்தது. அதன் பிறகுதான் அவளுக்குப் புத்தி வந்தது. கணவனின் முன்னால் மௌனமாக நின்றாள். கண்ணம்மா பேசாமல் நிற்பதைக் கண்ட சின்னையா,

"உனக்குப் புத்தி புகட்டுவதற்காகத்தான் இன்று சற்று நேரம் கூடத் தூங்குவது போல் நடித்தேன். நாங்கள் எந்த மூட நம்பிக்கையையும் பின்பற்றாமல் நன்றாக உழைக்க வேண்டும். உழைப்பே உயர்வு தரும்!" என்று கூறினான்.



உழைத்தாலொழிய வாழ்வில் உயர முடியாது என்பதைப் புரிந்து கொண்ட கண்ணம்மா அன்று முதல் மூடநம்பிக்கைகளைக் கைவிட்டு விட்டு கணவனுடன் வயலுக்குச் சென்று உழைக்கலானாள்.

## வாரம் ஒரு நாடு

### துர்க்மீனிஸ்தான்

**தலைநகர்**– அஷ்காபாத்
**பரப்பு**– 4,88,100 சதுரகிலோ மீட்டர்
**மக்கள் தொகை**– 40 இலட்சம்
**மொழி**– துர்க்மென், ரஷ்யன்
**சமயம்**– இஸ்லாம்
**நாணயம்**– ரூபிள்
**புதிய நாணயம்**– மனாட்
**தனி நபர் வருமானம்**– 1270 டொலர்.

**அமைவிடம்:**
ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள துர்க்மனிஸ்தான் முன்னர்- முன்னாள் சோவியத் யூனியனின் அங்கமாக இருந்தது.

**வரலாறு:**
முன்னாள் சோவியத் குடியரசின் ஓர் அங்கமாக இருந்தது. 1991 டிசம்பரில் சுதந்திரமடைந்தது.



**பொருளாதாரம்:**
விவசாயம் முக்கிய தொழில். நீர்ப்பாசனம் சிறப்படைந்துள்ளது. துர்க்மீனியக் குதிரைகள் உலகப் புகழ்பெற்றவை. எண்ணெய், நிலக்கரி, கந்தகம் போன்ற கனிப்பொருட்கள் உள்ளன.

## சிங்கம் ஏன் ராஜா?

சிங்கம்தான் மிருகங்களின் ராஜா என்று சொல்கிறோம். சிங்கம் மற்ற மிருகங்களைவிட வலிமை வாய்ந்ததா? மிகவும் வேகம் உடையதா? எடையில் பெரியதா? என்றால் அப்படி ஒன்றுமில்லை.

சிங்கத்தைவிட யானை வலிமை வாய்ந்தது. சிறுத்தை தான் வேகம் உடையது. கரடி சிங்கத்தை விட எடையில் கூடியது. அப்படியானால் சிங்கத்திற்கு இந்த ராஜா பதவி எப்படி வந்தது?

இதற்குக் காரணம் சிங்கத்தின் குணமும், கம்பீரமும்தான். சிங்கம் ஒரு போதும் மறைந்து வாழ்வதில்லை. வெட்ட வெளியில்தான் வாழ்கிறது. எதையும் திருடித் தின்பதில்லை.

இரை வேண்டுமென்பதற்காக மற்ற மிருகங்களை வஞ்சகமாக வேட்டையாடுவதில்லை. பசியெடுக்கும் வேளைகளில் 'நான் வேட்டைக்கு வருகிறேன்' என்று எல்லா மிருகங்களும் அறிந்து கொள்கிற மாதிரி பெரிதாக கர்ஜித்து விட்டுத் தான் சிங்கம் வேட்டைக்குக் கிளம்பும்.

பசியில்லாத வேளைகளில் சிங்கம்



எந்த ஒரு மிருகத்தையும் அடிப்பதும் இல்லை; வேட்டையாடுவதும் இல்லை. இதனால்தான் சிங்கம் 'ராஜா' வாக இருக்கிறது.

## மாஓ சே-துங்

உலகிலேயே மக்கள் தொகை அதிகமாக உள்ள நாடு! வளமெலாம் குவிந்து கிடந்தும் வறுமையில் உழலும் மக்களைக் கொண்ட நாடு! அச்சடிக்கும் கருவி, வெடி மருந்தின் உபயோகம் போன்றவற்றை உலகுக்கு அறிமுகப் படுத்தியிருப்பினும் அறியாமையும் மூட



நம்பிக்கையும் சோம்பேறித்தனமும் குடி கொண்டிருந்த நாடு.

பல துறைகளிலும் பின்தங்கி- இருள் மூடிக்கிடந்த சீனநாட்டை, அதன் தூக்கத்திலிருந்து விழிப்படையச் செய்து கோடிக் கணக்கான அந்நாட்டு மக்களைப் புது உலகம் காண வைத்தவர் மாஓ சே-துங் என்ற மாமேதை.

மக்களை அறியாமையிலேயே உழல விட்டு, பிரபுக்களை மட்டும் வாழ வைத்த மன்னர் ஆட்சி முறையை ஒழித்துக்கட்டி இன்றைய உலகில் ஒப்புவமை கூற முடியாத உயர் நிலைக்கு சீனாவை இட்டுச் சென்றவர் மாஓ சே-துங்.

இன்று சீனா உலக வல்லரசு நாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறிக் கொண்டு வருகிறது. மிகக் குறுகிய காலத்துக்குள் பலகோடி மக்களை விழிப்படையச்செய்த அருஞ்சாதனையாளரான தலைவர் மாஓ சே-துங் அந்நாட்டின் கடவுளாக மதிக்கப்படுகிறார்.

சீனாவின் தென் மாகாணமான ஹனனில் ஒரு கிராம விவசாயியின் மகனாக 1893 டிசம்பர் 26ல் மாஓ பிறந்தார். வாட்டும் வறுமை, நிலச்சுவாந்தர் களின் கொடுமை ஆகியவற்றின் மத்தியில் தனது இளமைக் காலத்தைக் கழித்தார். சிறுவனாக இருக்கும் போதே நூல்களைப் படிப்பதிலும் சிந்திப்பதிலும் பெரும் பொழுதைச் செலவிட்டார்.

1918ல் லெனின் தலைமையில் சோவியத் யூனியன் உதயமானதைத் தொடர்ந்து சீனாவையும் பொதுவுடமை நாடாக மாற்றி அமைக்கத் திடசங்கற்பம் பூண்டார்.

ஆனால் அப்போதிருந்த மன்னராட்சி மா ஓவை பல சிரமங்களுக்கும் உட்படுத்தியது. தனது தோழர்களுடன் மாஓ 3000 மைல்கள் வரை கால் நடையாகவே சென்றார். வடமேற்கு மாநிலமான யெனனை அடைந்து விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒன்று திரட்டி கெரில்லாப் போரை நடத்தினார். 1937ல் சௌ என்-லாயின் உறவு கிட்டியது.

இரண்டாவது உலகப் போரின்போது ஜப்பானால் சீனாவில் பாதகமான விளைவுகள் ஏற்பட்டன. உள்நாட்டு யுத்தங்களும் தலையெடுத்தன. மாஓ வின் செம்படை 1948ல் சக்கரவர்த்தி சியாங்கை ஷேக்கை நாட்டைவிட்டோட வைத்தது. அடுத்த வருடமே-1949ல் மக்கள் சீனக் குடியரசை மாஓ சே-துங் பிரகடனப்படுத்தினார்.

சீனா இன்று அரசியல் ஸ்திரமுள்ள, சமூகப் பொருளாதாரத்துறையில் மேம்பாடு கண்ட- பலம் பொருந்திய நாடாகத் திகழ்கிறது.

நவசீனாவைக் கட்டியெழுப்பிய மாஓ சே-துங் தனது 83வது வயதில்-1976 செப்டம்பர் 9ம் திகதி மறைந்தார்.

## விடுகதைகளும் விடைகளும்

1. வீட்டை விட்டு வெளியே வராதவன், வீதிச் சண்டைக்கு வழிவகுப்பான்.
அவன் யார்?
2. உருவத்தில் சிறியவன், உழைப்பில் பெரியவன்.
அவன் யார்?
3. கல்லிருந்தால் நீர் இல்லை, நீர் இருந்தால் கல் இல்லை.
அது என்ன?
4. கண்டதைப் பதிக்கும், பதித்ததைக் கொடுக்கும்.
அது என்ன?
5. ஓயாது இரையும்; எந்திரம் அல்ல. உருண்டோடி வரும்; பந்தும் அல்ல.
அது என்ன?
6. கண்ணால் பார்க்கலாம், கையால் பிடிக்க முடியாது.
அது என்ன?
7. இருப்பது இரண்டு கால், ஓடுவது குதிரை வேகம், இறக்கை உண்டு பறக்காது.
அது என்ன?
8. முதுகிலே சுமைதூக்கி முனகாமல் அசைந்து வரும், மூச்சுத் திணறாது முகமும் கோணாது.
அது என்ன?
9. பச்சைக்காய்தான் ஆனால் பாகற்காய் அல்ல, வெளியில் முள்ளிருக்கும் பலாப் பழமும் அல்ல, உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயும் அல்ல.
அது என்ன?
10. செக்கச் சிவந்திருக்கும், வைக்கோல் கொடுத்தால் தின்னும், தண்ணீர் கொடுத்தால் சாகும்.
அது என்ன?

### விடைகள்

1. நாக்கு 2. எறும்பு
3. பனிக்கட்டி 4. கமெரா
5. கடல் அலை 6. நிழல்
7. தீக்கோழி 8. நத்தை
9. ஆமணக்கு 10. நெருப்பு

தொகுப்பு: செல்வி. ஏ. நஸ்ரின்.

## கண் சிமிட்டும் வேளை....

ஒரு வினாடியில் பத்தில் ஒரு பகுதி நேரத்தில் கண்சிமிட்டல் நிகழ்கிறது. இது பற்றி மேலும் சில பிரமிக்க வைக்கும் தகவல்கள் இதோ:



- பெரும்பாலானோர் வினாடிக்கு 15 தடவைகள் கண்ணைச் சிமிட்டுகின்றனர்.
- மனம் எச்சரிக்கையடையும்போது கண் சிமிட்டுவது குறைந்து விடுகிறது. சாரதிகள், விமானிகள் மிகவும் குறைவாகவும், பயத்தால் அச்சமடைந்தவர்கள் மிகவும் அதிகமாகவும் கண் சிமிட்டுகின்றனர்.
- சந்தடி மிகுந்த வேளையிலும், வீதியைக் கடக்கும் போதும், சுவாரஸ்யமாக ஒன்றைப் படிக்கும்போதும், குறுக்கு விசாரணை செய்யப்படும் போதும் கண் சிமிட்டல் வெகுவாகக் குறைந்து விடுகின்றது.
- மனத்திற்கும், கண் சிமிட்டலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. கண் சிமிட்டல் என்பது எண்ணங்களை நிறுத்தும் வேளையில் நிகழும் செயல் என்று சொல்லியுள்ளார் ஒரு உடற்கூற்று நிபுணர்.

## மூன்று தலைநகர்

உலகிலேயே தென்னாபிரிக்க நாடுதான் மூன்று தலை நகரங்களைக் கொண்டுள்ளது. பிரிட்டோரியா நிர்வாகத் தலைநகர். பொலோயம் பொன்டேன் நீதித்துறைத் தலைநகர். கேப் டவுன் அரச தலைநகர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.05.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 190
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 188

**பரிசுக்குரியவர்:**
றிபாஸா சலாம்,
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு-12.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.எம். நிலூஜான், கஞ/ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. | பாத்திமா ஷானாஸ், கு/அல்ஹுதா மு.வி, றம்புகந்தன, கு/ரிதீகம. |
| சி. நவராஜ், புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். | செனோ ஆசீர்வாதம், புனித சூசையப்பர் கல்லூரி, மருதானை, கொழும்பு-10. |
| சு. கஜன், விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ், கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. |
| எ.எம். வஹ்பீக், பு/எருக்கலம்பிட்டி.மு.ம.வி, பாலாவி. | மதிவதனி பரமசிவம், த.மகா.வித்தியாலயம், டல்ஸி-ப-கனக்கு, டிக்கோயா. |
| எஸ்.எம். ஃபாதீலா, பெரியநீலாவணை-02, கல்முனை. | சூ. மதுரன், வவுனியா த.ம.ம.வித்தியாலயம். |



படிப்பகம்

www.padippakam.com



# அங்கம் 06




**இதுவரை** பழைய புத்தகக்கடையில் அந்த நோட்டுப் புத்தகம் கிடைக்கிறது. கையெழுத்தில் தனது கதையை எழுதியிருக்கிறாள் காயத்ரி. கதையைப் படித்துவிட்டு வந்து தன்னைக் காப்பாற்றும்படி எழுதியிருக்கிறாள். கதை விரிகிறது.

காயத்ரி–ரத்னா என்பவனை மணக்கிறாள். அவன் வீட்டுக்கு செல்கிறாள். ரத்னாவின் நடவடிக்கைகள் புதிராய் உள்ளன. ரத்னாவின் சகோதரி சரசு விதவை. அவளது செயல்கள் சந்தேகம் தருகின்றன.

வீட்டு சமையற்காரன் மகள் இந்திராவை உடலில் நகைகளை மட்டும் அணிவித்து நிறுத்தியிருக்கிறாள் சரசு. சிகரெட்டால் இந்திராவின் உடலை சுடுகிறான் அவள் தந்தையான சமையற்காரன்.

கதவு இடுக்கு வழியாக அக் காட்சியைக் காண்கிறாள் காயத்ரி. ரத்னாவிடம் தான் கண்டதை காயத்ரி சொல்கிறாள். சரசை வீட்டை விட்டுப் போகச் சொல்கிறான் ரத்னா. பின்னர் ரத்னாவும், சரசுவும் இரகசியமாகப் பேசுவதைக் கேட்கிறாள் காயத்ரி. எல்லாம் அவர்களின் நாடகம் என்று தெரிகிறது. தன்னை என்னவோ செய்யப் போகிறார்கள் என்று பயப்படுகிறாள் காயத்ரி. வீட்டுக்குப் பின்புறம் அவுட் ஹவுசில் ஒரு பெண்ணை அடைத்துவைத்திருப்பதையும் காண்கிறாள் காயத்ரி. அதிர்கிறாள். அடைக்கப்பட்டிருப்பவள் நிர்மலா என்று அறிய முடிகிறது. **இனி...**

-4-

தீர்மானித்துவிட்டேன். என் உயிருக்கு உயிரான இந்த நோட்டுப் புத்தகத்தை விட்டுப் பிரிவது என்று. இந்த ஒரு வழிதான் எனக்குத் தோன்றுகிறது. என் முதல் ஹனிமூன் தினத்தின்போது பெங்களூரில் வாங்கியது, அந்த நோட்டுப் புத்தகம். அதில் என் உணர்ச்சிகளை, நிகழ்ச்சிகளை அப்படியே இதுவரை எழுதி வந்திருக்கிறேன்.

என் சொந்தத் திருப்திக்காக, என் சொந்த நிம்மதிக்காக, எனக்கு இப்போது இந்த நோட்டுப் புத்தகம்தான் உதவப் போகிறது என நினைக்கிறேன். இதை நான் மிகவும் அவசரமாக எழுதுகிறேன். மாசாமாசம் டிரைவர் வந்து வீட்டில் இருக்கும் அத்தனை பத்திரிகைகளையும், செய்தித் தாள்களையும் விலைக்கு விற்க எடுத்துச் செல்வான்.. ஹாலில் பத்திரிகைகள் கட்டி வைத்திருப்பதைப் பார்த்தேன்.

அந்தக் கட்டுகளில் ஒன்றில் இதைச் செருகியும் விடப்போகிறேன். இது யார் கையிலாவது சிக்கும். அவர்கள் இந்தப் புத்தகத்தின் வரிகளைப் படித்துவிட்டு என்னை வந்து உடனே காப்பாற்றுவார்கள் என்கிற ஒரே ஒரு நம்பிக்கையில்...

இதுவரை இதைப் படித்துக் கொண்டிருந்த... என்ற சினேகிதரே! அல்லது சினேகிதியே! என்னை வந்து காப்பாற்றுவீர்களா? இனம் புரியாத அபாயத்தின் வாசலில் நிற்கும் அபலைப் பெண் காயத்ரியை வந்து காப்பாற்றுவீர்களா? சீக்கிரம்! சீக்கிரம்!

அவ்வளவுதான்.

இதைப் படித்ததும் என் உணர்ச்சிகள் எப்படி இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. காயத்ரிக்கு உதவி செய்ய உடனே செல்ல வேண்டியது கட்டாயமாகிவிட்டது. அவளை அபாயத்திலிருந்து காப்பாற்ற வேண்டியது என் கடமையாகிவிட்டது. எந்த அபாயம்? சரியாகத் தெரியவில்லை. அதைவிட–

காயத்ரி உதவி தேவை என்றுதான் எழுதியிருந்தாள். ஆனால், அவசரத்தில் ஒரே ஒரு முக்கிய விவரம் கொடுக்க மறந்து விட்டாள். அவள் வீட்டு விலாசம். இந்தப் பரந்த சென்னையில் எப்படித் தேடுவது? கல்சுவருக்குள் கூர்க்கா வைத்து வாழும் ஒரு ராட்சச ராஜரத்தினத்தை எப்படித் தேடுவது? உங்களுக்கு உடனே தோன்றியிருக்கும்.

ராஜரத்தினம் என்ற பெயரை டெலிபோன் டைரக்டரியில் பார்த்தேன். சென்னையில்.. எத்தனை ராஜரத்தினங்கள் பட்டியலிட்டிருக்கிறதோ அத்தனை பேரையும் ஒவ்வொருவராகப் போய்ப் பார்க்கலாம். அது ஒரு முறை, **Lost resort** (இறுதி நடவடிக்கை) ஆக வைத்துக் கொள்ளலாம். காயத்ரிக்கு உடனே உதவி தேவை, நேரம் தாழ்த்த முடியாது. வேறு ஏதாவது வழி இருக்குமா அவள் விலாசத்தைச் சட்டென்று கண்டுபிடிக்க? எனக்கு என் அரிய நண்பர் கணேஷ் என்னும் வக்கீலின் ஞாபகம் வந்தது. கணேஷை விலாசம் கண்டுபிடிக்க வேறுவழி இருக்கிறதா வென்று கேட்பதுடன் அவளுக்கு நான் சட்டப்படி எப்படி உதவி செய்ய முடியும் என்பது பற்றியும் கேட்டுக்கொள்ளலாம். எனவே கணேஷுக்கு டெலிபோன் செய்து விட்டு அவனைச் சந்திக்கச் சென்றேன்.

கணேஷ் கோர்ட்டுக்கு எதிரே ஒரு சந்தில் ஓர் அறையில் ஆபீஸ் வைத்திருக்கிறான். வாசலில் ஏழெட்டு கட்சிக் காரர்கள் காத்திருக்க அவன் ஆபீஸில் அதிக படாடோபம் கிடையாது. டைப் ரைட்டர் ரிப்பன் பெட்டியின் மூடிதான் ஆஷ்ட்ரே! சென்ற தடவை பார்த்ததற்குக் கொஞ்சம் வயசாகி இருந்த மாதிரி இருந்தான் கணேஷ். தீர்க்கமான மூக்கு அகன்ற நெற்றி...

"ரொம்ப நாளாச்சு பார்த்து... என்னைப் பற்றி நிறையத் தப்புத் தப்பாக எழுதித் தப்பித்துக் கொண்டிருக்கிறீர்கள். என்ன விஷயம் சொல்லுங்கள்?"

"இந்தப் புத்தகத்தைப்படி கணேஷ்!"

"என்ன, புதுசாக ஏதாவது கதையா? இது பற்றி **Legal Opinion** (சட்ட ஆலோசனை) வேண்டுமா? உங்கள் பேரில் ஒரு **Film Actress** (சினிமா நடிகை) இருக்கிறாளே!"–

கணேஷ் அதைப் புரட்டி, "இவ்வளவு தமிழ் படிக்க எனக்கு அவகாசம் கிடையாது என நினைக்கிறேன். சுருக்கமாக நான்கு வரிகளில் சொல்லி விடுங்களேன். **Bought in Bangalore on the day I lost my virginity.** (எனது கன்னித்தன்மையைப் பறி கொடுத்த அன்று பெங்களூரில் வாங்கியது.) கொஞ்சம் இருங்கள்..."

அடுத்த முக்கால் மணிநேரம் கணேஷ் மௌனமாகப் புகை பிடித்துக் கொண்டு ஒரு வரி விடாமல் அதைப் படித்தான். என்னைப் பார்த்தான்.

"உங்கள் முதல் கேள்வி, அவள் விலாசம் இல்லையே. எப்படி அவள் உதவிக்குப் போவது என்பது தானே?"

"ஆம். இரண்டாவது கேள்வி: அங்கு என்ன நடக்கிறது?"

"கொஞ்சம் இருங்கள். வசந்த்."

சரியாக நாற்பது நிமிஷத்தில் விலாசத்தை கண்டு பிடித்து விட்டார்கள் இரண்டு பேரும்.

கணேஷ் எப்படி அந்த முகவரியைக் கண்டுபிடித்தான் என்பதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். காயத்ரியின் நோட்டுப் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் படித்தான். பெங்களூரில் காயத்ரி அவள் கணவன் ரத்னாவுடன் ஹனிமூனுக்குச் சென்று தங்கியிருந்த தேதியும் ஓட்டலின் பெயரும் அந்த நோட்டுப் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருப்பதைப் பிடித்துக் கொண்டான். வசந்தைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டான். டெலிபோனை வெள்ளமாகச் சுழற்றினார்கள். **"You are Paying"** ("கட்டணம் நீங்களே செலுத்துகிறீர்கள்") பெங்களூரில் அந்த ஓட்டலில் ரூம் கிடைப்பது கஷ்டம். முன்பே எழுதி ரூம் 'ரிசர்வ்' பண்ணியிருக்கலாம். முன்பே எழுதியிருந்தால் பதில் எழுத வேண்டிய முகவரியும் கொடுத்துத்தான் எழுதியிருக்க வேண்டும். மேலும் ஓட்டலின் ரிஜிஸ்தரில் அவர்கள் வந்த விலாசம் இருக்கலாம். இருக்கவேண்டும். **STD**யில். முனைந்து பெங்களூரில் அவனுக்குத் தெரிந்த போலிஸ் அதிகாரியுடன் பேசி ஒரு நாற்பது நிமிடத்தில் அந்த வீட்டு முகவரி என்னும் விலாசம் ஹோட்டலின் ரிக்கார்டுகளிலிருந்து 'லபக்' என்று அகப்பட்டது.

"அம்பிகா காலனி! அது எங்கு இருக்கிறது?" என்றேன்.

"ஏய் வசந்த்! அம்பிகா காலனி?"

"நான் என்ன நடமாடும் ரோடு மேப்பா? தினம்தினம் ஒரு காலனி. அம்பிகா.... எங்கேயோ இந்தப் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.... கொஞ்சம் இருங்கள்.... ரொம்ப ஊருக்கு வெளியே இருக்கிறது என்று நினைக்கிறேன். பாஸ்! நீங்கள் போகப் போகிறீர்களா?"

"ம்ஹூம். ஸார்தான் போகப் போகிறார்"

நான் சற்று அதிர்ச்சி அடைந்தேன்.

"நான் கூடப்போக வேண்டுமா?" என்றான் வசந்த்.

"ம்ஹூம். நீ எதற்கு? ஸார் தனியாகப் பார்த்துக் கொள்வார். கில்லாடி அவர்!"

"நீங்கள் வரவில்லையா?"

"நாங்கள் எதற்கு?"

"ஏதாவது நடந்துவிட்டால்?"

"அது உங்கள் உத்தேசத்தைப் பொறுத்தது. நீங்கள் என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?"

"காயத்ரியைக் காப்பாற்ற வேண்டாமா?"

"காப்பாற்ற வேண்டிய பெண்கள் இந்த மெட்ராஸின் நடு செண்ட்டரிலேயே சந்துக்குச் சந்து இருக்கிறார்களே! இதற்காக அம்பிகா காலனிக்குப் போக வேண்டுமா? மேலும் நீங்கள் அங்கே சென்று அந்தப் பெண்ணைப் பார்த்து என்ன செய்வதாக உத்தேசம்?" 'பெண்ணே, உன் கதையைப் படித்தேன். வா என்னுடன். வந்துவிடு. நான் காப்பாற்றுகிறேன்.' என்று அழைத்து வரப்போகிறீர்களா? **Impossible** (நடக்க முடியாதது). கிங் ஆர்தர் காலத்துடன் இந்தத் தீரச் செயல்கள் நின்று போய்விட்டன.

"காயத்ரியைச் சந்திக்க உனக்கு ஆவலாக இல்லையா, கணேஷ்? அவள் எப்படிப்பட்ட பெண்! அவளுக்கு உதவி தேவையாக இருக்கிறதா, இல்லையா? இதைப்படித்ததும் உனக்கு என்ன தோன்றியது?"

"ரைட்டர் ஸார், இதைப் படித்ததும் எனக்கு இரண்டு சாத்தியக் கூறுகள் தோன்றுகின்றன. இந்தவரிகளை எழுதிய காயத்ரி உண்மையாகவே அந்தச் சூழ்நிலையில் இருக்கலாம். அல்லது சில கற்பனைப் பயங்கள் அவள் மனத்தை ஆக்ரமித்து, சிறிய விஷயங்களை வேறு ரூபத்தில் காட்டியிருக்கலாம்."

"அது நமக்கு எப்படித் தெரிவது?"

"தெரிந்தே ஆக வேண்டுமா?"

"வேண்டாமா?"

"சரி, போய்ப் பாருங்கள்... போய் அவளைச் சந்திக்க முடிகிறதா பாருங்கள். தனியாகச் சந்தித்தால் நலம். ஏதாவது எசகேடாக நிகழ்ந்துவிட்டால் என் டெலிபோன் நம்பர் உங்களுக்குத் தெரியும்."

கணேஷ் அவ்வளவு உற்சாகமில்லாமல் இருப்பதின் உள் நோக்கம் எனக்குப் புலப்படவில்லை. என்மீது ஏதோ கோபத்தில் இருக்கிறான் என்று நினைத்தேன்.

"சரி, நானே போய்ப் பார்க்கிறேன்" என்றேன் தீர்மானமாக.

"பெஸ்ட் ஆஃப் லக்! அப்புறம் நடந்ததை என்னிடம் சொல்லுங்கள்."

"கணேஷ்! மற்றொரு விஷயம்! காயத்ரியின் வாக்கியங்களிலிருந்து அந்த வீட்டில் என்ன நடக்கிறது என்று உத்தேசிக்க முடிகிறதா உன்னால்?"

"முடியும் என நினைக்கிறேன். அதற்கு காயத்திரியின் வரிகளை நான் கொஞ்சம் நிதானமாகப் படிக்க வேண்டும்... நோட்டுப் புத்தகத்தை எடுத்துச் செல்லப் போகிறீர்களா?"

"ஆம் இதை அடையாளம் காட்டித்தான் அவளை அணுகமுடியும் என நினைக்கிறேன்..."

"நான் பார்த்து யோசித்து வைக்கிறேன். அவர்கள் நால்வரும் ஒரு கோஷ்டி என்பது மட்டும் தெரிகிறது. சமையல்காரன், பெண், அக்கா, கணவன். இது அவர்கள் காயத்ரியின் முன் போடும் நாடகத்தின் பாத்திரங்கள். உண்மையில் அவர்கள் வேலை? நீங்கள்தான் போகிறீர்களே கண்டுபிடியுங்கள் பாக்கலாம். கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் அந்த வீட்டின் சூழ்நிலையைக் கூர்ந்து கவனியுங்கள். உங்களுக்குச் சொல்லியா தர வேண்டும்–? ஏதாவது தடையங்கள் கிடைத்தால் என்னிடம் சொல்லுங்கள்."

எனவே நான் மாலை சுமார் ஐந்து மணிக்கு நம்பர் 18, அம்பிகா காலனியை அடைகிறேன். அதுதான் என் பிரயாணத்தின் முடிவாகப்படுகிறது. அதுவரை எழுத்து வடிவத்தில் தெரிந்த காயத்ரியை உண்மை ரூபத்தில் பார்க்கப் போகிறேன். கையில் அவள் புத்தகம்... மனத்தில் எக்கச்சக்க எதிர்பார்ப்பு.. எப்படியும் அவளைத் தனியாகச் சந்திக்க முற்பட வேண்டும். அப்போதுதான் அவள் இயல்பாக இருப்பாள். முன்பின் தெரியாத வீட்டில் சென்று அந்த வீட்டில் வசிக்கும் ஒரு மனைவியை ஒரு அன்னியன் சந்திப்பது எப்படி? எனக்குத் தெரியவில்லை.

நான் மெதுவாக அந்த வீட்டை அடைகிறேன். காயத்ரியின் வாக்கியங்கள் ஞாபகத்திற்கு வந்தன. ஆம் அப்படியே இருந்தது. கருங்கல் காம்பவுண்டு சுவர் கண்ணாடித் துண்டு பதித்து வாசலில் 'மரகும்பாச்சி' கூர்க்கா' மூஞ்சி பூரா சிரிப்பான்.'

இப்போது அவன் சிரிக்கவில்லை. என்னைத் தடுத்து நிறுத்தினான்.

"கர்மே கோயி நஹி ஹை!" என்றான்.

"எல்லோரும் எங்கே?" என்று அபிநயித்தேன்.

"பாஹர் கயேன் ஹை! அப்கோன் ஹை?"

நான், "மே... மே... மே" என்று ஆட்டுக்குட்டிபோல் செய்து கொண்டிருக்க பின்னால் கார் ஹாரன் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால்... கணேஷும் வசந்தும் ஃபியட் காருக்குள் தெரிந்தார்கள். நான் அவர்களிடம் சென்றேன். "என்ன ஸார். என்ன ஆயிற்று?"

"வீட்டில் ஒருவரும் இல்லையாம்!"

"நீங்கள் காருக்குள் ஏறுங்கள். விஷயம் கொஞ்சம் விசித்திரமாக இருக்கிறது."

"என்ன?"

நான் காரில் ஏறிக் கொண்டேன்.

"வசந்த் சொல்லு!" என்றான் கணேஷ்

"நீங்கள் கிளம்பின பின் காயத்ரியின் கதையில் நான் எழுதி வைத்துக் கொண்ட குறிப்புகளை மறுபடி பார்த்தேன். கொஞ்சம் ரிசர்ச் பண்ணினேன். கொஞ்சம் யோசித்தேன். கொஞ்சம் கண்டுபிடித்தேன். அவர்கள் உண்மையான பிசினஸ் என்ன என்று ஊகிக்க முடிகிறது காயத்ரியின் புத்தகத்திலிருந்து"

"என்ன அது?"

"காயத்ரி அடிக்கடி குளிக்கும் போதோ அல்லது படுக்கை அறையிலோ 'யாரோ பார்க்கிறார்கள்' என்ற உணர்ச்சி ஏற்படுவதாக எழுதியிருக்கிறாள் அல்லவா? பாத்ரூமில் கதவில் ஒரு துவாரம்... அப்புறம் ரத்னா படுக்கை சம்பவத்தின் போது விளக்கை அணைக்க மறுப்பது. அப்புறம் அய்யர் 'எல்லாவற்றையும் மறுபடி எடுக்க முடியாது' என்று சொல்வது– அதெல்லாம் பார்த்தால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எங்களுக்குத் தோன்றுகிறது தெரியுமா?"

"என்ன?"

"அந்தப் பெண்ணுக்கு அலங்காரம் செய்து நகை போட்டுப் பார்ப்பதைப்பற்றி காயத்ரி எழுதியிருக்கிறாளே, ஏன் தெரியுமா?"

"ஏன்?" என்றேன் ஆவலுடன்.

வசந்த் பதில் சொல்லவில்லை.

"இதோ அவர்கள் வந்துவிட்டார்கள்!" என்றான். நான் எதிரே பார்த்தேன். ஒரு கார் அந்த வீட்டு வாசலில் சென்று நிற்க, கூர்க்கா அவசர அவசரமாகக் கதவைத் திறந்தான்.

"வசந்த்! அந்தக் காரின் பின்னாலேயே ஒட்டிக் கொள்" என்றான் கணேஷ்.

"என்ன செய்கிறார்கள்?" என்றேன் ஆவல் தணியாமல்.

"அப்புறம் பேசலாம். இப்போது கொஞ்சம் ஆக்ஷன் ரைட்டர் சார். அந்த வீட்டில் நடப்பது நாங்கள் நினைப்பது என்றால், அந்த மாதிரி காரியங்கள் செய்பவர்கள் கொலை பாதகத்திற்கும் அஞ்ச மாட்டார்கள். ஜாக்கிரதையாக இதை அணுக வேண்டும். எனவே நானும் உங்களுடன் வரத் தீர்மானித்து விட்டேன்."

கூர்க்கா எங்களை நிறுத்தினான்.

"வசந்த்-நிற்காதே; அந்தக் காருடன் போ!"

வீட்டில் போர்ட்டிகோவில் அந்தக் கார் நிற்க; அதன் பின் பக்கத்தை, முதுகை ஏறக்குறைய முத்தமிட்டுக் கொண்டு எங்கள் வண்டி நின்றது.

கூர்க்கா அங்கிருந்து விசில் ஊதிக் கொண்டு எங்களை நோக்கி ஓடிவந்தான்.

**(தொடர்ந்து வரும்)**

நவீன எழுத்துலக வேந்தன் — சுஜாதா

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: ஏ. யோகேஸ்வரன்.
வயது: 23
முகவரி: 32, பள்ளி வீதி, நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீவி.

பெயர்: எம். விஜயா.
வயது: 29
முகவரி: VENIZELOU-11, PANORAMA-55236, THESSALONIKI, GREECE.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: வி. லோட்டஸ்.
வயது: 24
முகவரி: ROOM NO-6, P.O.BOX- 3632, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். அஸாத்.
வயது: 25
முகவரி: 150, பிரதான வீதி, இரத்தினபுரி.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பேனா நட்பு.

பெயர்: பௌஸியா.
வயது: 28
முகவரி: MUSA BOLAND, P.O.BOX- 20651, SAFAT- 13067, KUWAIT.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை.

பெயர்: முகமட் ஹுஸைர்.
வயது: 25
முகவரி: P.O.BOX- 17061, JEDDAH-21484, K.S.A.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.

பெயர்: எல். தௌபீக்.
வயது: 20
முகவரி: டீன் ரோட், காத்தான்குடி-6.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஆர். மௌசூக்.
வயது: 20
முகவரி: அரை ஏக்கர் கே.எம். ரோட், கிண்ணியா.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, ரீவி.

பெயர்: கே. சோபனகாந்தன்.
வயது: 21
முகவரி: 279, திருமலை வீதி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: சினிமா.

பெயர்: தோமஸ் ஜேக்கப்.
வயது: 19
முகவரி: உடபாலை தோட்டம், மத்திய பிரிவு-405, பொரலன் கொட போஸ்ட்.
பொழுது போக்கு: வானொலி.

பெயர்: கே. ஜெயகுமார்.
வயது: 20
முகவரி: கடற்கரை வீதி, கதிரவெளி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். றிஸ்மி.
வயது: 21
முகவரி: 9/3, பன்சல வீதி, பேருவளை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான்.
பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்து சேர்கிறாள்.
கணேசனும் தேடி வருகிறான்.
கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.
உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா.
கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள். சுமதி பழையதை நினைக்கிறாள்.

**இனி.....**

தமிழகத்தின் புதுமை எழுத்தாளர் பிரபஞ்சன் படைத்த சிறந்த கதைகளில் ஒரு முத்து இது! பெண் என்பவள் வெறும் ஜடமல்ல உணர்ச்சிகள் உள்ள மனுஷி என்பதை உணர்வுபூர்வமாக— அற்புதமான நடையில் தரும் படைப்பு இது!

# கனவு மெய்ப்பட வேண்டும்

புதுமைத் தொடர் — அத்தியாயம் 08

**- பிரபஞ்சன் -**

"சேச்சே! என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? கட்டாயம் வருவேன்..."

சுமதி கீழே வந்தாள். அப்பாவுடன் மருத்துவமனைக்கு வெளியே வந்ததும், குற்ற உணர்வோடு அவருடன் தொடர்ந்து நடப்பது சாத்தியப்படாது என்பதை உணர்ந்தாள். கொஞ்ச தூரத்தில், பாண்டியன் தெருத் திருப்பத்தில், அந்த ஹோட்டல் இருப்பது நினைவுக்கு வந்தது. வீட்டு முற்றத்தில் நாலைந்து மேஜைகளைப் போட்டு வெயில் நேரத்துக்கு மட்டும் அழகிய வண்ணம் மிகுந்த துணி மறைப்பைப் போட்டு, ஹோட்டலாக அதை மாற்றி அமைத்திருந்தார்கள். சூடாக இட்லி, தோசை, வடை எனக் கொஞ்சமான ஐட்டங்கள், தரமான காபி என மூலதனம் அதிகமின்றி சுகமான சம்பாத்தியம் செய்து கொண்டிருந்தார்கள் இரு இளம் பெண்கள். கல்லூரியில் "கேட்டரிங்" படித்தவர்கள். அவர்கள் படித்து முடித்து, மாதச் சம்பள வேலை தேடாமல், இந்த ஹோட்டலைத் தொடங்கி அழகாக வளர்த்து வந்தார்கள். கண்ணுக்கு முன் வாழ்க்கையைத் தைரியமாக முகம் பார்த்து, அதைப்பெற்றுக் கொள்கிற அந்த இரு பெண்களின் மேல் உள்ள அபிமானம் காரணமாக, அப்பக்கம் வர நேருகிற போதெல்லாம், அந்த ஓட்டலுக்குச் சென்று வருவாள் சுமதி.

வழக்கம்போல், ஓட்டலில் கும்பல் இல்லை. நாலைந்து பேர்களே அமர்ந்து உண்டு கொண்டிருந்தார்கள். சுமதியைப் பார்த்ததும், அந்த ஹோட்டல் உரிமையாளர்களில் ஒருத்தியான ஷீலா, ஓடி வந்து சுமதியை வரவேற்றாள்.

"வாங்க, மேடம், வாங்க, வாங்க..." என்று வரவேற்று ஒரு மேஜைக்கு முன் அவர்களை அமரச்செய்தாள்.

"சௌக்கியமா ஷீலா..."

"உங்க உதவியால் நன்றாக இருக்கிறேன், மேடம்."

"அது என்ன, என் உதவி?"

"இல்லை, மேடம், உங்கள் அருள்தான். மற்ற ஆபீசர்கள் எல்லாம், இந்த இடத்தில் ஹோட்டல் நடத்த அனுமதி மறுத்த போது, நீங்கள் தானே அனுமதி பெற உதவி செய்தீர்கள். அதோடு, பேங்கிலும் சிபாரிசு செய்து, பண உதவியும் பெற்றுத் தந்தீர்கள்."

சுமதிக்கு மனநிறைவு ஏற்பட்டது. ஷீலா நகர்ந்ததும் சுமதி அப்பாவிடம், இப்பெண்கள் சுய வேலை வாய்ப்புக்காகத் தன்னிடம் உதவி கோரி வந்ததையும், தான் அவர்களுக்கு உதவிகள் செய்ததையும் நினைவு கூர்ந்தாள்.

"இந்தப் பெண், நான் செய்தவைகளை உதவி என்கிறாள், பார் அப்பா. என் நாற்காலியில் இருப்பவள் என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் நான் செய்தேன். அது என் கடமை தானே? அதற்காகத்தானே நான் அரசாங்கத்திலிருந்து சம்பளம் பெறுகிறேன்."

அப்பா புன்னகை செய்தார்; சொன்னார்:

"அதிகாரிகள் உழைப்பதில்லை. வேலை செய்வதுகூட இங்கே, உதவி செய்வதாகப்படுகிறது. அதனால், நீ அவர்களுக்குச் செய்தது, உன்னிடத்தில்—யார் இருந்தாலும் செய்ய வேண்டியதுதான். ஆனால் யாரும் செய்வதில்லை. வீண் காலதாமதம் செய்வார்கள். காசு எதிர்பார்ப்பார்கள். காசு வராது என்றால், எந்தக் காரியத்தையும் உடனே முடிக்க மாட்டார்கள். நீ அவர்களின் தேவையை முடித்தாய். அவர்கள் வாழ்க்கையைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அம்மா உன்னை நான் வேலைக்குத் தயார் பண்ணி அனுப்பிய நோக்கமே இதுதான். எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்குத் தொண்டு செய். உன்னிடம் வருபவர்களுக்கு உன்னால் ஆனதை உடனே செய். அப்போது தான், சம்பளப் பணம் சந்தோஷம் தரும். இல்லாவிடில், அந்தப் பணம், திருட்டுப் பணம், லஞ்சப் பணம்."

இட்லியும் வடையும் வந்தன.

"நான் இன்னும் பல்லையே விளக்கவில்லையேம்மா"

"நானும் தாம்பா. அதனால் என்ன? ஒரு நாளைக்குச் சாப்பிட்ட பிறகு பல் தேய்ப்போம்!"

அப்பா, சிரித்துக் கொண்டே சாப்பிடத் தொடங்கினார்.

"என்னமோ, சொல்ல வேண்டும் என்றாயே..?"

"ஆமாப்பா. நான் ஒரு தப்பு பண்ணிட்டேன்!"

அப்பா அவளை நிமிர்ந்து பார்த்தார். பிறகு சொன்னார்.

"உன்னால்கூடத் தப்பு பண்ண முடியுமா அம்மா?"

சுமதிக்கு அப்பா தன் கன்னத்தில் அறைந்தது மாதிரி இருந்தது. அப்படிச் சொன்னதைக் காட்டிலும் அறைந்தே இருக்கலாம் என்று பட்டது அவளுக்கு.

"இல்லைப்பா! தப்புத்தான் பண்ணிட்டேன்."

"என்ன தப்பு?"

"நான் டூருக்குப் போவதாக உங்களிடம் சொன்னேன் அல்லவா? டூர் போகலை. இங்கே என் சிநேகிதர் ஒருத்தர் திடீரென்று உடல் நலம் இல்லாமல் போய்விட்டார். அவரைப் பார்க்க வந்து விட்டேன். இரவு கூட இங்கேதான் தங்கினேன்..."

"சரி. அதனால் என்ன? டூர் போவதைக் காட்டிலும் ஒரு சிநேகிதருக்கு அதிலும் அவர் உடல் நலம் குன்றியிருக்கும்போது உதவியாய் இருப்பது மேலான காரியம் அல்லவா? இதில் எங்கே தப்பு வந்தது?"

"ஆனாலும், டூருக்குப் போவதாகச் சொல்லி விட்டு இங்கே வந்து தங்கிக் கொண்டது தப்புதானே, அப்பா?"

"சும்மா மனசை அலட்டிக் கொள்ளாதே! டூர் போவது என்று, முடிவு எடுத்திருப்பாய்; அப்புறம் நண்பருடன் இருக்கலாமே என்ற எண்ணம் வந்திருக்கும். இதிலே என்ன தப்பு? பேசாமல் இரு. நீ என்ன சின்னக்குழந்தையா? நிறையப் படித்தவள். பொறுப்பான உத்தியோகம் வகிப்பவள். உன் காரியங்களில் சரி, தப்பு பார்க்க உனக்குத் தெரியாதா? தப்பே செய்ததாக இருக்கட்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில்தான் நீ அதைச் செய்வாய். அதனால் என்ன. மனிதர்கள் தப்பு செய்வார்கள். தப்பு செய்தால்தான் அவர்கள் மனிதர்கள். தெய்வங்களால் தப்பு செய்ய முடியாதே! ஆகவே தெய்வங்களைக் காட்டிலும் மனிதர்கள் மேலானவர்கள். தப்பு செய்தவர், திருத்திக் கொள்ளும் போது தப்பு செய்யாத படியால் அந்த வாய்ப்பு தெய்வங்களுக்கு இல்லை."



ஸ்பூனைப் பிடித்த கை நடுங்கியது. சுமதிக்கு, மனம் சந்தோஷத்தாலும், அப்பாவின் உயர்வை நினைத்த பெருமிதத்தாலும் பொங்கியது. கண்ணில் நீர் சுரந்தது. இவருக்கு மகளாகப் பிறக்க வாய்த்தது, எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்!

"அப்பா, அந்த நண்பர் யாரென்று நீங்கள் கேட்கவில்லையே...?"

"சொன்னால் தெரிந்து கொள்கிறேன்."

"உங்கள் பழைய மாணவர்தானப்பா கணேசன், நான் உங்களுக்கு அவரைப் பற்றிச் சொல்லியிருக்கிறேனே, இப்போது, பேராசிரியராய் இருக்கிறாரே... அந்தக் கணேசன்."

அப்பாவுக்கு நினைவைப் புதுப்பித்துக்கொள்ள, சில நிமிஷங்கள் ஆயின.

ஓ... அந்த சேந்தமங்கலம் கணேசனா? தெரியுமே. நல்ல பையன். அவனுக்கா உடல் நிலை சரியில்லை? சொல்லியிருந்தால் நானும் பார்த்திருப்பேனே, அம்மா?"

"அவருக்குத் துணையாய் நேற்று இரவு தங்கும் படியாகிவிட்டது."

"ஓகோ, உணவுக்கும், மற்ற சௌகர்யங்களுக்கும், ஆஸ்பத்திரியில் குறை ஒன்றும் இல்லையே, அம்மா?"

'அப்பா, அப்பா' என்று அரற்றிய மனதுடன், அவள் எழுந்தாள். மீண்டும் ஷீலாவுக்கு வாழ்த்துச் சொன்னாள். ஷீலா நெகிழ்ந்து போய் மீண்டும் நன்றி சொன்னாள். மருத்துவமனையை விட்டு வெளிவரும் போது இரண்டு தீர்மானங்களை எடுத்திருந்தாள் சுமதி. ஒன்று, எந்தக் காரணத்தை முன்னிட்டும் அப்பாவிடம் இனிப் பொய்யே சொல்வதில்லை. இரண்டு, எந்த நிலையிலும், தன் உத்தியோக வாழ்க்கையில், எவ்வகையில் எல்லாம் முடியுமோ, அவ்வகையில் எல்லாம் பிறருக்கு உதவியாய் இருப்பது.

அலுப்பு தீரக் குளித்தாள். உச்சியும், உடலும் குளிரக்குளிர, நீர்த்தாரை அங்கம் எல்லாம் வழிய வழிய அலுப்பு தீரக் குளித்தாள். மனம், பாரம் நீங்கி மகிழ்ச்சியுற்றது. உடை மாற்றிக் கொண்டாள். முகம் துடைக்க இருக்கட்டும் என, சின்ன டவல் ஒன்றைப் பைக்குள் வைத்துக்கொண்டாள். நேற்று கணேசன் சொன்னது நினைவுக்கு வந்தது. வங்கிக் கணக்குப் புத்தகத்தை எடுத்து, தன் இருப்பில் இருக்கும் தொகையைப் பார்த்தாள். சுமார் மூவாயிரம் இருந்தது. அப்பா, அம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு ஒரு ஆட்டோ பிடித்தாள். வங்கிக்குச் சென்றாள். இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயை எடுத்துக்கொண்டாள். மருத்துவமனை சென்றாள். வசந்தி 'டியூட்டி' முடிந்து சென்று விட்டிருந்தாள். மாலையில் சுமதியைச் சந்திப்பதாகச் சொல்லிச் சென்றிருந்தாள் கணேசனிடம்.

பதினொரு மணியைப்போல் வந்த டாக்டர், கணேசன் உடம்பைப் பரிசோதனை செய்து, திருப்தி தெரிவித்தார்.

கடைசியாக, ரத்தம், சிறுநீர் பரிசோதனை செய்ய வேண்டியது பாக்கி இருக்கிறதென்றும், நாளைக் காலை அவர் மருத்துவமனையை விட்டு வெளியேறலாம் என்றார். டாக்டர் சென்ற பிறகு சுமதி, கணேசனிடம் சொன்னாள்,

"நோய் வந்து போன பிறகு, கொஞ்சம் களையாகக் கூட இருக்கிறீர்கள்..."

கணேசன் சிரித்துவிட்டுச் சொன்னான்.

"அப்படியானால், இன்னும் பத்து நாள், கூடவே ஜுரம் இருக்கலாம் போல் இருக்கிறது" என்ற கணேசன், ஒரு நிமிஷம் தயங்கி இருந்து விட்டுச் சொன்னான்:

"எத்தனை நாள் காய்ச்சலில் கிடந்தாலும், என் கறுப்பு நிறம் மாறப்போவதில்லை."

சுமதிக்குத் தன்னையே யாரோ இழிவுபடுத்திப் பேசிவிட்டது மாதிரி இருந்தது.

"ஏன் இந்தத் தாழ்வு மனப்பான்மை? நோய்களிலேயே கொடியது இந்தத் தாழ்வு மனப்பான்மை நோய்தான், கணேசன். தோலின் நிற மாற்றத்துக்கும், மனசுக்கும் என்ன சம்பந்தம்? ஆன்மாவில் கருமை படியாமல் பார்த்துக் கொள்வதுதான் முக்கியம்."

"சுமதி! உங்கள் பக்கத்தில், இருக்கும் போது என் கருமை நிறம் மிகத் தூக்கலாகத் தெரிகிறது. நீங்கள் கத்திபோல் பளபளப்பாக இருக்கிறீர்கள். நான் கத்தியின் கைப்பிடி போல் இருக்கிறேன்."

சுமதி மனம் வருந்தினாள்; சொன்னாள்:

"தோ பாருங்கள்... கணேசன், கத்தி என்பது பிடியுடன் சேர்ந்ததுதான். இரண்டும் ஒவ்வொரு வகையில் பணி ஆற்றி, கத்தி என்கிற பொருளை முழுமைபெறச் செய்கின்றன. தவிரவும், நம் தோலின் நிறம் என்பது நாம் பிறந்த ஜாதிகளைப் போன்றது. இரண்டுக்கும் நாம் பொறுப்பாளி இல்லை. நாம் வேண்டிப்பெற்ற வரமல்ல இந்தத் தோலின் நிறமும், ஜாதியும். இரண்டும் நம் மேல் திணிக்கப்படுபவை. இவைகளைத் துறப்பது தான் நாம் செய்ய வேண்டிய முதல் கடமை. உங்கள் மனசில் இருக்கிற இந்த ஆயிரம் வருஷத்துக் கசடுகளை அழித்து விடுங்கள்."

கணேசன், அந்தப் பொழுதுக்குத் திருப்தியுடன் சிரித்தான்.

அந்த இரவிலும், அவள் அறையில் படுத்துக் கொண்டாள்.

நீண்ட நாழிகை வரை கணேசன் அவன் பால்ய காலம் குறித்துப் பேசிக் கொண்டிருந்தான். கேட்டுக் கொண்டிருந்தவள், எப்போது உறங்கினாள் என்று அறியாமல் உறங்கிப் போனாள். நேரம் நள்ளிரவைத் தாண்டிச் சென்றிருக்கும். தன் மேல் படும் ஸ்பரிசத்தை உணர்ந்து திடுக்கிட்டு விழித்தாள் சுமதி. அது கணேசன்தான்.

ஒரு கோரிக்கை, ஒரு வேண்டுகோள், ஒரு தாபம், ஒரு மன்றாடல், ஒரு விண்ணப்பம் அவன் கண்களில் இருந்தது. அந்தத் தாழ்வு மனப்பான்மையால் நொந்து கொண்டிருக்கும் குழந்தையை நோக்கினாள் சுமதி. அந்தக் கணம்தான். கணத்தின் அரைப் பகுதி நேரத்துக்குள் முடிவெடுத்தாள் அவள். அந்த முடிவைச் செயல்படுத்தவும் செய்தாள்.

அவள் அவனை ஏற்றுக் கொண்டாள்.

"சுமதி விடிஞ்சாச்சு. எழுந்திரு. எவ்வளவு நாழியா எழுப்பறது? உம்.... எழுந்திரு..."

சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள் சுமதி. ஒரு வித்தியாசம் பளிச்சென்று அவனிடமிருந்து வெளிப்பட்டது தெரிந்தது.

(தொடர்ந்து வரும்)

---

ஆவேசமான அறை கன்னத்தில் பாய தெறித்து விழுந்த வார்த்தைகள் உத்வேகத்தை ஊட்டின....

# போட்டது முளைக்கும்



**ஜெயமணி**

அம்மாவின் மேடிட்ட வயிற்றை தடவிப் பார்த்தாள் இளைய பெண் ஸ்நேகா. வசுமதி அந்தப் பிஞ்சுக் கைகளின் ஸ்பரிசத்தில் வலியைச் சற்று மறந்தவளானாள்.

அவளின் வியர்த்துப்போன முகத்தை யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் பெரிய பெண் சுபா. பெண்ணிடம் தண்ணீர் கேட்டு குடித்தவள் ஆயாசத்துடன் சுவரோடு சாய்ந்து கொண்டாள்.

பிரசவ வலியின் வேதனையை சகித்துக் கொள்ளப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தவளிடம், "அம்மா இந்தத் தடவை தம்பிப் பாப்பாதானேம்மா?" ஆவலும், தயக்கமுமாகக் கேட்டாள் ஸ்நேகா.

"இ...ல்...லை."

"அப்போ தங்கச்சிப்பாப்பாவா?" ஏமாற்றத்துடன் அடங்கினாள் இளையவள்.

"ஏம்மா, ஏனப்படிச் சொல்றீங்க? தம்பி தான் வேணும்மா. இல்லைன்னா அப்பா உங்களை ரொம்ப படுத்துவார். அதாலை வேணாம்மா தங்கச்சி." பயத்துடன் கூறினாள் பெரியவள் சுபா.

வசுமதிக்கு அந்த நிலையிலும் பெண்களின் பரிவை நினைக்க மனசு நிறைந்து போனது. "ஏம்மா சுபா! இப்பிடி இன்னொரு பெண் எனக்கிருந்தா அவளும் அம்மாவை எப்பிடி அணைச்சுக் கொள்ளுவா தெரியுமா?"

"ஆனா அப்பா பெண் குழந்தைன்னா வெறுக்கிறாரேம்மா. வெறும் தண்டச் செலவா, பாரமா நினைச்சு எப்போதும் எங்களை கரிச்சுக் கொட்டிறாரே!" விழிகள் நீரில் மிதக்கக்கூறும் மகளது வேதனை அவளை என்னவோ செய்தது.

'அவங்களுக்கு எங்கே புரியுறது? பெண்ணில்லாமல் எதுவுமே இல்லை என்பது நன்றாகப் புரிஞ்சும் பெண்ணை ஒதுக்கிறார்கள். பெண்டாளமட்டும் வேணும், பிள்ளையா, சகோதரியா வேணாம். இவர்களாலேயே தான் இந்த மாதிரி நிலமை என்பதைப் புரிந்து கொள்ளாமல் சீதனம் கொடுக்கவேணும் என்று கொதிக்கிறார்கள். வாங்கும் போது பெண்பிறக்காது என்ற எண்ணம் பெத்துக் கொள்ளும் போதுதான் மறுகிப்போய் விழிக்க வைக்கிறது.'

சொல்ல நினைத்ததை சொல்ல முடியாமல் வலி துளைத்தது. வெறும் முனகல் புறப்பட்டது. சுபா எழுந்து வெளியே ஓடினாள். "ஆண்டவா அம்மாவுக்கு இந்தத் தடவையென்றாலும் ஆண்குழந்தையைக் கொடுத்துடு. இல்லாட்டி எங்களோடு சேர்ந்து அந்தப் பெண்ணும் ஏச்சும், குட்டும் வாங்குவதோடு அம்மாவும் நிம்மதியில்லாமல் நாளும் அவஸ்த்தைப் படணும்."

வேண்டியபடி பக்கத்து வீட்டு மாமியை அழைத்துவந்து அம்மாவைக் காட்டினாள்.

பிரசவம் நல்லபடி முடிந்து விட்டது. வசுமதி நினைத்தபடி பெண் குழந்தை பிறந்திருந்ததில் அவளுக்குத் திருப்தி. ஆனால் குழந்தைகளுக்கோ பெருத்த ஏமாற்றம்.

'அப்பா வந்ததும் என்ன நடக்குமோ. அம்மாவைத் திட்டுவதோடு நிறுத்துவாரோ. இல்லை அதுக்கும் மேலே...?' "இந்தத் தடவையும் பொட்டையா பெத்தால் அப்புறம் பார் என்ன நடக்கும் என்று." கோபமாக கத்தியது நினைவுக்கு வந்தது.

கலக்கத்துடன் காத்திருந்தனர். தந்தை வருவதைக் கண்டதும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டனர். யாரும் பேசவில்லை.

"அம்மா எங்கே?"

கேட்டவண்ணம் உள்ளே அறையை எட்டிப்பார்த்தான்.

"ஹாய் வசு என்ன பையன் என்னவாம்?" ஆவல் உந்த கிட்டத்தில் பார்த்தான்.

அமைதியாகக் கிடந்தாள் வசுமதி. குழந்தை துணி முடிச்சுக்குள் பொதியாகக் கிடந்தது. விலக்கியவன், நெருப்பைத் தொட்டவனாகக் குதித்தான்.

"என்ன அழுத்தமடி உனக்கு? பொட்டச்சியாப் பெத்துப் போட்டு திமிரா கிடக்குறே? உன்...னை. உனக்கென்னடி உழைச்சுப் போடறது நான்தானே. ஒண்ணா, இரண்டா? மூணு முண்டச்சிகளுக்கு முக்கி முழுங்கி உழைச்சாலும் என்னாலை சீதனம் கொடுக்க முடியுமோ? எங்காவது அநாதை விடுதியிலை போட்டுட்டு வாறதுதானே?"

"பெத்தவங்க இருக்க எதுக்காக அநாதையாக விடணும்?"

"ஓமோம் நீ பேசுவாய்தானே. உழுகிற மாட்டுக்குத்தான் வலி தெரியும். உனக்கென்ன தெரியும். உட்காந்து தின்னுற ஜாதி நீ!"

"இப்ப என்ன நடந்து போச்சுன்னு குதியா குதிக்கிறீங்க? நாம பெத்த புள்ளைங்க என்பதை மறக்காதீங்க."

"எப்பிடி., எப்பிடி மறக்கிறது? மூணு பொட்டச்சிகளை தலையிலை சுமந்து கூவ வேண்டியதுதான்– மாப்பிள்ளை இருக்கோ மாப்பிள்ளைன்னு...."

"அதுகளின் காலம் எங்கோ இருக்கு. பச்சமண்ணுகளை எதுக்காக இப்பிடி கரிச்சுக் கொட்டிறியள்? என்னை அப்பா கூவி வித்தாரா என்ன? இருந்த இருப்பிலை லட்சம், லட்சமாக எண்ணி எடுத்துப் பொன்னை நிறுத்து, உரைச்சு வாங்கியபோது பொட்டைச்சி பெத்துக்க மாட்டேன், பொடியனாகத்தான் பெத்துக்குவேன் என நினைச்சியளாக்கும்!" எத்தனையோ ஆண்டுகளாக மனசிலை உறுத்திய அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டாள்.

அவனுக்குக் கோபம் கொழுந்துவிட்டது.

"என்னடி.. குத்திக்காட்டுறியா? நாயே பொட்டைக் கழுதைங்களைப் பெத்துப் போட்டு....."

ஆவேசமான அறை அவள் கன்னத்தில் பதிய, தெறித்து விழுந்த வார்த்தைகள் அவளுள் உத்வேகத்தை தூண்டியது.

"த்தூ. பச்சையுடம்புக்காரியை அடிக்க வெட்கமாயில்லை? உங்ககிட்ட இருக்கிற குறைகளை மறைக்க நீங்கள் பிரயோகிக்கும் ஆயுதம் இது. நல்லாக் கேட்டுக்கங்க சொல்றன். பிள்ளைப் பெறுவது பெண்ணென்றாலும் கருவைத் தருவது ஆண் என்பதை மறக்க வேண்டாம். நான் என்ன பக்கத்துவீட்டிலை நாலும் ஆணாக பெத்தவன் கிட்டேயா வாங்கி வாறது?" ஆத்திரத்துடன் ஆணியாக இறுக்கினாள் வார்த்தையால்.

சாட்டையாக சொடுக்கிய அந்த உண்மை அவன் உள்ளத்தை நெருடியது.

"பாகற்காயை நினைத்துக்கொண்டு சுரக்காயை தூவிவிட்டு நிலத்தைப் பார்த்து பாகற்காய் எங்கேயென்று கேட்டால் நிலம் என்ன செய்யும்" வெட்கத்துடன் தலையைக் கவிழ்த்தவனாக வெளியேறினான். ஒதுங்கி, ஒண்டி நின்ற குழந்தைகளை அணைத்துக் கொண்டான். மனம் அமைதியடைந்திருந்தது இப்போது.



படிப்பகம்

# காதலன்

கமலினி நடராஜா

**"என்ன எதுவும் பேசாமலிருக்கே? கண்ணெல்லாம் சிவந்திருக்கு வட் ஹப்பண்ட் ரு யூ?"**



சில்லென்ற சீதளக்காற்று திறந்திருந்த ஜன்னலினூடாக உள்நுழைந்து என்னுடலை முழுவதுமாய் தழுவி, ஒவ்வொரு கலங்களையும் ஊசியாய்க் குத்தியபோது- மெல்லப் போர்வையை விலக்கி கண் விழித்த என்னெதிரே- எனக்கு முதுகு காட்டி கதிரையிலமர்ந்திருந்தாள் பார்கவி. என்ன செய்கிறாள்...? வேறென்ன...எதையாவது படித்துக் கொண்டிருப்பாள். படிப்பு....படிப்பு...படிப்பு. அவள் உலகமே படிப்புத்தானே. உயர்தர வகுப்பிலே கல்வி கற்கும் எங்களிருவருக்குமிடையில் மதம் ஒன்றைத் தவிர ஏராளம் வேறுபாடுகள்.

தான் படிக்கும் துறையிலே மிக உன்னதமான உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற இலட்சியம் அவளுள் வெறியாகவே மாறியிருந்தது.

ஆரம்பத்தில்- ஆரூரனைச் சந்திக்க முன்னர் எனக்கும் அப்படித்தான்.

ஆனால் இப்போது..?- என் இலட்சியம், வெறி எல்லாமே ஆரூரனைக் கணவனாக அடைவதுதான் என்றாகி விட்டிருந்ததை நினைக்க என்னுள் ஆச்சரியம்.

'காதல்' என்ற இந்த மூன்றெழுத்துக்கு இத்தனை சக்தியா?

ஆரூரன்- என் உயிருக்குயிரான காதலன்.

சாதாரண குடும்பத்துப் பெண்ணான எனக்கு ஆரூரனின் அன்பு கிடைத்தது உண்மையில் ஆனந்தம். என் பெற்றோருக்குச் சிரமங்கொடுக்காது, என் வாழ்வுக்குத் துணையாக நானே ஒரு நல்லவரைத் தேடிக் கொண்டுவிட்ட திருப்தி.

எதேச்சையாய் பின்புறம் திரும்பிய பார்கவி-

"உமா என்ன ஒரு மாதிரியாயிருக்கே?"

"நத்திங் இன்னிக்கு கெமிஸ்ற்றி கிளாசுக்கு நான் வரலை!"

"ஓ....ஏன் உனக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருக்கா?"-அவள் குரலில் மெலிதாய் இழையோடிய வெறுப்பு என்னுள் எரிச்சலை மூட்ட- அவள்தான் தொடர்ந்தாள்:

"உமா உன்னோட நிலைமைய கொஞ்சம் யோசிச்சுப் பாரு. இன்னும் நாலே மாசத்தில ஏ.லெவல் எக்ஸாம் வரப்போகுது. அதுக்கு உன்ன தயார்படுத்தாம, காதல்...அது இதுன்னு பைத்தியக்காரத்தனமா...."

அவள் முடிக்குமுன் "இந்த வயசில காதலிக்காம எப்போ காதலிக்கச் சொல்றே பார்கவி? பருவ வயசில வர்ற காதல் நியாயமானது. அதோட ஆரூரனும் நானும் ஒருத்தரை யொருத்தர் நல்லா புரிஞ்சு கொண்ட உண்மைக் காதலர்கள்"- பெருமை பொங்கக் கூறி அவள்முகம் நோக்க- அவளுக்கே உரிய பாணியில் அமைதியாக "ஒத்துக்கறேன். பட் அந்த காதல் உன்னோட கல்விக்குத் தடையாயிருக்கிறத நினைக்கிறப்போ... என்னால தாங்கமுடியல உமா....அதான் நான் இப்படி அடிக்கடி..." வார்த்தையை முடிக்காது விழிகலங்க பாத்ரூம் நோக்கிப் போனாள் பார்கவி.

—●●●—

ஒன்றல்ல. இரண்டல்ல பனிரெண்டு மாதங்கள். அதுவே வருடங்களாய் இருந்தால் ஒரு குறிஞ்சி மலரும் காலம். ஆரூரன் உயர் கல்விக்காய் வெளிநாடு செல்ல. விழிகலங்க என்னிடம் விடைபெற்றுப் போய்விட்ட அதேயளவு காலம் இன்னும் காத்திருக்க வேண்டும் அவர் வரவுக்காய். இந்த எதிர்பார்ப்பு எனக்கு ஒரு சுகமான சோகம்.

★★★

பின் வந்த ஒரு காலைப்பொழுது.

எனது பெயருக்கு வந்த வெளிநாட்டுக் கவர் ஒன்றை வீசிவிட்டுப் போனார் தபாற்காரர்.

ஆரூரனின் மணி மணியான எழுத்துக்கள். இதயத்துடிப்பு இன்பத்தால் நிமிடத்திற்கு நூறு தடவையாய் கூடிவிட்ட அந்த வினாடியில் மனம் நிறைந்த இனிய எதிர்பார்ப்போடு கடிதத்தைப் பிரித்து ஆவலாய்- மிக ஆவலாய் வரிகளில் பார்வையை மேயவிட்டேன்.

★★★

"வா உமா, எப்படியிருக்கே?"- பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரப்போகும் ஆனந்தத்தில் இருந்த பார்கவிதான் வரவேற்றாள்.

"என்ன எதுவும் பேசாமலிருக்கே? கண்ணெல்லாம் சிவந்திருக்கு. வட் ஹப்பண்ட் ரு யூ?"- பதட்டமாய்க் கேட்க-

அதுவரை அடக்கிவைத்திருந்த துக்கம் அடிவயிற்றிலிருந்து பந்தாய் திரண்டு தொண்டையை அடைக்க- முகத்தை மூடிக் கொண்டு நான் அழ ஆரம்பிக்க- "ஷ் உமா இதென்னது ஏன் அழறே?"- என்றவள் என் கைகளுக்குள் கசங்கியிருந்த என் இதயத்தைக் கசக்கிய கடிதத்தை விரித்துப் படித்தாள்.

டியர் உமா!

**இன்னும் நீ என்னை நினைத்துக் கொண்டிருந்தால் மறந்துவிடு. ஏனெனில் இன்னும் சில தினங்களில் நான் ரோஸிக்குச் சொந்தமாகப் போகிறவன். இத்துடன் எங்கள் திருமண அழைப்பிதழ் அனுப்புகிறேன். முடிந்தால் வாயார வாழ்த்திவிடு, இல்லையேல் மானசீகமாக மறந்துவிடு.**

**சியர்ஸ்**

**ஆரூரன்.**

படித்து முடித்து "ம்.... எவ்வளவு நெஞ்சழுத்தம்...?" முணுமுணுப்பான வார்த்தைகளை வெறுப்பாகக் கொட்டியவள், "இப்ப என்ன பண்ணப்போறே உமா?" என்றாள்.

"ஆரூரன் என்மேல காட்டின அன்பு, பாசம், காதல், நேசம் அத்தனையும் அணுவளவும் கலப்படமில்லாத வேஷம் என்கிறத என்னால நம்ப முடியல பார்கவி. எப்படி.... எப்படி..... அவரால என் மனச கொல பண்ற காதகனா மாற முடிஞ்சது சொல்லு பார்கவி.... சொல்லு....." கண்களிலிருந்து ஆறாய்ப் பெருகிய கண்ணீரோடு என்போக்கில் பிதற்றிய என்னுள் மின்சார மாற்றம்.

"பார்கவி....இனிமேதான் நான் படிக்கணும்! திறமையா பாஸ் பண்ணணும்! வாழ்க்கையில முன்னேறணும், சமுதாயத்தில ஊடுருவி அத சாக்கடையா மாத்த முயற்சிக்கிற ஆரூரன் போன்ற நச்சுப் பூண்டுகளுக்கு நல்ல பாடம் புகட்டணும்...!" மூச்சு வாங்க சொல்லி 'என்னால் முடியுமா?' என்கிற பாவனையோடு நிமிர்ந்த என் கரம் பற்றி அழுத்தினாள் பார்கவி.

"முடியும். நீ இப்ப சொன்ன அத்தனையும் உன்னால முடியும் உமா! ஆமா நாளை சூரியன் உதிக்கப்போறது எப்படி நிச்சயமோ, அது போல இதுவும் சாத்தியம் உமா!" -புன்சிரிப்போடு சொல்ல மனதில் உள்ள இறுக்கம் தளர்ந்து, இதுவரை வடித்த கண்ணீரிலேயே 'ஆரூரன்' என்ற கறை கரைந்து போய்விட்ட திருப்தியில் வாய்விட்டுச் சிரிக்கிறேன் நான். ■

---

# மெல்லத் திறந்த கதவு

ரூபராணி

**"என்னங்க கொஞ்சமும் அறிவில்லாமல் பேசுறீங்க? மகன் என்ன இருபத்து நாலு மணிநேரமும் வீட்லயா உக்கார முடியும்....?"**

புள்ளிமானாய்த் துள்ளித் திரிந்த துர்க்கா சில நாட்களாய் சுரத்தில்லாமல் இருப்பதை அவள் கணவன் நரேன் கவனிக்கத் தவறவில்லை.

எதிலுமே அக்கறை காட்டாமல் முகத்தை 'உம்' என்று வைத்துக்கொள்ளும் பழக்கம் துர்க்காவிடம் அடியோடு கிடையாது என்பதும் நரேனுக்கு நன்கு தெரிந்த விஷயம். அவள் அம்மா வந்ததிலிருந்து துர்க்கா சிரிக்க மறந்துவிட்டாள் என்பது மட்டும் உண்மை. ஒரு வேளை மருமகள் அவள் அம்மாவை உதாசீனப்படுத்தி அனுப்பி வச்சிருப்பா என்கிற வேதனையோ...?

இருக்கும்.. அந்த மருமகள் வேறுயாருமில்லை. தன்னுடைய தங்கை ரமா தான் என்று எண்ணிய நரேனுக்கு 'திக்'கென்றிருந்தது. அவன் குடும்பத்தில் ரமா கடைக்குட்டி. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்து செல்லமாக வளர்ந்தவள். பொறுப்புகள் எதையும் அறியாதவள். வாய்த்துடுக்குக்கு குறைச்சலில்லை. வளர்ந்தும் குழந்தைத்தனம் மாறவில்லையே. நரேனுடைய நினைவில் ரமா நிமிஷத்தில் நிழலாடி மறைந்தாள்.

"உன் அம்மா சாப்பிட்டாச்சா?" துர்க்காவின் மௌனத்தைக் கேள்வியால் கலைத்தான் நரேன். "நானொன்றும் அவங்களப் பட்னி போடல" வெறுப்பை உமிழ்ந்தாள் துர்க்கா.

"ஏய் உனக்கென்னாச்சு? இதோபார் உன் அம்மா வந்ததிலிருந்து உன் போக்கே மாறிப்போச்சு, நீ அவங்களோட பேசிப் பழகி நான் பார்த்ததில்ல. பாவம் கொஞ்ச நாளக்கி இங்க தங்கி ஆறிப்போக, வந்தவங்கள இப்பிடியா நடத்துறது? வேளா வேளைக்கு சாப்பாடு போட்டா போதுமா? அவங்க நம்மோட இருக்கிறவரைக்கும் அவங்களைச் சந்தோஷமாக வச்சிக்கப்பாரு!"

நரேன் தன் மனைவியிடம் குட்டிப்பிரசங்கமே வைத்துவிட்டான்.

"நீங்க எத்தன பிரசங்கம் வச்சாலும் நான் மாறமாட்டன். என்னோட அம்மாதான். அதுக்காக நான் வெக்கப்படுறன், துக்கப்படுறன்", குரலில் சுருதி கூட்டினாள் துர்க்கா.

நரேன் சட்டென்று அவள் வாயைப் பொத்தினான். "அம்மா பக்கத்து ரூமில; அவ காதில விழப்போகுது!"



"நல்லா விழட்டும் அப்பவாவது அம்மாவுக்குப் புத்தி புடிபடுதா பாப்பம்."

நரேன் ஒன்றும் புரியாதவனாய் நெற்றியைச் சுருக்கினான். "துர்க்கா, நீ என்ன சொல்கிறாய்..?"

"பின்னே என்னங்க...? அப்பாவைப் பத்திக் கொஞ்சமாவது யோசிச்சீங்களா? அவர் ஒரு நீரிழிவு நோயாளி, கட்டுமட்டான சாப்பாடு முக்கியம் இல்லையா? ஏலவே இடது கை மணிக்கட்டு வரையில்லை. ஆப்பரேஷன் ஆகியிருக்கு. அவரை யாருங்க கவனிக்கிறது?" துர்க்கா தன் கவலையை வெளிப்படுத்தினாள்.

"ஏன் அவர் மகன், மருமகளுடன் தானே இருக்கிறார்? கை நிறையப் பென்ஷன் வாங்கிறார். நீ ஏன் அப்பாவைப் பத்தி வீணா அலட்டிக்கொள்கிறாய்?" நரேன் சாதாரணமாய்ச் சொன்னான்..

"என்னங்க- கொஞ்சமும் அறிவில்லாமப் பேசிறீங்களே? மகன் என்ன இருபத்திநாலு மணி நேரமும் வீட்லயா உக்காரமுடியும்? பக்கத்லருந்து என்ன ஏது என்று கேட்கவா முடியும்? மருமக சின்னப் பொண்ணு. கலியாணமாகி மூணுமாசங்கூட ஆகல. அதுகள் பிக்கல் பிடுங்கல் இல்லாம வாழ்க்கைய அநுபவிக்க பெரியவங்க உதவக்கூடாதா? மருமக ஒருத்தி வந்திட்டா அவதலயில எல்லாத்தையும் கொட்டிற்று அக்கடான்னு கௌம்புறது நியாயமா?"

துர்க்கா மூச்சிரைக்கக் கூறிய வார்த்தைகள் நரேனை ஆச்சரியத்தில் புதைத்தது. துர்க்கா ஆயிரத்தில் ஒருத்தியாக அவனுக்குப் பட்டாள். நரேனின் உதட்டில் மெல்லிய புன்னகை ஊர்ந்தது. வேண்டுமென்றே அவளைச் சீண்டினான்.

"ஆமா... அந்த மருமக என் தங்கை என்பதால்தானே உனக்கு அப்படியொரு அனுதாப அலை வீசுறது?"

"இல்ல. இல்ல!" துர்க்கா உரக்கக் கத்தினாள். அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது. "ரமாவோ யாரோ நியாயம் ஒண்ணு தாங்க! கையை இழந்த அப்பாக்கு கையா இருந்து ஆறுதல் குடுக்காம அவருக்குத் துணையாருக்காம நம்மோடு வந்து ஒட்டிக்க அம்மாவுக்கு எப்பிடி மனசு வந்தது? ஒரு மனைவியிடம் எடுத்துக்கிற உரிமைய ஒரு மருமகளிடம் எடுத்துக்க அப்பாவால் முடியுங்களா? சொல்லுங்க?" துர்க்கா நரேனின் தோளைப் பலமாக உலுக்கினாள்.

அவள் கண்ணீர் அவன் இதயத்தைத் தொட்டது. அவன் ஆதரவோடு அவளை அணைத்தான். துர்க்கா அவன் மடியில் தலை சாய்த்தாள். அவள் முகத்தில் சிந்தனை கோணல் மாணலான கோடுகளை வரைந்தது.

துர்க்காவும் நரேனும் மௌனத்திலாழ்ந்த போது.. விசும்பல் ஒலி அறையுள் நுழைந்தது.

திடுக்கிட்ட துர்க்காவும் நரேனும் வெளியே வந்தபோது... அம்மா பயணப்பையுடன் நின்று கொண்டிருந்தாள். "மன்னிச்சுடும்மா. நீ சொன்னதெல்லாம் சரிதான்!" விம்மல்களுக்கிடையே அம்மாவின் வார்த்தைகள் விழுந்து துடித்தன. அவள் புறப்பட்டு விட்டாள். ■

---

# வெற்றிலை போடாமல் சிவந்தவர்

திக்கம் ஜெ.சிவயோகமலர்

**திருச்செல்வத்துக்கு ஒப்பரேசன் செய்த டாக்டர் இனிமேல் வெற்றிலை போடக்கூடாது என்று சொல்லி அனுப்பியிருந்தார்.**



அன்று அதிகாலை ஏழு மணியிருக்கும். யாழ்ப்பாணக் கம்பசுக்குப் போவதற்காகத் தினகரன் அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அவனைத் தனிமையாக விடுவது பாதுகாப்பில்லை என்றபடியால் அவனது தந்தை திருச்செல்வமே அவனை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று விட்டுவருவது வழக்கம்.

வீட்டிலிருந்து கம்பஸ் கிட்டத்தட்ட ஏழு மைல் தூரத்தில் இருந்தது. அன்றும் ஏழு மணிக்கெல்லாம் தினகரன் புறப்பட்டு விட்டான். ஆனால் திருச்செல்வமோ மனைவி திருமகள் கொண்டு வந்து கொடுத்த தேனீரை அருந்திவிட்டு வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார்.

"அப்பா நேரமாகுது. நீங்கள் வெத்திலை போட்டுக்கொண்டிருந்தால் கம்பசுக்கு எப்பிடி அப்பா போறது?" தினகரன் இப்படிக் கேட்டது திருச்செல்வத்துக்குப் பிடிக்கவில்லை.

"நானும் நேரத்தைக் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறன். உனக்கு விடியமுந்தித் தேவையில்லாத அவசரம்!" ஆத்திரத்துடன் பதிலிறுத்தார் அவர்.

"அவசரம் இல்லையாப்பா. வழியிலை, தடைகள் தாண்டித் தாமதிச்சுப் போகவேணுமெல்லே. அதுதான் சொன்னனான்." மெதுவான குரலில் தினகரன் கூறினான்.

"உன்னை விட்டிட்டு வந்துதானே நானும் ஒவ்விசுக்கு வெளிக்கிட்டுப் போகப் போறன். உனக்கொரு கண்டறியாத அவசரம். போய்ச் சாப்பிட்டு விட்டுவா. நான் கொண்டு போய் விடுறன்." அரை மனதுடன் கூறினார். தினகரன் எதுவும் பேசாமல் சாப்பிடுவதற்காகக் குசினிக்குள் நுழைந்தான்.

குசினிக்குள் இருந்து சமையல் வேலையில் அவசரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த திருமகளுக்குக் கணவன்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

'இந்த மனிசன் எப்பத்தான் அவனைச் சந்தோஷமாகக் கொண்டுபோய் விட்டிருக்கு? எப்பவும் சகுனப் பிழைமாதிரி முன்னுக்கு மறுத்துப் போடும். இப்ப இருக்கிற நாட்டு நடப்பிலை இப்பிடி மறுத்துச் சொல்லுறது எவ்வளவு பெரிய பிழை. அதை உந்த மனிசன் உணர்ந்தால்தானே? வெத்திலைதான் மனிசனுக்குத் தெய்வம்!' அவள் மனதுக்குள் நொந்து கொண்டாள்.

கணவனின் செய்கைகளை நினைக்கிறாள். அவரைப் பற்றிய பழைய நிகழ்ச்சியொன்று அவளின் மனக்கண்ணில் தெரிகிறது. திருச்செல்வத்துக்கு வாயில் ஒரு கட்டி திடீரென்று வந்துவிட்டது. ஊரெல்லாம் கான்சர் வருத்தம் என்று கதைக்கத் தொடங்கிவிட்டது. அளவுக்கு மிஞ்சி வெற்றிலை போடும் பழக்கத்தால் வந்தவினையோ என்று திருமகளும், பிள்ளைகளும் புழுவாகத் துடித்தனர். பெரியாஸ்பத்திரியில் ஒப்பிறேசன் செய்த பிறகுதான் அது கான்சர் இல்லை ஒரு சாதாரண கட்டி என்று தெரியவந்தது. அவளும், பிள்ளைகளும் அதன் பின்புதான் நிம்மதி அடைந்தனர்.

ஆனாலும் திருச்செல்வத்துக்கு ஒப்பிறேசன் செய்த 'டொக்டரோ இனிமேல் வெற்றிலை போடக்கூடாது என்று சொல்லி அனுப்பியிருந்தார். ஆனால் ஆஸ்பத்திரியால் வந்த உடனேயே ஒளிச்சு மறைஞ்சி வெற்றிலை போடத் தொடங்கி விட்டார் அவர்.

அவர்களது மூத்த மகன் திவாகரன் டொக்டராகக் கண்டியில் வேலை பார்க்கிறான். அவனைக் கண்டால் மட்டும் மரியாதைக்காக நேரில் வெற்றிலை போடுவதை நிறுத்திக் கொள்வார். அவன் போனால் காணும்; திருச்செல்வம் பாடு ஒரே கொண்டாட்டம் தான்.

ஆனால் ஒருமுறை திவாகரன் திருச்செல்வத்தைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டான். அவனுக்கு சற்று அதிகப்படியாகவே கோபம் வந்துவிட்டது. "அப்பா உப்பிடி இருபத்திநாலு மணிநேரமும் வெத்திலை போடுறியளே! டொக்டர் சொன்னது மறந்து போய்ச்சுதா? ஒருமுறை தப்பியிட்டன் எண்டு நினைக்கிறியளாக்கும். உந்த வெத்திலையாலைதான் உங்களுக்குச் சாவு வரப் போகுது!" அழுத்தமான குரலில் அவன் கூறினான்.

திருமகளின் மனம் வேதனைப்பட்டது. 'அவன் எவ்வளவு கரிசனத்துடன் சொன்னவன். உந்த மனிசன் உணருதேயில்லை. நாள் முழுவதும் வெத்திலை வேணும். சில காலத்துக்கு முந்தி கொழும்பு வெத்திலை யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. அப்ப வெத்திலையும் பொன்விலை. ஒரு வெத்திலை எட்டு ரூபாவும் வித்தது. அப்போது கூட வெத்திலை இல்லாமல் இராது மனிசன். எங்கேயோ தேடிப்பிடிச்சு வாங்கி வந்திடும்.' தனக்குள் கவலையோடு சொல்லிக் கொண்டாள்.

தினகரன் சாப்பிட்டு முடிந்ததும் வெளியே வந்தான். திருச்செல்வமும் மோட்டார் சைக்கிளை எடுக்கச் சென்றார்.

தினகரனுக்கோ, தன் தந்தை வீட்டுக்குக் கட்டும் சரத்தோடு வருவது பிடிக்கவில்லை. அவன் திருச்செல்வத்தை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை பார்த்தான்.

திருச்செல்வத்துக்கோ அவனது பார்வை பிடிக்கவில்லை. "என்னடா அப்பிடிப் பார்க்கிறாய்?" கோபத்துடன் கேட்டார்.

"அப்பா உங்கடை சரம் ஊத்தையப்பா. மாத்திக் கொண்டு வாங்களேன்!" கெஞ்சலாக கேட்டான் தினகரன்.

"நான் இப்படியேதான் வருவன். பிறகு வந்துதான் குளிச்சு ஜீன்ஸ்போட்டு ஒவ்விசுக்குப் போறது. கெதியா வா. கொண்டு போய்விட்டிட்டு வரவேணும்." அவன் எதுவுமே பேசவில்லை. தாயைத் திரும்பிப் பார்த்து, "அம்மா போயிற்று வாறன்," என்று சொன்னவன் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டான்.

தடைகளில் இறங்கி ஏறி மகனைக் கம்பஸில் விட்டபின் நிம்மதியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார் திருச்செல்வம்.

'தினகரன் ஏசுவான் எண்டு நினைச்சு அவனோடை வர்ற நேரம் வெத்திலையைத் தொடேல்லை. வாய்கூடப் புளிக்குது. மோட்டர் சைக்கிள் பெற்றோல் இல்லாமல் ஓடாதது போல இந்தத் திருச்செல்வமும் வெத்திலை இல்லாமல் இயங்க மாட்டான்.' தனக்குள் சொல்லிக் கொண்டார்.

சைக்கிளைத் தெருவோரமாக நிற்பாட்டிவிட்டு வெற்றிலைப் பையை எடுப்பதற்காக மடியுக்குள் கையை வைத்தார்.

சற்றுத் தள்ளியிருந்த காவலரணில் பாதுகாப்புக் கடமைகளில் நின்றவர்கள் அவரையும் அவரது செய்கையையும் கவனித்திருக்கிறார்கள். மோட்டார் சைக்கிளில் வந்தவன் மடிக்குள் கையை வைத்துத் தங்களுக்கு எறிவதற்காகக் கைக்குண்டை எடுக்கிறான் என்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள். மடிக்குள் இருந்து அவரால் எடுக்கப்பட்ட அவரது வெற்றிலைப் பையும் கறுப்பாக இருந்தது அவர்களது சந்தேகத்தை வலுப்படுத்தியிருக்கிறது.

ஒரு வினாடி பிந்தினாலும் அவன் தங்களை விட்டு வைக்கமாட்டான் என்று அந்தக் காக்கிச் சட்டைக்காரன்கள் நினைத்திருப்பார்கள் போலும். அவசரமாக வேட்டுக்களைச் சரமாரியாகத் தீர்த்தார்கள் அவர்கள்.

எதுவுமே அறியாத அப்பாவியான திருச்செல்வம் துப்பாக்கிவேட்டுக்களால் சல்லடையாக்கப்பட்ட நிலையில் தெருவோரத்தில் உயிரற்ற பிணமாகக் கிடந்தார்.

'உன் மரணத்துக்கு உன் மகன் சொன்னது போல நானே காரணம்' என்பது போல அவர் உயிராக நேசித்த அந்தக் கறுப்பு வெற்றிலைப் பை, விரிந்து கிடந்த அவரது கையில் குருதியால் தோய்ந்து பளபளத்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# ஆதலினால் நீவிர் எல்லாம்....

இலக்கிய நயம்

தருவது ரசிகன்





குளிர்தென்றல் தவழ்ந்துவரும்
குளக்கரைதான்
அந்த ஜோடிப்புறாக்களின்
காதல் கூடு!

மரங்களில் இருந்து பிரிந்த
மலர்கள் படுக்கையாய் விரியும்,
மடியே தலையணையாகும்
உரமேறிய தேகம் புரண்டு கிடக்கும்!

மல்லாந்து கிடந்து மடிமீதிருந்து
விழி விரித்தவன்
வியப்பை திரட்டி கவிதையாய் தருவான்.

"கீழே மலர்க் கூட்டம்
மேலே பழத் தோட்டம்
கொண்டாட-நான்
ஒரு வண்டாகவா?!
கொத்திட-நான்
ஒரு அணிலாகவா?!"

வெக்கிப்போவாள்
மொழிவராமல் திக்கிப் போவாள்.

அவனோ விடாமல்
கவிதையால் கொக்கி போடுவான்.

"நரைவிழுந்த முடியினரும்
கரைகாணாத் துடிக்கின்ற
ஆசைக் கடல்!
வாலிபத் தரையில் நிற்கும்
நாமிருவர்
கரை காண நினைப்பதிலே
குற்றம் என்ன? குறை என்ன?"

உதடு சுழித்துப்
பழிப்புக் காட்டுவாள்!

"கனிகேட்டேன் கண்மணி
கனிமிதழ் காட்டுகிறாயே
கள்ளி நீ!"

தலையில் குட்டுவாள்
விழியால் குத்துவாள்!

"இப்படித்தானோ
பெண்களைக் கண்டால்
செப்படி வார்த்தைகள் வீசுவீர்?"
வினாவை எறிவாள்.

"சொக்கிடும் காரிகையர்
சிக்கிடும் காளையர் நாம்
தப்பிட முடியாமலே
புலம்புதல் அச்சத்தாலே!"

"எத்தனை வலைகளிலே
பித்தனாய் சிக்கிக் கொண்டீர்?"

சந்தேகம் தூவிய வினா.
சந்தோசத்தில் புரியவில்லை அவனுக்கு!

"மை விழி வலைகள் பாய
மெய்யது உருகி நின்று
வாயது புலம்பித் தள்ள
என் என்றால் எண்ணெய்யாவேன்!"

சொன்னான் வேடிக்கையாக
சீறினாள் போர் முரசாக!

மடியிலே தவழ்ந்தவனை
மண்ணிலே புரட்டிவிட்டாள்.
துடிமிடை துள்ளலாக தள்ளிப் போனாள்
அடிபட்ட புலிபோல் பார்த்தாள்.

"அப்பப்பா என்ன கோபம்
உச்சிக் கொம்பிலே மந்திக் கோபம்"

"மந்திதான் நான் மந்திதான்
சந்திக்கும் பெண்ணையெல்லாம்
காதலாய் சிந்திக்கும்
கவிஞர் நீரே!
புதியது பலதுகாண
பழையது மந்தியாகும்!"

"அய்யயோ
பொய்யடி என் பேச்செல்லாம்.
பொங்கிய கடலைப் போல
பொங்காதே புரண்டு போவேன்."

"மங்கிய கண்களாலே
காகமும் வெள்ளையென்பீர்
காணும் பெண்களும்
கண்நிறை அழகியென்பீர்!"

"மெய்யடி நானும் கண்டேன்
எத்தனை பெண்கள் கண்டும்
சித்திரை நிலவுனக்கு
போட்டியாய் யாரும் காணேன்!"

"பூ இதழ் திறந்தால் முல்லை
பொன்முகம் மலர்ந்தால் கொள்ளை
இதயமே கொள்ளை போகும்
இரவுகள் வெளிச்சமாகும்!"

மெல்லக் கோபம் விலகும்
செல்லச் சிணுங்கல் கேட்கும்!

"உண்மையோ
கடலோ அன்பு?
நான் மட்டும்தானே உமக்குள்?
வான்முட்டும்
காதல் என்மீது மட்டும்தானே?"

"சாவது என்றால்கூட
என் உடல் மட்டும் சாயும்
என் உயிர்
உன்னிடம்தானே சேரும்!"

எட்டிக் கரம் நீட்டி
அவன் உதடுகள் மூடுவாள்!

"ஏனடி கலங்கிப் போனாய்
நான் கல்லாய் இருக்கும்போது
நின் கண்கள் கலங்கலாமோ?"

மடியினில் மீண்டும் அவனை
கரமதால் வாரிப் போட்டாள்.
முகமதில் மின்னலாக
அகமதின் உவகைப் பொங்கல்!

"கனிந்தது மனமோ-இனி
கனிமீது எனக்கோ?
கடலினில் குதிப்போம்
அமுதத்தை கடைவோம்!
விஷமென்னும் கசப்பு வேண்டாம்
வீரிய அமுதத்தை குடிப்போம்!"

"மனதினில் கசப்பு முள்ளை
போட்டது யாராம்? நீர்தான்!"

"முள்ளினை மிதித்தால்தானே
மலரது இதமும் புரியும்!"

"முள்ளும் வேண்டாம்
கல்லும் வேண்டாம்
உறவும்-இனிப்பும்
என்றும் வேண்டும்!"

"காதலின் சாகரத்தில்
இரகசியம் பலது உண்டு!
காதலை
தினம் புதிதாய்
காவியமாக்க பல கலைகளும்
கற்க வேண்டும்!"

"கலைகளில் வல்ல கள்ளா
ஒன்றைத்தான்
சொல்லும் கேட்போம்!"

"நானதைச் சொல்லவில்லை
நம் வள்ளுவர் சொன்னார் பிள்ளை
சிறு பிணக்கும், பெரு பிணக்கும்
கொள்ளாத காதல் யாவும்
முற்றும் பழுத்த பழமாய் திகட்டும்
முற்றாத காயாய் கசக்கும்!"

முறைத்தாள்- அவன் நகைத்தான்.

"ஆதலினால் ஊடல் கொள்வீர்
காதலியை ஊட வைப்பீர்
பழம் நல்ல பதமாய் செய்வீர்
மனம் இனிக்க சுவைகள் காண்பீர்!"

"துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று"

குறள்-1306. அதிகாரம்-131.

## சிந்தியா பதில்கள்

★ சொர்ணவாஹினியில் 'மன்னவா' எப்படி?

ஏ. அருந்தவக்குமார், திருமலை.

'மன்னவி' என்பதே சரி. ஊர்வசியின் ஆட்சிதானே படத்தில்!

•••

★ அப்பாஸின் ஜோடியாகப் பொருந்தக் கூடியவர்கள்- ரம்பா, சங்கவி, தேவயாணி, தபு- இவர்களில் யார்?

கி. உதயா, கொழும்பு-15.

முன்னவர்கள் இருவரும் ஓ.கே. மிச்சம் பொருத்தம் என்றுதான் கேள்வி.

•••

★ நிதானமாக செயற்பட வேண்டுமானால் ஒரு வழி சொல்லுங்கள் சிந்தியா?

செல்வி கி. ரமா, கொட்டாஞ்சேனை.

நிறைய வழி இருக்கிறது, ஒரு மாறுபட்ட வழியை இக் கதையில் பாருங்கள்:

பஸ்ஸில் ஒரு மூட்டைமேலே ஒரு மூதாட்டி அமர்ந்திருக்கிறார். வெகு சுவாரசியமாக வெற்றிலையும் போட்டு மென்று கொண்டிருக்கிறார். நடத்துநருக்கு கெட்ட கோபம்.

"ஏய், ஆச்சி, மூட்டையைப் பாதையில் போட்டிருக்கிறாயே? ஒரு ஓரமாத் தள்ளு!" என்றார்.

ஆச்சி கண்டுக்கவேயில்லை. படு நிதானமாக வெற்றிலை போட்டுக்கொண்டிருக்கிறார். நடத்துநர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது.

"இப்போ மூட்டையை நகர்த்துகிறாயா, அல்லது நானே இழுத்து வெளியே தள்ளட்டுமா?" என்று கத்துகிறார் நடத்துநர். ஆச்சி அப்போதும் அசையவேயில்லை.

நடத்துநர் படுபடு கோபத்தில் மூட்டையை இழுத்து வெளியே தள்ளினார். அப்போதும் ஆச்சி கோபப்படவில்லை. நிதானமாக இருக்கிறார்.

"ஏய் கிழவி, மூட்டையைத் தள்ளிய பிறகுகூட உனக்கு புத்திவரேல்லையா? கல்லு மாதிரி நிற்கிறாயே?" என்று கேட்கிறார் நடத்துநர்.

ரொம்ப நிதானமாக ஆச்சி சொன்னார். "எனக்கென்ன வந்தது? அந்த மூட்டை என்னுடையது இல்லையே!"

•••

★ இந்தியப் பிரதமராக ஜி.கே. மூப்பனார் வந்தால் என்னவாகியிருக்கும்? இலங்கைப் பிரச்சனையில் மாற்றம் வந்திருக்குமா?

கே. இளங்கோ, கொழும்பு-09.

அப்படியெல்லாம் ஒன்றும் நடந்திருக்காது. தமிழர் ஒருவர் பிரதமரானாரே என்று தமிழர்கள் திருப்திப்பட்டிருக்கலாம், அவ்வளவுதான்! எப்போதுமே இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தீவிரமாகப் பேசியதேயில்லை மூப்பனார். தவிர, சோனியாவின் தீவிர விசுவாசி. அதனால் இலங்கைத் தமிழர் ஆதரவு புலி ஆதரவாகக் கருதப்படுமோ என்று கப்சிப்பாகத்தான் இருந்திருப்பார்.

•••

★ தபால் நிலையத்தில் பேனா இரவல் வாங்கிவிட்டு அப்படியே அமுக்கிக்கொண்டு போகிறவர்களை என்ன செய்யலாம்?

எம். ரவீந்திரன், கண்டி.

மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் போல் இருக்கிறது. ஒரு குட்டிக் கதை:

"சேர் ஒரு நிமிஷம், உங்கள் பேனாவைத் தருகிறீர்களா?"

"ம்....இந்தாங்க!"

"என்ன சேர் இது...? மூடியைக் கழற்றி விட்டுத் தருகிறீர்கள்?"

"பேனா இரவல் வாங்கினால் அப்படியே எடுத்துக்கொண்டு போகிறவர்களும் இருக்கிறார்கள். அதனால் நான் எப்போதும் முன் ஜாக்கிரதையாக மூடியைக் கழற்றி விட்டுத்தான் கொடுப்பது வழக்கம்! அதனாலே என்ன ஆச்சுத் தெரியுமோ?"

"என்ன ஆச்சு?"

"இதுவரைக்கும் 234 பேனா மூடிகள் என்னிடம் சேர்ந்துபோச்சு!"

•••

★ பொய் சொல்வதும் ஒரு கலைதானே சிந்தியா?

செல்வி எஸ். சித்திரா, மட்/கல்லடி.

பின்னே என்னவாம்? இல்லாவிட்டால் மாட்டுத்தான்!

தான் வேலை செய்யும் அலுவலகத்தில் விடுமுறை கேட்டார் ஒருத்தர்.

"சேர் என் தாத்தா சீரியசாகக் கிடக்கிறாராம். ஒரு நாலு நாள் லீவு வேணும்."

"அய்யோ பாவம்! போயிட்டுவாங்க. அடடே எதுக்கு அழுகிறீர்கள்? உங்க தாத்தாவுக்கு ஒண்ணும் ஆகாது."

"நான் அழுவது தாத்தாவுக்காக அல்ல. இந்த அலுவலகத்துக்காக.... கடமைதான் எனக்கு முக்கியம். செய்வதைத் திருந்தச் செய் என்று கீதையில் சொல்லியிருக்கு!"

"அடடே....உங்களுக்கு தத்துவமெல்லாம் தெரியுதே! உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளணும் என்று ரொம்ப நாளாக எனக்கொரு ஆசை?"

"கேளுங்க சேர், ஏதோ எளியேனுக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்."

"மரணத்தின் பின்னர் மனிதனுக்கு வாழ்வு உண்டோ?"

"உண்டுதான் என்று நினைக்கிறேன்!"

"நீங்களே சந்தேகப்படுறீங்க. எனக்கு சந்தேகமே கிடையாது. மரணத்தின் பின் வாழ்வு உண்டு உண்டு உண்டு!"

"எப்படி உறுதியாகச் சொல்லுறீங்க?"

"போனவாரம் உங்க பாட்டி செத்துப் போனதா லீவு எடுத்துட்டுப் போனீங்களே! ஞாபகம் இருக்கா? நீங்க போன பின்னாடி அவங்களே உங்களைத் தேடி இங்கே வந்தாங்களே!"

•••

★ இலங்கைக்கு இந்தியா வெள்ளரச மரம் கொடுத்திருக்கிறதே?

சி. குணபாலன், நுவரெலியா.

அன்று அமைதிப்படை...!
இன்று அரச மரம்!

★ டியர் சிந்தியா! இந்தியாவின் புதிய பிரதமர் குஜ்ரால் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சி. நரேந்திரன், கொழும்பு-13.

நினைத்து முடிக்க முன்னரே அவர் நாற்காலியைவிட்டு எழுந்து போய்விடுவார்.

•••

★ இந்தியப் பிரதமராக ஒரு தமிழர் வரும் வாய்ப்பு இல்லாமல் போனதற்கு யார் காரணம்?

கே. லோகநாதன், மட்டக்குளி.

இன்னொரு தமிழர்தான் காரணம்! கம்யுனிஸ்ட் கட்சியினர்தான் எதிர்ப்புத் தெரிவித்தனர். தி.மு.க.-மூப்பனார் பிரதமராக ஆதரித்ததுதானே என்று கேட்பீர்கள்! அங்குதான் விளையாடியிருக்கிறது கலைஞரது இராஜதந்திரம். ஆதரித்தாரே தவிர அதற்காக கடுமையாக வாதாடவில்லை! மூப்பனார் பிரதமரானால் தமிழகத்தில் அவரது கட்சி தமக்குப் போட்டியாக வளர்ந்துவிடும் என்று தெரியாதா கலைஞருக்கு?! கலைஞரா, கொக்கா? கலைஞரும் மூப்பனார்தான் பிரதமர், அல்லது நாமும் வெளியேறுவோம் என்று கூறியிருந்தால் டில்லிவாலாக்கள் ஆட்டம் கண்டிருப்பார்கள். 'வேட்டி கட்டிய தமிழர்' பிரதமராகியிருப்பார்.

•••

★ சிந்தியா! புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலண்டன் போக முன்னர் இந்தியாவில் சிகிச்சை பெற்றாராமே?

எம். ந.்.வ்கான், கல்முனை.

அத்தனை சுலபமாக பூவுக்கெல்லாம் நான் காதுகொடுக்கமாட்டேன் நஃவ்கான்! இலண்டன் போகிறவர் அங்கு மருத்துவம் இல்லையென்று இந்தியாவுக்குப் போனாராமா? ஏன், இலண்டனில் வைத்தியர்கள் எல்லாம் லீவில் போய் விட்டார்களாமா?!

•••

★ பணத்தாலும்- அதிகாரத்தாலும் சாதிக்க முடியாதது எது?

எம்.ஏ. முஹமட் முகான், உடதலவின்ன.

நல்ல நட்பை, நல்ல துணையை, நல்ல சுற்றத்தைப் பெற்று மகிழ்வது!

•••

★ வாய் சொன்னால் கை செய்யுமா இந்த நவீன உலகில்?

கே.எம். அமான்றஸ்னா, நிக்கவெவ.

சொல்ல வேண்டியவர் சொன்னால் மட்டும்!

•••

★ டியர் சிந்தியா! 'மிஸ்டர் ரோமியோ' படுதோல்வி என்பது உண்மைதானா?

ரி. விஜயப்பிரியர், திருமலை.

'படு' என்பதை அகற்றிக்கொள்க.

•••



★ கமலின் அடுத்த படம் எது?

கே. சிவராம், திருகோணமலை.

அவரே ஒரு பேட்டியில் சொல்லியிருப்பதன்படி 'மதுர நாயகம்.' கதை, இயக்கமும் அவரே!

•••

★ மேற்கிந்திய தீவுக்கும்- இந்தியாவுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் நன்றாக ஆடிய இந்திய வீரர்கள் யார்?

பி. சயந்தன், மட்டக்களப்பு.

டெண்டுல்கர்-. திராவிட்! மேற்கிந்திய தீவில் அசார் ஏமாற்றிவிட்டார்.

•••

★ பெண் ஆசையில்லாதவர்கள் இருக்கிறார்களா?

எஸ். இராசதுரை, கம்பளை.

அது தெரியாது, ஆனால், பெண்களைப் பிடிக்காது, பெண்கள் வாசனை அடுக்காது என்று சொல்லிக் கொண்டிருக்கும் ஆசாமிகள்தான் டேஞ்சரானவர்கள்!

ஸ்போர்ட்ஸ்

## முதலிடத்தில் பிரசாத்



சியட் (CEAT)தரப்பட்டியலில் இந்திய அணியின் வேகப்பந்து விச்சாளர் வெங்கடேஷ் பிரசாத் முதலிடத்தில் இருக்கிறார். இவர் முன்னர் முதலிடத்தில் இருந்த பாகிஸ்தான் கப்டன் வாசிம் அக்ரமைப் பின்னுக்குத் தள்ளி விட்டு 88 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் இருக்கிறார்.

இந்தத் தரப்பட்டியலில் முதல் 10 இடங்களில் 4 இந்திய வீரர்களும், 4 பாகிஸ்தானிய வீரர்களும், 2 தென்னாபிரிக்க வீரர்களும் உள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வெங்கடேஷ் பிரசாத் - | இந்தியா | - 88 புள்ளிகள் |
| 2. | வாசிம் அக்ரம் - | பாகிஸ்தான் | - 83 புள்ளிகள் |
| 3. | அனில் கும்ப்ளே - | இந்தியா | - 81 புள்ளிகள் |
| 4. | சச்சின் டெண்டுல்கர் - | இந்தியா | - 74 புள்ளிகள் |
| 5. | அலன் டொனால்ட் - | தென்னாபிரிக்கா | - 72 புள்ளிகள் |
| 6. | முகமட் அசாருதீன் - | இந்தியா | - 64 புள்ளிகள் |
| 7. | டலில் கல்லினன் - | தென்னாபிரிக்கா | - 60 புள்ளிகள் |
| 8. | முஷ்டாக் அஹமட் - | பாகிஸ்தான் | - 60 புள்ளிகள் |
| 9. | சக்லைன் முஷ்டாக் - | பாகிஸ்தான் | - 59 புள்ளிகள் |
| 10. | சயீட் அன்வர் - | பாகிஸ்தான் | - 57 புள்ளிகள் |

## பாகிஸ்தானில் தென்னாபிரிக்க அணி

இந்த ஆண்டு இறுதியில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள தென்னாபிரிக்க அணியில் துவக்க ஆட்டக்காரர்களான அன்ட்ரு ஹட்சனும், கேரி கேர்ஸ்டனும் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தானில் தென்னாபிரிக்க அணி மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

கடந்த பெப்பரவரி, மார்ச் மாதங்களில் தென்னாபிரிக்காவில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 1-2 என்ற கணக்கில் தேல்வி கண்ட பின்னர் இவர்கள் இருவரும் நீக்கப்பட்டனர்.

இவர்களுடன் சகலதுறை ஆட்டக்காரர் பிரையன் மக்மில்லன், சுழற்பந்து விச்சாளர் போல் அடம்ஸ் ஆகியோரும் பாகிஸ்தான் செல்லும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மார்க் டெய்லருக்கு எதிர்ப்பு

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு கப்டனாக மார்க் டெய்லர் நீடிப்பார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. கப்டன் மார்க் டெய்லர் சமீப காலமாக சரிவர விளையாடவில்லை. இவரது தலைமையில் சமீபத்தில் தென்னாபிரிக்காவுக்குச் சென்ற அவுஸ்திரேலிய அணி அங்கு நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் 2-1 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரில் 4-3 என்ற கணக்கிலும் அபார வெற்றி பெற்றது. இருப்பினும் அந்தத் தொடரில் டெய்லர் ஒரு முறை கூட அரை சதத்தை எட்டவில்லை. அதனால் மார்க்டெய்லருக்கு அணியில் எதிர்ப்பு ஏற்பட்டது.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர்களான டென்னிஸ் லில்லி, டெர்ரி அல்டர்மான் உட்பட பலர் டெய்லர் விலக வேண்டும் என வற்புறுத்தினர். எனினும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை டெய்லர் மீது நம்பிக்கை வைத்து இங்கிலாந்திற்கு சுற்றுப் பயணம் செல்லும் அவுஸ்திரேலிய அணிக்கு அவரையே கப்டனாக்கியுள்ளது.

தென்னாபிக்கா சுற்றுப்பயணத்தின் போது ஒழுங்கீனமாக நடந்து கொண்டதால், துணைக்கப்டன் பொறுப்பை விக்கெட் கீப்பரான இயன் ஹீலியிடமிருந்து பறித்து விட்டு ஸ்ரீவ் வோவை நியமித்துள்ளது.

ஸ்ருவர் லோ, மத்தியூ ஹேய்டன், அடம் டேல், போல் ரீபல் ஆகியோரை அணியில் இருந்து நீக்கி விட்டு, மைக்கல் ஸ்லேட்டர், ரிக்கி பொண்டிங் ஆகிய இருவரும் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்துடன் 6 டெஸ்ட் போட்டிகள் கொண்ட 'ஆஷஸ் கோப்பை' போட்டித் தொடரில் விளையாடவுள்ளது, அவுஸ்திரேலிய அணி. கடந்த நான்கு முறையாக இந்தத் தொடரில் அவுஸ்திரேலியாவே வென்று வருகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 80

இராமபிரானுடைய கோபத்துக்காளானதால் ஏற்படப் போகும் தீங்குகளையெல்லாம் இராவணனிடம் எடுத்துரைத்து அவனை மனம் மாறச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் விபீடணன் பல கருத்துக்களைக் கூறினான். இக்கருத்துக்களைக் கேட்கக் கேட்க இராவணனின் கோபம் எல்லை கடந்தது.

முன்பொரு சமயத்தில் தெய்வத்தன்மை

## இரணியன் வதை

பொருந்திய வேதவதி என்பவளை இராவணன் துன்புறுத்தினான். கோபங்கொண்ட அவள் தீயுனுட் புகுந்து தன்னை மாய்த்துக் கொண்டாள். அவள் இறுதியாக இராவணனுக்கு ஒரு சாபமிட்டாள், "உனக்கு நான் துன்பத்தை விளைவிப்பேன்!" என்று கூறி மறைந்தாள். அவள் தான் இன்று சீதையாக அவதாரமெடுத்திருக்கிறாள். இக்கதையையும் விபீடணன் அசுரர்க்கரசனிடம் கூறினான்.

விபீடணன் தொடர்ந்து கூறுகையில்:

"ஒப்புவமை கூறமுடியாத தலைவனே! இராமரும் இலக்குவனும் சாதாரண மானிடர்கள் அல்ல; தெய்வாம்சம் பொருந்தியவர்கள். அவர்களின் தந்தையாகிய தசரதச் சக்கரவர்த்தி, தேவேந்திரனை– சம்பரன் என்ற அசுர வீரனிடமிருந்து காப்பாற்றியவர். தேவேந்திரனுடன் போரிட சம்பரன் தேவ உலகம் சென்றான். இந்திரன் தசரதனிடம் உதவி கோர, அவர் தனது வில்லுடன் தேவலோகம் சென்று சம்பரனை சம்கரித்து தேவேந்திரனின் துன்பம் தீர்த்தவர்.

### தசரதனின் முன்னோர்

அதுமட்டுமல்ல, அவுணர்களை வென்ற காகுத்தன், பூமியில் எல்லாவளங்களும் உண்டாக அருள் புரிந்த பிருது, ஏழ் கடல்களையும் உண்டாக்கிய சகரர் மற்றும் தேவலோகத்திலிருந்து– பூமியை வளம் நிறைந்த தாக்க– கங்கையை வரவழைத்த பகீரதன் ஆகியோரெல்லாம் தசரதனின் முன்னோர்கள். அவர்கள் அனைவரும் தேவாம்சம் பொருந்தியவர்கள். அத்தகைய தசரதனின் மைந்தர்களைப் பகைத்துக்கொண்டாய். பாற்கடலைக் கடைவதற்கு தன் தோளையே கொடுத்து உதவிய வாலியை ஒரே பாணத்தால் வதைத்தவர் இராமர்; பெரு மராமரங்கள் பலவற்றை ஒரே அம்பினால் சாய்த்தவர்; எமது அரக்கர் குலத் தோன்றல்களான கரன், விராதன், திரிகரன் நமது மாமன் மாரீசன், ஆகியோரையும் அழித்தவன். ஆகவே, எமது குலத்தின் பண்புகளும் கீர்த்தியும் செல்வமும் அழிந்துவிடாமலிருக்க, கற்பின் இருப்பிடமான சீதையை விடுவித்து இராமரிடம் சமாதானம் செய்து கொள்வதே ஒரே வழி!

இராமன் திருமாலின் அவதாரம்; முனிவர்களும் ஞானிகளும் செய்யும் யாகங்களுக்கு அசுரர்கள் இடையூறு செய்து, துன்புறுத்தி வருவதனால் இராமாவதாரம் எடுத்து வந்துள்ளார்!" என்றும் விபீடணன் கூறினான்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இராவணன் கடும் கோபங் கொண்டான். அவனுடைய இருபது கண்களும் விபீடணனைச் சுட்டுச் சாம்பராக்கி விடுவன போல் சிவந்து தீக்கக்கிக் கொண்டிருந்தன.

"திருமாலைப் பற்றியும் அவருடைய அவதாரமான இராமனைப் பற்றியும் பெரிதாகப் பேசுகின்றாயே! தேவர்களை அடிபணிய வைத்து, இந்திரனைச் சிறைபிடித்தபோதோ, வேறு பல சந்தர்ப்பங்களிலோ அந்த அவதாரம் என்ன செய்தது? வாலியிடம் நான் தோல்விகண்டது உண்மைதான்! அவன் முன் நின்று எவர் போரிட்டாலும், போரிடும் அவருடைய ஆற்றலில் பாதி வாலியிடம் போய்ச் சேர்ந்துவிடும் என்ற உண்மை தெரியாமையினால் நேருக்கு நேர் நின்று அவனுடன் பொருதினேன்; எனது வலிமையில் பாதி உடனடியாக அவனிடம் சென்றமையினால் தோல்வி காண நேர்ந்தது.

இராமனும் வாலியை எதற்காக மறைந்திருந்து தாக்கினான்? தன்னுடைய பலத்தில் பாதியை வாலிக்குத் தாரை வார்க்க அவன் விரும்பாததால்தான்! ஆகவே 'வாலியை வதைத்ததை எந்த வகையிலும் பாராட்ட முடியாது. வீண் கதைகளைக் கூறி மென்மேலும் என் கோபத்தைக் கிளறாதே!"

இராவணன் இவ்வாறு எச்சரித்ததையும் பொருட்படுத்தாமல் விபீடணன் தன் கருத்துக்களை மீண்டும் கூறலானான். அரக்கர் குலத்திலே தோன்றிய மாபெரும் வீரனான இரணியன், மும்மூர்த்திகளிடம் சகல ஆற்றல்களையும் பெற்ற ஐம்பூதங்களின் ஆதிக்கத்தையும் தன்னகத்தே அடக்கியது டன் சூரிய சந்திரர்களின் போக்கினையும் தன் விருப்பப்படி மாற்றி அமைத்து, தானே கடவுள் என்று மமதை கொண்டு அழிந்தொழிந்த கதையை எடுத்துக்கூறலானான் விபீடணன்.

**வேதம் கண்ணிய பொருளெலாம்**
**விரிஞனே ஈந்தான்;**
**போதம் கண்ணிய வரம் எலாம்**
**தரக் கொண்டு போந்தான்;**
**காதும் கண்ணுதல் மலர் அயன்**
**கடை முறை காணாப்**
**பூதம் கண்ணியவலி யெலாம்**
**ஒரு தனிப் பொறுத்தான்!**

(யுத்த காண்டம்–130)

**பொருள்:**

***இரணியனுக்கு வேதங்களின் உட்பொருளையெல்லாம் பிரம்மதேவனே கற்பித்தான். அதுமட்டுமல்லாமல் பிரம்மதேவனிடமே வேண்டிய வரங்களையெல்லாம் பெற்றுக் கொண்டான். சகலவற்றையும் அழிக்கும் வல்லமைபெற்ற சிவபிரான், காக்கும் கடவுளான திருமால், படைக்கும் பணிக்குரிய பிரம்மதேவன் ஆகிய மும்மூர்த்திகளின் செயல்களனைத்தையும் தானே எடுத்துக் கொண்டான். பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றின் வலிமைமிக்க செயற்பாடுகளையும் தானே கைக்கொண்டு விட்டான்.***

இரணியனைப் பற்றிய வரலாறை இராவணனுக்கு கூற முற்பட்ட விபீடணன், மேற்கண்டவாறு தான் கதையினை ஆரம்பித்ததாக கம்பர் பெருமான் கூறுகிறார்.

***

### இரணியாய நம

மகாபராக்கிரமசாலியான இரணியன் மும்மூர்த்திகளிடம் எல்லாவற்றையும் கற்றுணர்ந்து எண்ணற்ற வரங்களை அவர்களிடமே பெற்று, அவர்களை அடக்கிவிட்டு அவர்களுடைய கடமைகளையும் தானே ஏற்றுக்கொண்டான். அண்டங்களனைத்தும் அடக்கி ஆளும் வல்லமையைப் பெற்ற அவன், தானே கடவுள் என்றும் சகல சீவராசிகளும் தன்னையே வணங்க வேண்டும் என்றும் கட்டளையிட்டான்.

"சிவாய நம" என்று பிரார்த்திப்போரைச் சிறையிலிட்டு சித்திரவதை செய்தான். "ஓம் நமோ நாராயணா" என்று நாமாவளி பாடுவோரை நையப் புடைத்து நசித்துக் கொன்றான்.



"சகலமும் நானே!" என்ற மமதையினால் தேவருக்கும் முனிவர்களுக்கும் மானிடர்க்கும் இன்னும் பாதாள லோகவாசிகளுக்கும் எண்ணற்ற கொடுமைகளைப் புரிந்தான்.

### பிரஹலாதன்

இப்பேற்பட்ட இரணியனுக்கு ஒரு மகன் பிறந்தான். பிரஹலாதன் அவன் பெயர். குருகுலத்தில் சிறு பிள்ளையாகப் படிக்கும் போதே நாராயண மூர்த்தியையே நமஸ்கரித்து வந்தான். அவனுக்கு அறிவூட்டிய ஆசான்கள் "ஓம் இரணியாய நம" என்று ஓதும்படி கூறினால், "ஓம் நாராயணாய நம" என்று துதிக்கலானான். இதனால் இரணியனின் கோபத்துக்கு அஞ்சிய ஆசான்கள் பிரஹலாதனின் கூற்றை இரணியனிடம் போய் முறையிட்டார்கள். மகனை அழைத்து, 'குழந்தை

### இராஜகுமாரன்

தானே!' என்று பக்குவமாக– தனது பெயரையே கூறும்படி சொல்லிப் பார்த்தான். எத்தனையோ தரம் முயன்றும் முடியவில்லை. பிரஹலாதனை தன் வசப்படுத்த முடியாமல் தண்டனைகளையும் கொடுத்தான் இரணியன். ஆனால் பிரஹலாதனின் பிடிவாதத்தைத் தளர்த்த முடியவில்லை.

ஒரு மண்டபத்துக்கு பிரஹலாதனை அழைத்துச் சென்று, எவ்வளவோ ஆசை வார்த்தைகளையெல்லாம் சொல்லி, வகை வகையான தின்பண்டங்களையெல்லாம் கொடுத்து, ஒருதடவையாவது 'இரணியாய நம' என்று கூறும்படி கெஞ்சிக் கேட்டுப் பார்த்தான். ஆனால் பிரஹலாதனோ "நாராயணாய நம," என்றே கூறினான்.

இதனால் வெகுண்ட இரணியன் பிரஹலாதனை ஒரு தூணருகில் நிறுத்தி வைத்துக் கொண்டு, "உன் நாராயணன் எங்கேயடா இருக்கிறான்?" என்று கேட்டான். பிரஹலாதன், "என் தெய்வம் தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான்," என்றான், மழலை மொழியில். ஒரு பெரும் தூணைச் சுட்டிக்காட்டிய இரணியன், "இந்தத் தூணிலுமாடா இருப்பான்?" என்று எரிச்சலுடன் கேட்டான். பிரஹலாதன், "ஆமாம் எங்கும் நிறைந்த பரம்பொருள் இங்கேயும் தான் இருப்பான்!" என்றான்.

தனது கதாயுதத்தை ஓங்கி அத்தூணின் மீது இரணியன் அடித்தான். அப்போது அத்தூண் பிளந்து நரசிம்மமாக வெளிவந்த நாராயணன், இரணியனை வதம் செய்தார். இரணியனை ஒழித்துக் கட்டவே அவ்வாறு திருமால் நரசிம்மாவதாரம் எடுத்தார்.

இக்கதையை இராவணனிடம் விபீடணன் எடுத்துக் கூறினான்.

"விபீடணா! நீ எம் பகைவர்களைப் புகழ்ந்து பேசுகிறாய். உன் குலத்தையே இழிவு படுத்துகிறாய். உன் அண்ணன்– அரக்கர்குலத் தலைவனாகிய என்னைக் கேவலப்படுத்திவிட்டாய். என் எதிரிகளுடன் இணைந்து என்னை வீழ்த்திவிட்டு இந்த அரியணையில் ஏறி அமர்ந்து கொள்ள நீ கருதுகிறாய். உன்னால் இதனை அடைய முடியுமா? துரோகி!"

இவ்வாறு இராவணன் சிங்கம் போல் கர்ஜித்தான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 78**

**சரியானவிடை:– கும்பகர்ணன், விபீடணன்.**

1. எம். கரீமா சனூன்.
 இல 197/60 நூர் பள்ளிவீதி, புத்தளம்.
2. எஸ். சுபா.
 43, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.
3. ஜி. கஜதுர்க்கன்.
 41/3, கானல் வங்கி வீதி, களுபோவில.
4. க. ராஜேந்திரன்.
 இல 34, சமிட் வீதி, அட்டன்.
5. திரேசம்மா. புளுமண்டல் வீதி, கொட்டாஞ்சேனை தொடர்மாடி, கொழும்பு–13.

**போட்டி இல. 80** கேள்வி:– **இரணியனின் மகன் பெயர் என்ன?**

மே. 03 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி – இல.80, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# கவுடாவும் கவுண்டமணியும்

### காதிலை பூ கந்தசாமி

செ: (கவுண்டமணியைக் கண்டதும் குசியாகிப் பாடுகிறார்)
ஹலோ மிஸ்டர் கவுண்டமணி
கண்டுதான் ரொம்ப நாளாச்சி
கவுடாதான் கவுந்து போயாச்சி
சீதாராம் கேசரி பெரியாளு.

கவு: ஏண்டா நாயே! என் வயிற்றெரிச்சலை கிளப்பாதேடா, ஏதோ நாமதான் மந்திரியாகாமல் போனாலும், கிட்டத்தட்ட நம்ம பெயரில ஒரு பிரதம மந்திரியாவது இருக்காரே என்னு பெருமையா இருந்திச்சு. இப்போ அதுவும் போச்சேடா. உனக்கு பாட்டுக் கேட்குதா, பாட்டு.

செ: முன்னாள் பிரதமரோட ஒப்பிட்டா என் முன்னால் இருக்கிற நீங்க புத்திசாலியண்ணே.

கவு: அப்படியா சொல்லுறே? எங்கே உன் விளக்கத்தை அவிழ்த்துவிடு பார்க்கலாம்.

செ: அவருபேரிலையே கவுடா கவுடா எண்ணு சொல்லிக்கிட்டிருந்தாரு கவிழ்த்துட்டாங்க. நீங்க கவுண்டமணியெண்ணு பேரை வைச்சுட்டீங்க. இனி கவுக்க வேண்டிய அவசியமே இல்லையெண்ணு யாருமே உங்களை கவிழ்க்க வர மாட்டாங்க. எப்படியண்ணே நம்ம கண்டுபிடிப்பு? (சட்டைக் கொலரை தூக்கிவிட்டுக்கொள்கிறார்)

கவு: மவனே! நீ பெரியாளுடா!

செ: ஏதோ இப்பெண்ணாலும் புரிஞ்சுகிட்டீங்களே டாங்ஸ். ரொம்ப ரொம்ப டாங்ஸ்!

கவு: கொஞ்சம் விட்டா டான்ஸே ஆடிப் போடுவே நீ, அது டாங்ஸ் இல்லேடா தாங்ஸ்.

செ: ஏதோ ஒண்ணு. அதை விடுங்கண்ணே, உங்க அறிவுக்கு நீங்ககூட ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் பிரதம மந்திரியாகலாமண்ணே!

கவு: ஆசையை கிளறாதேடா. அதெல்லாம் ரொம்ப கஷ்டமான காரியமடா.

செ: அண்ணே நீங்க ரொம்ப மெதுவாகச் சிந்திக்கிறீங்க! இப்பெல்லாம் எலக்ஷனிலை நிக்காமலேயே பிரதமராகலாம். கட்சியை வளர்க்காமலேயே பிரதமராகலாம். கட்சியை வளர்க்காமலேயே ஆட்சியைப் பிடிக்கலாம். ஒரு நாலு கட்சிக்காரங்க தோள் கொடுத்தா போதும், அப்படியே தாவித்தாவிப் போய் நாற்காலியிலே அமர்ந்திடலாம். டேக் இட் ஈஸி பொலிஸியண்ணே.

கவு: மவனே! அதெல்லாம் நமக்கும் தெரியுமடா. முன்னே நேரு மாமா, இந்திரா அம்மா எல்லாம் இருந்தாங்க. அவங்க பேரைச் சொன்னா இமயம் முதல் கன்னியாகுமரிவரையும் சின்னப் பசங்களுக்குக்கூட தெரியுமடா. இப்போ டில்லியிலே இருக்கிறவங்களுக்கே கவுடா யாருண்ணு தெரியாது.

செ: ஜனநாயகமென்னா அப்படித்தான் இருக்கும். கண்டுக்காதீங்க.

கவு: ஏண்டா சட்டித் தலையா, ஜனநாயகமென்னா யார் வேணுமெண்ணாலும் நம்மை ஏமாத்தலாம் எண்ணு அர்த்தமாடா?

செ: ஏனண்ணே, ஏமாத்துறதுக்கும் ஏதாவது தகுதி வேணுமாண்ணே. நம்ம பொலிசி என்ன தெரியுமாண்ணே?

கவு: ஐயோ.. இதப் பாருடா, இவனும் பொலிசி சொல்லுறாண்டா டோய், சரிங்க சொல்லுங்க.

செ: யாரு பதவிக்கு வந்தாலும் எங்களை ஏமாத்திக்கிட்டே இருக்காங்க, நாங்க ஏமாந்துகிட்டே இருக்கப்போறோம், அவங்க யார் வந்தா நமக்கென்ன? யாரு போனா நமக்கென்ன?

கவு: சரிடா, ஏமாத்துறதுக்கும் ஒரு திறமை வேணுமில்லே.

செ: அண்ணே! மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கணுமா அணே, புலிக் குட்டிக்கு பாயச் சொல்லிக்கொடுக்கணுமா அண்ணே, தவளைக் குஞ்சுக்கு கத்தக் கற்றுக் கொடுக்கணுமா அண்ணே, முயல் குட்டிக்கு ஓடப் பயிற்சி கொடுக்கணுமா அண்ணே, அதே மாதிரி அரசியல்வாதிகளுக்கு சாக்கடையிலே விளையாட டிறெயினிங் கொடுக்கணுமா அண்ணே? நம்ம ஏமாத்துறது எப்பிடியிண்ணு பாடம் நடத்தணுமா அண்ணே?

கவு: புல்லரிக்குதடா! இத்தனை தத்துவம் தெரியுதே, நீ ஏன் தலைவராகக் கூடாது?

செ: இப்பெல்லாம் எந்தத் தத்துவமே தெரியாதவங்கதான் தலைவராகுறாங்க. யோசிச்சுப் பாருங்கண்ணே, எலக்ஷனிலை ஒழுங்கா வாக்குப்போட வழி கண்டுபிடிச்சாரு சேஷன், அவரு பிரதமராக முடிஞ்சுதா? எலக்ஷினிலை நிக்காமலேயே பிரதமராகினாரு கவுடா.

கவு: ஏண்டா சேஷன் மாதிரி ஆளுங்களுக்கு சான்ஸ் கொடுத்தா என்ன? கொடுத்துப் பார்க்கலாமேடா.

செ: கொடுக்க மாட்டாங்க. எல்லா அரசியல் வாதியும் ஒண்ணா சேர்ந்து ஒழிச்சுக் கட்டிருவாங்க. அவரு வந்தா இவங்க பிழைப்பு கெட்டுடுமே. எலக்ஷன் கமிஷனரா இருந்தப்பவே அவர் பண்ணுற லொள்ளு தாங்க முடியல்லே எண்ணு தலையிலே அடிச்சுக்கிட்டாங்க. பிரதமரானா என்னாகும்? விடுவாங்களா?

கவு: அரசியல்வாதிகள்தான் தங்களுக்குள்ளே அடிபட்டுக் கிட்டிருங்காங்களே. எப்படி ஒண்ணா சேருவாங்க?

செ: அப்பிடிப் போடு அரிவாளை, அண்ணே, திருடங்க எல்லோரும் தனித் தனியாத்தான் இருப்பாங்க. ஒருத்தரை ஒருத்தரு நம்பமாட்டாங்க. ஆனால் திருட்டுக்கே இனிமே வழியில்லாமல் போகும் எண்ணு தெரிஞ்சா எல்லாத் திருடரும் ஒண்ணு சேர்ந்திடுவாங்க. அதுமாதிரித்தான் அரசியல்வாதிகளும். தங்கள் பிழைப்புக்கு ஆபத்து எண்ணா தற்காலிகமாக ஒன்று சேர்ந்துடுவாங்க! எதிரி ஒழிஞ்ச பின்னாடி மறுபடியும் தங்களுக்குள் அடிபட்டுக் கொள்ளுவாங்க.

கவு: அப்படியெண்ணா அரசியல்வாதிகளுக்கிடையிலே ஒரு அண்டர்ஸ்டாண்டிங் இருந்துகிட்டே இருக்கும் எண்ணுறே?

செ: தட்ஸ் ரைட் மிஸ்டர் கவுண்டபெல்! நீயும் கள்ளன், நானும் கள்ளன் நமக்குள்ளே நல்லவன் பெரியவன் முளைக்கவிடப் படாது எண்ணு உறுதியா இருப்பாங்க.

கவு: அப்பிடியெண்ணா ஏண்டா ஒருத்தரை ஒருத்தர் ஊழலு கூழலு எண்ணு குற்றம் சாட்டுறாங்க.

செ: அங்கேதான் அண்ணே இருக்கு விஷயம். கமிஷன் போடுவாங்க. கமிஷன் அறிக்கையை வெளியில விடுவாங்க. ஆனா ஆக்ஷன் மட்டும் எடுக்கமாட்டாங்க. அந்தம்மாவை பிடிச்சு உள்ளே போட்டாங்க. சொத்துக் கணக்கெல்லாம் எடுத்தாங்க. இருந்து பாருங்க, கடைசிக் கட்டத்தை 'டச்' பண்ணவே மாட்டாங்க.

கவு: ஏண்டா 'டச்' பண்ணமாட்டாங்க.

செ: நேத்து அவங்க செய்ததைத்தானே



இன்னைக்கு இவங்க செய்யுறாங்க. அதனாலே நாளைக்கு இவங்க அவங்க கையில மாட்டாலமில்லே, அதுதான் பயமண்ணே. ஐ மீன் மடியிலே கனம், மனதிலே பயம். எப்படியண்ணே நம்ம உதாரணம்.

கவு: சூப்பருடா மவனே. அடுத்த பிரதமர் யாருடா?

செ: யாருண்ணு தெரியாது. யாராயிருந்தாலும் அடுத்து பிரதமராகுறவருக்கு நாலு குணம் இருக்கணும்.

கவு: அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பாங்களே அதுவா?

செ: இப்பத்தாணண்ணே பொயின்டிலை அடிச்சிருக்கீங்க.

கவு: அதெல்லாம் பொம்பிளைங்க சமாச்சாரம் எண்ணுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீயென்ன பிரதமர் சமாச்சாரம் எண்ணு சொல்றே?

செ: அண்ணே! மகாபாரதத்திலே பாஞ்சாலி ஐந்து பேருக்கு மனைவியா இருந்தாங்க. அவங்ககிட்டேயும் நாலு குணமும் இருந்திச்சு. அதுமாதிரி நவ பாரதத்திலே பிரதமரா வாறவரும் நாலு ஐந்து கட்சிகளை அனுசரித்துப் போகணும். நாலு குணத்திலை ஒண்ணு குறைஞ்சாலும் கவிழ்த்துடுவாங்க!

கவு: மவனே! இன்னைக்குத்தானடா நீ ஒரு அறிவுக்கொழுந்து எண்ணு றதை நிரூபிச்சிருக்கே. அதனாலே உனக்கு ஏதாவது ஆசையிருந்தா கேளுடா. நிறைவேத்தி வைக்குறேன்.

செ: அண்ணே கேட்டா கோபிக்கமாட்டீங்களே?

கவு: சும்மா கேளுடா, வாக்கு தவறும் வழக்கம் எங்க வம்சத்திலேயே கிடையாது!

செ: இன்னைக்கு மட்டும் நான் உங்களை ஒரே ஒரு உதை உதைக்கணும், நீங்க ஓடணும்!

(கவுண்டமணி திகைத்துப்போய் முறைக்க, செந்தில் எட்டி உதைக்கிறார். கவுண்டர் மண் கவ்விக்கொண்டிருக்கிறார்)



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/43/NEWS/97)

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
580230
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# நரித் தூக்கம்





ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


➡ படப்பிடிப்பு: ஜோஹானெஸ் லத்தி, ஃபின்லாந்து நாட்டவர். இவர் படம்பிடித்த விதம் வித்தியாசமானது. படத்திலுள்ளது செந்நரி. ஃபின்லாந்து நாட்டின் தெற்குப் பகுதிக் காட்டில் வசிக்கின்றது. படப்பிடிப்பாளர் ஒரு நாள் காலை அங்கு சென்றபோது இந்த நரியைக் கண்டிருக்கின்றார். நரி கலவரமடைந்தது. போஸ் கொடுக்காமல் ஓடிவிட்டது.

தொடர்ந்து மறுநாள், அதற்கு அடுத்த நாள்... இவ்வாறு பல நாள் அங்கு சென்றார். பழக்கமாகிவிட்ட நரி இவரது வரவை வரவேற்றது. அழகாக படுத்திருந்து 'போஸ்' கொடுத்ததாம். இதுதான் தருணம் என்று லத்தி, 'லபக்' கென்று கமராவில் பதித்துவிட்டார். பாராட்டும் பெற்றார். காகத்தை ஏமாற்றிய நரியார் கதை கேள்விப் பட்டிருக்கிறோம். நரியாரிடமே வேலை வாங்கி விட்டாரே கமராக் காரர்!

இங்கே பிரசுரமாகியுள்ள மூன்று படங்களும் 'வன உயிரியல் படப்பிடிப்பாளர்' போட்டியில் பரிசு பெற்ற சாதனைப் படங்கள். இப் புகைப்படங்களை நாம் ஒரு நொடியில் கண்களால் சாப்பிட்டு விட்டு போய்விடுவோம். ஆனால் இவற்றை தத்ரூபமாக எடுக்க புகைப்படப்பிடிப் பாளர்கள் எத்தனை கஷ்டப் பட்டிருப்பார்கள்?

⬇ படப்பிடிப்பு: நிக் கார்புர். பிரித்தானியர். வட இந்தியாவிலுள்ளது ஜெய்ப்பூர் என்னுமிடம். அங்குள்ள ஆம்பெர் கோட்டையில் செறிந்து வாழ்கின்றன 'ஹனுமன் லங்கூர்' குரங்குகள். காவியத்தில் வரும் அனுமனின் தோற்றத்தை ஒத்ததால் இந்தப் பெயர் (பார்வைக்கும் அப்படித்தான்). உல்லாசப் பயணிகளுக்கு மகிழ்ச்சி தருவன என்றாலும் உணவுப் பொட்டலத்தைப் பிரித்ததும் ஓடி வந்து 'எனக்கும் தா' என்று பிடிவாதம் பிடிக்குமாம்.


படத்திலுள்ளது பெண்குரங்கு. காலை வேளையில் சூரியனைப்பார்த்து சூரியக் குளிப்புச் செய்கிறது. அது குந்தியிருப்பதே ஒரு ஸ்டைலுதான் பாருங்களேன்.

தருவது வீரகேசரி

# இருவர்



# ரிலாக்ஸ்



வாரமலர் தினமுரசு

↑ படப்பிடிப்பு: லூயிஸ் கிளவுடியோ மறிகோ. (வாய்க்குள் நுழையாத பெயர்) இந்தக் காட்சியை படம்பிடித்துப் பாராட்டுப் பெற்று, மனதில் நுழைந்து இடம்பிடித்துக் கொண்டார். ஆண் ஒட்டகச் சிவிங்கிகள் இரண்டும் மோதிக் கொள்கின்றன. மிக அரிதான காட்சி இது! புதியதாக ஒரு சிவிங்கி வேறொரு பகுதிக்குள் நுழைந்துவிட்டால் அப்பகுதி ஆண் சிவிங்கியிடம் செமத்தியாக வாங்கிக்கட்டிக் கொள்ள வேண்டியதுதான். (ராக்கிங்கும் உண்டா தெரியவில்லை) அங்கும் ஏரியா தாதாக்கள் ஆட்சிதான். ■


⬇ துப்பாக்கியுடன் நின்று போஸ் கொடுக்கிறார் பாருங்கள். போஸ் கொடுக்க வேண்டிய காரியம்தான். சும்மா தெருவிலே போட்டு விற்றால்கூட 6-7 பில்லியன் அமெரிக்க டொலர்கள்வரை சம்பாதிக்கலாம். (நம்மூர்ப் பெறுமதிப்படி 600-700 கோடி ரூபாய்கள்) அத்தனையும் போதை வஸ்து சமாச்சாரம். எடை அதிகமில்லை 20 தொன்மட்டும்தான். விலைதான் அதிகம்.

பெட்டிபெட்டியாக கட்டி வெளிநாட்டுக்கு கடத்த தயாராக இருந்தது. எப்படியோ தகவல் கசிய போதை வஸ்து தடுப்புப் பிரிவினரால் சுற்றிவளைத்து மடக்கப்பட்டது. எல்லாமே உயர்தர போதைப் பவுடர். 'கொக்கெய்ன்' (வைற்பவுடர்) என அழைக்கப்படும் போதை வஸ்து. உட்கொள்பவரை மிக விரைவில் நாசம் பண்ணிவிடும். இவை மாட்டுப்பட்டது அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்செல்ஸ் நகரில்.

1989 செப்டம்பர் 28ல் இக் கடத்தல் பிடிபட்டது. உலகிலேயே இதுவரை காலத்தில் பிடிபட்ட மிகப் பெரிய போதை வஸ்துக் கடத்தல் இதுதான். 30 இலட்சம் மக்களை மூன்றுமாதங்கள் முழுப் போதையில் வைத்திருக்க போதுமானவையாம்! அடேங்கப்பா!

# மரண வியாபாரம்





# சீறும் சிங்கம்

⬅ இங்கிலாந்து சுற்றுப் பய ணத்தை இடை யில் முறித்துக் கொண்டு சித்து திரும்பியபோது அத்தோடு அவ ரது கிரிக்கெட் வாழ்க்கையும் முடிந்து விட்ட தாகவே கருதப் பட்டது. போதாக் குறைக்கு அன் றைய கப்டன் அஸாருதீன் மீதும் குற்றச்சாட்டுக்களை அடுக்கி விரிசலை அதி கப்படுத்தினார் சித்து.

ஆனாலும் இந்திய அணியில் அந்த பஞ்சாப் சிங்கத்தின் வெற்றிடத்தை திரப்ப வேறு ஆளே கிடைக்க வில்லை. அதனால் மறுபடி அழைத்திருக்கிறார்கள்.

சிங்கம் ஏமாற்றவில்லை. மேற்க்கிந்திய தீவு அணிக் கெதிரான டெஸ்ட் போட் டியில் இரட்டை சதம் அடித்து தூள் கிளப்பி யிருக்கிறார். எனினும் மிக மெதுவாகத்தான் 200ஐ எட்ட முடிந் தது. 488 பந்துகளில் 671 நிமிடம் விளை யாடித்தான் இரட் டைச் சதத்தை எடுத்தார்.

சித்துவுக்கு மற்றொரு பெருமையும் சேர்ந்திருக்கிறது. மேற்க்கிந்திய தீவுக்கெதிராக இரட்டைச் சரம் அடித்த மூன்றாவது இந்திய வீரர் சித்துதான். முன்னர் திலிப் தேசாய் 218, சுனில் கவாஸ்கர் 220 ஆகியோரே இரட்டைச் சதம் போட்டிருந்தனர். இப்போது சித்து 201.

1983ல் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நுழைந்தார். முதல் டெஸ்ட்டிலேயே சதம் அடித்தார். அதில் 4 சிக்ஸர்களும் அடங்கும். சித்துவுக்கு 'சிக்ஸர் சித்து' என்றொரு பட்டமும் உண்டு.

சித்து கோபக்காரர். ஒரு கொலைக் குற்றச்சாட்டும் முன்னர் சுமத்தப்பட்டது. ஆனாலும் சித்துவின் கோபம் பந்துகள்மீது திரும்பும்போது அது அணிக்கு இலாபம்தான்.

சித்துமீது சுமத்தப்படும் பரவலான குற்றச்சாட்டு. அவர் 'அடிக்கடி காயமடைந்து ஓய்வில் இருந்துவிடுவார்' என்பது. அக் குற்றச்சாட்டுப் பற்றி சித்து சொல்கிறார்: "எனக்கு அடிக்கடி காயம் ஏற்படுவது உண்மை, அதற்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?"

சித்துவின் முதல் டெஸ்ட் போட்டியும் மேற்கிந்திய அணியுடன்தான். இப்போது இரட்டைச் சதமும் மேற்கிந்திய அணியுடன்தான்.

இந்திய அணியின் தூண்களில் ஒருவராக இன்னும் பல காலம் நீடிப்பார் சித்து. ■



படிப்பகம்